
# தமிழரசு


1-5-1988 ரூ. 1







சென்னை கோட்டை ரயில் நிலையத்தின் அருகே ரூ. 1.72 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள முத்துசாமி சாலை மேம்பாலத்தை 14-4-88 அன்று மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் திறந்து வைத்தார்.



# வறுமையை ஒழிப்போம்!

—மாண்புமிகு இந்தியப் பிரதமர்

## திரு ராஜீவ் காந்தி



"வறுமையையும், வேலை இல்லாத் திண்டாட்டத்தையும் ஒழிப்பதுதான் நமது குறிக்கோள். நாம் முதலீடு செய்யும் பணத்திற்கு ஏற்பப் பலன் கிடைக்க, ஐந்தாண்டுத் திட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டி இருக்கிறது.

''டெல்லியில் இருந்து கொண்டு கற்பனை செய்யாமல், மாவட்ட அளவில் திட்டங்களைத் தயாரித்து அவைகளை ஒருங்கிணைக்கும்படி சொல்லி இருக்கிறேன். அந்த வகையில் இப்போதே வேளாண்மைத் துறையில் சில சிறப்புத் திட்டங்களை மாவட்ட அளவில் ஆய்வு செய்து வருகிறோம். ஆகவே, 8-வது ஐந்தாண்டுத் திட்டம் உண்மையிலேயே கிராமநிலை செழிப்படைவதற்கு ஏற்ற திட்டமாக அமைக்கப்படும்.

தொழிற்சாலைகளையும் மீண்டும் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் ஆயிரக்கணக்கில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். அத்துடன் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு மனைப்பட்டா வழங்கப்படும். சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரக் கூடிய ''தெலுங்கு கங்கைத் திட்டம்'' விரைவில் நிறைவேற்ற ஆவன செய்வேன். காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்கப் பாடுபடுவேன்.

''பத்தாண்டுகளாக 'என்னுடைய தண்ணீர்... உன்னுடைய தண்ணீர்...' என்று தகராறு செய்த காலத்தில் அந்தத் தண்ணீர் எல்லாம் கடலில் போய் விழுந்து விட்டது. அதற்காக முதலமைச்சர்கள் மாநாட்டில் ''இனிமேல் தண்ணீர் எல்லாம் தேசிய சொத்து என்று கூறிவிட்டேன்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019
விபவ - சித்திரை 19

மலர்: 18 1-5-1988 இதழ் : 21


''வறுமை ஒழிப்புக்காக இந்த ஆண்டு தமிழக அரசின் திட்டத்தில் பல திட்டங்களைக் கூறி இருக்கிறோம். இந்த ஆண்டு தமிழக அரசுத் திட்டத்தில் ரூ.1500 கோடிக்கான திட்டங்களை அறிவித்து இருக்கிறோம். அதில் ''காமராஜர் புதிய ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டம்'' என்ற பெயரில் ஆதிதிராவிடர்களுக்குத் தீப்பிடிக்காத வீடு கட்ட 27 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம்.

''25 ஆயிரம் கிராமப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப் படும். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி தேக்கம் அடைந்து இருப்பதை மாற்றி, மீண்டும் புது வேகத்துடன் தொழிற்சாலைகள் தொடங்க முன்னுரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறது. நலிந்த

அதை அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் நன்மைக்காக இனிமேல் தண்ணீரை எந்த அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்த முடியுமோ, அந்த அளவுக்குப் பயன்படுத்தப்படும்''

''சோஷலிசக் கொள்கையை நாம் பயன்படுத்தி வருகிறோம். வறுமையை ஒழிப்பதற்காக அதைச் செய்கிறோம். வறுமைக்கு எதிராகவும், வேலை இல்லாத் திண்டாட்டத்துக்கு எதிராகவும் நாம் நடத்தி வரும் போராட்டம், நடக்க முடியாத ஒன்று அல்ல! செயலில் நிறைவேற்றக் கூடியதுதான். ஆகவே அதற்கான திட்டங்களை அரசு வகுக்கும்''.

(சென்னையில் 24-4-88இல் ஆற்றிய உரையிலிருந்து...)

அட்டையில்...

சென்னைக்கு 22-4-88 அன்று வருகை புரிந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களை மேதகு ஆளுநர் மற்றும் ஆளுநரின் ஆலோசகர்கள் வரவேற்றல்.

# நாட்டுப்பற்றைப் புதுப்பித்துக் கொள்ள உதவும் நன்னாள்!

**மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்**

## திரு சங்கர்தயாள் சர்மா

### "அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட்டால் இந்தியா வளர்ச்சியும் வளமும் அடைவது உறுதி"

இன்று தமிழர்களுக்குப் புத்தாண்டு தினம். அதற்காக என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பஞ்சாபில் இந்த நாள் 'வைசாகி' என கொண்டாடப்படுகிறது. சுதந்திரப் போராட்ட காலத்தில் நடைபெற்ற 'ஜாலியன் வாலாபாக்' படுகொலையின் நினைவு தினமும் இதுதான்.

இந்திய வரலாற்றில் மிக முக்கியமான இந்த நாளில்தான் 58 ஆண்டுகளுக்கு முன் நாட்டு விடுதலையை நோக்கமாகக் கொண்டு உப்புச் சத்தியாக்கிரகப் புனித யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பாதை தேசத்திற்காக, தியாகத்தாலும், மனிதாபிமானத்தாலும் ஒளிபெற்று விளங்கியது.

திருச்சியிலிருந்து வேதாரணியத்திற்கு நடந்த அந்தப் பாதயாத்திரையின் ஒவ்வொரு அடியும் நமது சுதந்திர உணர்வையும், மனிதாபிமானத்தையும், நாட்டின் உண்மையான உணர்வின்மீது கொண்ட ஈடுபாட்டையும் எடுத்துக்காட்டுவது போல் இருந்தது.

இந்தியாவுக்கு மட்டுமின்றி, உலகத்தவர் அனைவருக்கும் எப்போதும் ஏற்புடைய இலட்சியங்களைப் பாதுகாக்கும் அணுகுமுறையாக இந்தப் பயணம் விளங்குகிறது.

வலிமை மிக்க தேசிய சிந்தனை, மதச் சார்பின்மை, ஜனநாயக சோஷலிசம் ஆகிய இலட்சியங்களை வெளிப்படுத்துவதாகவே நமது விடுதலைப் போராட்டம் இருந்து வந்தது. அந்தச் சுதந்திரப் போராட்டத்தை நாட்டின் இளைஞர்கள்தான் முன்னின்று நடத்தினர். தேச விடுதலைக்காகப் போராட மகாத்மா காந்தியடிகள் அழைப்பு விடுத்ததும், இளைஞர்கள்தான் முனைப்புடன் ஈடுபட்டு போராட்ட இயக்கத்திற்கு உயிரூட்டும் சக்திகளாக விளங்கினர்.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் காணப்பட்ட உணர்வு, அதன் பரபரப்பு, மின் சக்தி போல வியாபித்திருந்தது இன்று என் நினைவுக்கு வருகிறது. அந்த நாட்களின் உணர்வுகள் இந்தப் பாதயாத்திரையின்போதும் ஏற்படும் என்று நம்புகிறேன்.

நமது நாட்டுச் சரித்திரத்தில் இடம் பெற்ற அந்த மாபெரும் இயக்கத்தைப் போல் இன்றைய இளைஞர்களுக்கு மீண்டும் பங்கேற்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

மகாத்மா காந்தியடிகள் தண்டியில் துவக்கி வைத்த சத்தியாக்கிரக உணர்வு வேதாரணியத்தில் பிரதிபலிக்கச் செய்தது.

மகாத்மாவும், இராஜாஜியும் அந்த விடுதலை உணர்வை ஊட்டி வளர்த்து வழி நடத்தினர்.

உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது **முள்ளும், நெருஞ்சியும்** சுதந்திர வேட்கையைத் தடுக்க முடியாது என்று இராஜாஜி அன்று இந்த உணர்வுக்குத் தடையாயிருந்த ஒரு கலெக்டரைப் பார்த்துக் கூறினார்.

அந்தக் கலெக்டர் நினைத்தார், தெற்கில் அமைதி நிலவிவரும் என்று ஆனால் தென்னிந்தியச் சகோதரர்கள் கலெக்டரின் கணிப்பைத் தவறு என்று நிரூபித்தனர். வலிமை மிக்க பிரிட்டிஷ் அரசு ஏற்படுத்திய தடைகளைத் தகர்த்து தேசிய உணர்வு வெற்றி பெற்றது.

மகாத்மா காந்தியும், இராஜாஜியும் காட்டிய வழியில் விடுதலைப் பயணம் மேற்கொண்ட பாரதப் புதல்வர்களை நினைவு கொள்வதே இவ்விழா.

தண்டி, வேதாரணியம் இவை அவர்கள் பாதம் பட்டுப் புனிதமானது. அது தேசிய ஒற்றுமை, வளர்ச்சி போன்ற புனிதமான குறிக்கோளின் நினைவுச் சின்னமாகத் திகழ்கிறது.

அவர்கள் எடுத்த உப்பு சாதாரண உப்பு அல்ல. சுதந்திர உணர்வின் வெளிப்பாடு அது. அவர்கள் தொடங்கிய போராட்டம் நாட்டில் பெரும் மாறுதலை உருவாக்கும் வரை தொடர்ந்து நடைபெறும். மதச்சார்பற்ற, ஜனநாயக, சோஷலிச அமைப்பை உருவாக்கவும், ஏழை எளிய மக்களை வளம்பெறச் செய்யவும் அந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

கடந்த மார்ச் 12ஆம் தேதி நடைபெற்ற தண்டி விழாவின் போது பிரதமர் அவர்கள் உரையாற்றும்போது, "மகாத்மா எந்த நோக்கத்திற்காகத் தண்டி யாத்திரையை நடத்தினாரோ, அதே நோக்கங்களை நாம் இன்னும் நிறைவேற்ற வேண்டி உள்ளது. ஏழைகள், இயலாதவர்கள், ஊனமுற்றோர் என எல்லாத்தரப்பு மக்களுக்கும் சுதந்திரத்தின் முழுமையை நிலைக்கச் செய்வோம் என்ற இலட்சியத்துடனேயே மீண்டும் தண்டி யாத்திரையைத் துவக்கி வைக்கிறேன்" என்று கூறினார்.

நமது சுதந்திரப் போராட்டத்தின் மாபெரும் வழிகாட்டிகள் நமக்குப்பாதை அமைத்துத்தந்தார்கள். நமது தேசிய ஒற்றுமையையும், பொறுப்புணர்ச்சியையும், தாய்நாட்டுப்பற்றையும் ஈடுபாட்டையும் புதுப்பித்துக்கொள்ளும் நாள் இது. அனைவரும்ஒன்றுபட்டுச் செயல்பட்டால் இந்தியா வளர்ச்சியும் வளமும் அடைவது உறுதி.

தேசிய ஒருமைப்பாடும், மனிதாபிமானமும்தான் நாட்டு முன்னேற்றத்திற்குச் சிறந்தது, வலிமை அளிக்கக்கூடியது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒன்றுபட்டு இருந்த நாம் அந்த ஒருமைப்பாட்டைத் தொடர்ந்து பின்பற்றுவோம்.

தேசிய ஒருமைப்பாட்டுக்காக ஒன்றுபட்டுச் செயல்படுவோம். சுதந்திரப்போராட்டத் தியாகிகளின் கனவுகளை-கொள்கைகளை-உணர்வுகளை நிறைவேற்றுவோம் என்று இன்று உறுதி எடுத்துக் கொள்வோம்.

எனது தேச மக்களே! இந்தச் செய்தியைப் பரப்புங்கள். அனைவரிடமும் தேச ஒருமைப்பாடுபற்றி எடுத்துக்கூறுங்கள். இந்ததேசத்தின் பார்வை உங்கள்மீது இருக்கிறது.

ஜெய்ஹிந்த்

[உப்புச் சத்தியாக்கிரக நினைவு யாத்திரையைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து— 13.4.88]

# உப்புச் சத்தியாக்கிரக நினைவைப் போற்றும் புனிதப் பயணம்

**இந்திய நாட்டின் விடுதலைப் போருக்கு முன்னணியாக அமைந்த பெருமை உப்புச் சத்தியாக்கிரகத்திற்கு உண்டு.**

**1930-ஆம் ஆண்டில் ராஜாஜி தலைமையில் வேதாரணியத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரக வீர வரலாற்றை நினைவுகூரும் வகையில் 13-4-88 அன்று திருச்சியிலிருந்து வேதாரணியம் நோக்கிப் புனிதப் பயணக்குழு புறப்பட்டுச் சென்றது. நினைத்தாலே மெய்சிலிர்க்கும் கடந்த கால வரலாறு, மீண்டும் நடத்திக் காட்டப்பட்ட செய்தியை இந்தக் கட்டுரை விளக்குகிறது.**

இந்திய விடுதலையின் நாற்பதாவது ஆண்டுவிழா, பண்டித ஜவகர்லால் நேரு நூற்றாண்டு விழா, ஆகியவற்றைக் கொண்டாடும் வகையில், மத்திய அரசு தேசிய செயல்பாட்டுக் குழுவினுடன் இணைந்து தமிழ்நாடு அரசு வரலாற்றுச்சிறப்புமிக்க வேதாரணியம் உப்பு யாத்திரையை மீண்டும் நடத்திக் காட்டியது.

திருச்சியில் சுதந்திரப் போராட்ட வீரர் டாக்டர்டி.எஸ்.எஸ்.இராஜன் இல்லத்திற்கு எதிரே உப்புச் சத்தியாக்கிரக நினைவுத் தூண் உள்ளது. 1988 ஏப்ரல் 13 அன்று அதிகாலை 5 மணிக்கு மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் உப்புச் சத்தியாக்கிரக நினைவுத் தூணுக்கு மலர்களால் அஞ்சலி செலுத்திவிட்டு, வேதாரணியம் உப்பு யாத்திரையைத் தொடங்கி வைத்தார்.

கதர்வேட்டியும், கதர் ஜிப்பாவும், கதர்க் குல்லாயும் அணிந்திருந்த வீரர்கள் தமது நடைப்பயணத்தைத் துவக்கினர்.


இதே இடத்தில், இதே நாளில் தான் கடந்த 58 ஆண்டுகளுக்கு முன்பு மூதறிஞர் இராஜாஜி 100 தொண்டர்களுடன் வேதாரணிய உப்புச் சத்தியாக்கிரக யாத்திரையைத் துவக்கினார்.

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள், மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., தலைவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஊர்வலமாக நடந்து 2 பர்லாங் தூரத்திலிருந்த, வழி அனுப்புவிழா நடைபெற்ற இராணுவ மைதானத்திற்கு வந்து சேர்ந்தனர்.

இந்த மைதானத்தில் முதல்நாள் இரவு முதல் அண்ணல் காந்தி அடிகளுக்கு மிகவும் பிடித்தமான பழமைப் பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவன்று காலையில் ஷேக் சின்னமௌலானா அவர்களின் நாதசுர இசை நிகழ்ச்சியும், தொடர்ந்து சூலமங்கலம் சகோதரிகள், சேலம் ஜெயலட்சுமி, தீபன் சக்ரவர்த்தி, டி.எஸ்.மகராஜன் ஆகியோரின் பஜன் பாடல்கள் நிகழ்ச்சியும் நடைபெற்றன.

மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையின் முன் இருபுறமும் 500க்கு மேற்பட்ட பெண்கள் வரிசையாக அமர்ந்து ராட்டையில் நூல் நூற்றுக் கொண்டிருந்தனர். மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் விழா மேடைக்குச் செல்லுமுன், அந்தப் பகுதிக்குச் சென்று அவர்களைச் சந்தித்து தமது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.



**டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் வீட்டிற்கு எதிரே (15.8.73 ல்) அமைக்கப்பட்டுள்ள வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக நினைவுத் தூண்.**

விழாவிற்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமை ஏற்று தமிழில் உரையாற்றியபோது குறிப்பிட்டதாவது:

"தமிழ்ப் புத்தாண்டுத் தினத்தில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"58 ஆண்டுகளுக்கு முன்பு இதே புனித நாளில் இதே மண்ணில் ஒரு வரலாறு உருவாக்கப்பட்டது. அந்த வரலாற்றைப் படைத்த பெரியோர்களுக்கு வீரவணக்கம் செலுத்த நாம் இன்று கூடி இருக்கிறோம்.

"நமது அஞ்சலியை மகாத்மா காந்திஜிக்கும், இராஜாஜிக்கும் பெரியோர்களுக்கும் செலுத்திக் கொள்வோம்.

"சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்று இன்று நம்மிடையே வாழும் பெரியோர்களுக்கு வணக்கம் தெரிவிக்கும் வகையில், பாரதியார் பாடலின் இரண்டு வரிகளை இங்கு சொல்லி வரவேற்கிறேன்.

"வாழிய செந்தமிழ்!<br>
வாழ்க நற்றமிழர்!<br>
வாழிய பாரத மணித்திருநாடு!<br>
வாழிய வாழியவே!"

மிக எளிமையாக அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில், 1930ஆம் ஆண்டு நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட தியாகிகள் திரு ஏ.என். சிவராமன், திரு. ஆர்.எஸ். இராமகிருஷ்ணன், திரு ஏ. சுப்பிரமணியம், திரு. ஏ. என். பதி ஆகியோர் வீற்றிருந்தனர். மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் தியாகிகளுக்குப் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகள் வழங்கினார்.



திருச்சியிலிருந்து புனிதப் பயணத்தைத் தொடங்கியபோது...

பின்னர், மேடையைச் சுற்றி வட்டமாக அமர்ந்திருந்த யாத்திரை வீரர்கள் 122 பேரையும் ஒவ்வொருவராகச் சந்தித்து வணக்கம் கூறி, கைகுலுக்கி யாத்திரை வெற்றியடைய வாழ்த்துக் கூறினார். வேதாரணியம் புனிதப் பயணம் நினைவாகப் எடுக்கப்பட்ட கல்வெட்டையும் திறந்து வைத்தார்.

அண்மையில் நடைபெற்ற தண்டி நினைவு யாத்திரையில் பயன்படுத்தப்பட்ட ஜோதியையும் தேசியக் கொடியையும் விளையாட்டு வீரர் திரு அண்ணாவி, திரு தெய்வ்சிகாமணி ஆகியோர் மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களிடமிருந்து பெற்று வந்திருந்தனர். அந்த ஜோதியை இந்த யாத்திரையில் கலந்துகொள்ளும் இளைஞர்களிடம் வழங்கி மேதகு குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள் உரையாற்றினார்.

அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் அவ்வுரையைத் தமிழில் மொழிபெயர்த்தார். (உரை பிறிதோரிடத்தில் இடம் பெற்றுள்ளது) பின்னர் துணைவேந்தர் அவர்கள் பாதயாத்திரை உறுதிமொழியைப் படிக்க அனைவரும் தொடர்ந்தனர்.

ஆளுநரின் ஆலோசகர் திரு.ஏ. பத்மநாபன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.

விழாவில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு கருப்பையாமூப்பனார் எம்.பி., திரு. குமரி அனந்தன், திரு. அடைக்கலசாமி எம். பி., திரு. தங்கபாலு எம்.பி., திரு பழநியாண்டி எம்.பி., மத்திய அரசின் செயல் திட்ட அலுவலர் திரு நரேந்திரசிங், செய்திசுற்றுலாத் துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு. சி. என். ராம்தாஸ் இ.ஆ.ப., செய்தி மக்கள்தொடர்புத் துறை இயக்குநர் திரு. சி. என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு உஜாகர் சிங் இ.ஆ.ப., மற்றும் சுதந்திரப் போராட்ட முதுபெரும் தியாகிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உப்பு யாத்திரைக் குழுவினர் 122 பேரும் உப்புச்சத்தியாக்கிரக நினைவுத்தூணுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பூர்ண கும்ப மரியாதை மற்றும் கற்பூர ஆரத்திக்குப் பின் குழு, பயணத்தைத் தொடர்ந்தது. ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டது.

வழிநெடுகிலும் நின்றிருந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரும், பொதுமக்களும் தேசியக் கொடியையும், பச்சைக் கொடியையும் அசைத்து உற்சாகமூட்டினர்.

இப்பயணத்தில் முன்னணி விளையாட்டு வீரர்கள், வழக்கறிஞர்கள் தேசிய மாணவர் சமூகச் சேவைப்பிரிவினர், பாரத சாரணியர் மற்றும் சமூக நலச்சேவை அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.

ஸ்ரீரங்கம் செல்லும் பாதை நெடுக ஆங்காங்கே மக்கள் திரண்டிருந்து வாழ்த்தொலி முழங்கியதுடன், யாத்திரைக் குழுவினருக்கு மோர், இளநீர் போன்றவற்றை வழங்கி அன்புடன் உபசரித்தனர்.


அன்று பிற்பகல் ஸ்ரீரங்கத்திலிருந்து புறப்பட்டு, இரவு திருவளர்சோலை சென்றடைந்தனர்.

திருவளர்சோலையிலிருந்து 14.4.88 காலையில் புனிதப் பயணக்குழு கல்லணையை நோக்கிப் புறப்பட்டது.

**14.4.88**

வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக நினைவைப் போற்றும் புனிதப் பயணக் குழு காலை 10.30 மணிக்குத் தஞ்சாவூர் மாவட்ட எல்லையான கல்லணை வந்து சேர்ந்தது.

பூர்ண கும்ப மரியாதையுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு



மா.இராமு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்பு அளித்தார்.

தஞ்சைக் கோவில் போன்று ஒரு வளைவு, ''தஞ்சாவூர் மாவட்டம் வரவேற்கிறது' என்று மற்றொரு வளைவு போடப்பட்டு இருந்தன.

திரு சிங்காரவடிவேலு, எம்.பி., 500 சைக்கிள் தொண்டர்களுடன் வந்து வரவேற்றார்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு உஜாகர் சிங், இ.ஆ.ப., அவர்களும் குழுவுடன் வந்தார்.

தஞ்சாவூர்மாவட்டத்தின் சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி, உதவி ஆட்சித் தலைவர் திரு.இராம் மோகன் ராவ், இ.ஆ.ப., மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு.தங்கராஜ்.இ.கா.ப., மற்றும் சமூக நலத்துறை, வருவாய்த்துறை அனைத்து மாவட்ட அதிகாரிகளும் வந்திருந்தனர்.

பெண்கள், குழந்தைகள் மலர் தூவி வரவேற்றனர். 3,000 பொது மக்கள் வந்திருந்தனர். தாரை தப்பட்டை ஊத, யானை மாலையிட, குதிரை நாட்டியமாட கரகாட்டத்துடன் வரவேற்பு நடைபெற்றது.

குழுவில் வந்த திரு கே.டி.ரெங்கநாதன் பக்திப் பாடல்கள் பாடினார். தியாகி திரு.தெய்வசிகாமணி நன்றி கூறினார்.

திரு நரேந்திரபால்சிங், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா.இராமு, இ.ஆ.ப., திரு சிங்காரவேலு, எம்.பி. திரு உஜாகர் சிங், இ.ஆ.ப., முதலியோர் உரையாற்றினார்கள்.

மதிய உணவுக்குப் பிறகு மாலை 3.45 மணிக்கு கல்லணையை விட்டுக் கிளம்பினர். பொதுமக்கள் குழுவினருக்குத் திலகமிட்டு வழியனுப்பினர். அனைவரும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாலை 7.30 மணியளவில் கோவிலடி அடைந்தனர்.

சாலையின் இருமருங்கிலும் ஒவ்வொரு கிலோ மீட்டர் தொலைவிலும் பொதுமக்கள் வழங்கிய உற்சாக வரவேற்பு எழுத்தில் எழுத முடியாத திறம் பெற்றது. சிறு சிறு தண்ணீர்ப் பந்தல்களும் அமைக்கப்பட்டிருந்தன.

கோவிலடி ஊர் எல்லையில் பாண்டு வாத்தியங்கள் முழங்க ஊர் மக்கள் பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளித்தார்கள். குழு, அரசு மேல்நிலைப்பள்ளியில்



**தஞ்சாவூரில் 17-4-88 அன்று ,புனிதப் பயணக் குழுவினர் தங்கி இருந்த இடத்தில் நடைபெற்ற நூற்பு வேள்வியை ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா, இ.ஆ.ப., பார்வையிட்டார்**

இரவு தங்கியது. அப்போது பஜனைப் பாடல்கள் பாடப்பட்டன. சிறுமிகள் தேச பக்திப் பாடல்கள், பாடினர். கலை நிகழ்ச்சிகள் நடத்தினர். செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் படக்காட்சி நடைபெற்றது. மாரியப்பா குழுவினரின் 'முடிந்தால் காத்திரு' நாடகம் நடத்தப்பட்டது.

**15.4.88**

காலை 5.30 மணிக்குப் பிரார்த்தனையை முடித்துத் திருக்காட்டுப்பள்ளிக்குப் புறப்பட்டது புனிதப் பயணக் குழு. 50 பெண்கள் ஆரத்தி எடுத்து வழி அனுப்பினர். வழியெங்கும் மக்கள் உற்சாக வரவேற்பு நல்கினர். 10.15 மணிக்குத் திருக்காட்டுப்பள்ளியை அடைந்தனர். சிவசாமி அய்யர் மேல்நிலைப் பள்ளியில் மதிய உணவு அருந்தினர்.

குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் பெரியவர்களையும் கவர்ந்தன.

மாலை 4 மணிக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

தஞ்சாவூர் உதவி ஆட்சியர் திரு இராம்மோகன் ராவ், இ.ஆ.ப., 20 ஆதிதிராவிடர்களுக்கு மனைப் பட்டா வழங்கினார்.

மாலை 4.30 மணிக்குச் சாத்தனூர் நோக்கி புறப்பட்டது குழு. விஷ்ணம்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தலைவர் திரு வி. இராமகிருஷ்ணன் பூரண கும்ப வரவேற்புக் கொடுத்தார். வரவேற்புப் பதாகையும் காட்சி தந்தது.

1930இல் கட்டியிருந்ததைப் போன்று மரத்தில் உணவுப் பொட்டலம் கட்டியிருந்தனர். குழுவினர் அதனை அவிழ்த்துக் கொண்டனர்.

பவனமங்கலத்தின் மகளிர் மன்றம் சார்பில் வரவேற்பு; பிஸ்கட், பாயாசம் ஆகியன வழங்கப்பட்டன.

சாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு .இரத்தினசாமி வரவேற்புக் கொடுத்தார். வரவேற்புப் பதாகை இடம் பெற்றிருந்தது.

திருவையாறு தாலுக்கா எல்லையின் ஆரம்பப் பகுதியான வானரங்குடியில் தாலுக்கா காங்கிரஸ் குழுவின் சார்பில் வரவேற்பு வளைவு பெரிய அளவில் காட்சி தந்தது. மேள தாள, சிலம்ப விளையாட்டுகளும் இடம் பெற்றன. சின்னக் குழந்தைகள் சுதந்திரக் கொடியேந்தி வரவேற்றனர். மாதர் நல்லார் ஆரத்தி எடுத்தனர். ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு பாண்டுரங்கன் வரவேற்றார்.

பந்தலில் அமர்ந்து, சற்று நேரம் பஜனையுடன் பிரார்த்தனை நடத்தப் பெற்றது.

மகாராஜபுரம் ஊராட்சித் தலைவர் திரு கோவிந்தசாமி புனிதப் பயணக் குழுவை வரவேற்றார்.

பின்னர் குழு சாத்தூரை அடைந்தது. இரவு அங்கேயே தங்கியது.

தியாகி திரு தெய்வசிகாமணி, திரு.கேடிலியப்பன் ஆகியோர் புனிதப்பயணம் தொடர்பாக உரை நிகழ்த்தி மகிழ்வித்தனர்.

'வளமான வாழ்வு' என்னும் நாடகமும், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் படக்காட்சியும் நடைபெற்றன.

**16.4.88**

பொழுது புலர்ந்ததும் பிரார்த்தனை தொடங்கியது. 5.30 மணிக்குத் திருவையாறு நோக்கிப் புறப்பட்டது குழு. மரூர் ஊராட்சித் தலைவர் தலைமையில் பூர்ணகும்ப மரியாதை அளிக்கப்பட்டது.



**கண்டியூரில் 16-4-88 அன்று, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள், புனிதப் பயணக் குழுவினருடன் கலந்து கொண்டார்.**

'வழுக்குடியில் - பொதுமக்கள் பூர்ணகும்ப மரியாதை அளித்தனர்.

ஆச்சனூர் - வைத்தியநாதன் பேட்டை ஊராட்சி ஒன்றியப் பள்ளி மாணவ, மாணவிகள் மலர் தூவி வரவேற்றனர்.

காங்கிரஸ் குழுவினர் வெடி முழக்கத்துடன் வரவேற்றனர். தேநீரும் பிஸ்கட்டும் புனிதப் பயணக் குழுவுக்கு வழங்கப்பட்டன. வைத்தியநாதன்பேட்டையில் பூர்ண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

பனையூரின் பள்ளிச் சிறார்கள் பாசம் பெருக வரவேற்றனர். பெண்கள் ஆரத்தி எடுத்தனர்.

கடுவெளி நுழைவு எல்லையில் ஊராட்சித் தலைவர் திரு சுப்பிரமணியன், ஞானவேல் முதலியோர் மேளதாளத்துடன் வரவேற்பு அளித்தனர். பெரிய பெரிய வளைவுகள் காட்சி தந்தன.

கடலை, பசும்பால், பழம், முதலியவை பாதயாத்திரைக் குழுவுக்கு வழங்கப்பட்டன. கடுவெளி கிராமத்தில் முஸ்லீம்கள், கிறித்தவர்கள், இந்துக்கள் அவரவர் மத சம்பிரதாயப்படி வரவேற்று உயர் நிலைப்பள்ளிக் கட்டடத்தில் காலை உணவு அளித்தனர்.

கடுவெளி கடந்ததும் சமூகநலக் காடு வளர்ப்புத் துறையினர் கால்வாய்க்காடு வளர்ப்புத் திட்டம் பற்றி விளக்கிப் பேசினர். அருகிலிருந்த, கால்வாய்த் திட்டக் காடுகள் புனிதப்பயணக் குழுவினருக்குக் காட்டப்பட்டது.

தில்லை ஸ்தானத்தில் இராமகிருஷ்ணா நடுநிலைப்பள்ளிக் குழந்தைகள் கொடியசைத்து மலர் தூவி வரவேற்றனர். பள்ளி நிர்வாகி டி.வி.ரெங்கநாதன் அனைவரையும் வரவேற்றார். குழந்தைகள் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, பாரதத்தாய், பாரதி முதலிய வேடங்களை அணிந்தவாறு குழுவினரை வரவேற்றனர்.

தியாகி டி.எஸ்.எஸ். இராஜன் அவர்கள் பிறந்த ஊர் என்பதால் பொதுமக்கள் பெருந்திரளாக வந்திருந்தனர்.

சமூகநலத்துறையின் சார்பில் மகளிர் மன்றத்தினர் சர்பத், மோர் ஆகியவற்றை வழங்கினர். அனைவருக்கும் விசிறிகள் வழங்கப்பட்டன. வரவேற்பு நோட்டீஸ்களும் வெளியிடப்பட்டிருந்தன.

குழு, திருவையாறு அடைந்த போது திருவையாறு காங்கிரஸ் குழுவின் சார்பில் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

பயணியர் விடுதி முன்பாக இடம் பெற்றிருந்த பெரிய வரவேற்பு வளைவுகள் நெஞ்சில் நிலைத்தன. பொதுமக்கள் திரளாக வந்திருந்தனர். யாத்திரைக் குழு 11 மணி அளவில் திருவையாறு இசைக் கல்லூரியை அடைந்தது. மதிய உணவுக்குப் பிறகு இசைக்கல்லூரி மாணவர்கள் இறை உணர்வுப் பாடல்கள் பாடினர்.

மாலை 3.45 மணிக்கு திருவையாறிலிருந்து தஞ்சை நோக்கி யாத்திரை கிளம்பியது. வழியில் திருவையாறு பொதுமக்கள் அனைவருக்கும் பிஸ்கட், வாழைப்பழங்கள் ஆகியவற்றை வழங்கினர்.

5 மணியளவில் திருக்கண்டியூரில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அ.அருணாசலம் அவர்கள் பாத யாத்திரைக் குழுவினரைச் சந்தித்து வாழ்த்தினார். பாத யாத்திரைக் குழுவை ஊக்கப்படுத்தும் விதத்தில் இரண்டு மணிநேரம் மாண்புமிகு அமைச்சர் நடந்து சென்றார்.

அம்மன்பேட்டை அருள்நெறி உயர்நிலைப்பள்ளி அருகில் சாலையில் அமர்ந்து அனைவரும் 15 நிமிட நேரம் பிரார்த்தனை செய்த பிறகு மாண்புமிகு அமைச்சர் உரையாற்றினார். தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா.இராமு, இ.ஆ.ப. அவர்களும் உரையாற்றினார்.

கருந்தட்டாங்குடியில் இராஜாஜி உருவாக்கிய 1930 உப்புச் சத்தியாக்கிரக நினைவுச் சின்னத்தை, யாத்திரைக் குழுவினர் வணங்கி மகிழ்ந்தனர். தஞ்சாவூர் நகராட்சி எல்லையில், கொட்டும் மழையிலும் நகராட்சியின் சார்பாக, நகர மன்றத் தலைவர் திரு ஏ.வி.பதி வரவேற்றார். நகராட்சி ஆணையர், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக வந்திருந்து வரவேற்பு அளித்தனர். நகராட்சியின் சார்பிலும், தஞ்சாவூர் மாவட்டக் காங்கிரஸ் குழுவின் சார்பிலும் வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

தஞ்சாவூர் கவிதா மன்றத்தில் இரவு உணவுக்குப் பிறகு நாடகம் மற்றும் படக்காட்சி நடத்தப்பட்டன.

**17.4.88**

தஞ்சாவூர் கவிதா மன்றத்தில் விடியற்காலை ஐந்து மணிக்குப் புனித யாத்திரிகர்கள் பிரார்த்தனை செய்தார்கள். பக்திப் பாடல்கள் பாடப்பட்டன.

காலை 9 மணிக்குக் கதர்த்துறையின் சார்பில் நூற்பு வேள்வி நடத்தப்பட்டது. 10.30 மணிக்கு தஞ்சாவூர் புனித ஜோசப் பெண்கள் மேநிலைப்பள்ளி மாணவி செல்வி வைரமங்கையின் பரதநாட்டியம் நடைபெற்றது. 30 பெண்கள் நூல் நூற்றனர்.

போழக்குடி சங்ககீதபூஷணம் பி.வி.க ணேச அய்யர் குழுவினர் பக்திப்பாடல்கள், கீர்த்தனைகள், சுதந்திர வரலாறு குறித்துப் பாடல்கள் பாடினர்.

11.30 மணிக்கு மயிலாடுதுறை காது கேளாதோர் பள்ளியைச் சேர்ந்த உஷா, விஜயலட்சுமி ஆகிய மாணவிகள் நாட்டியமாடினர். ஊனமுற்ற மாணவிகள் தையல் செய்து காட்டிப் பாராட்டைப் பெற்றனர்.

மாலை 5 மணியளவில் தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா இ.ஆ.ப. அவர்கள் உப்புச் சத்தியாக்கிரக யாத்திரைக் குழுவைச் சந்தித்து வாழ்த்தினார். நல்ல மழையில் 5.30 மணிக்குப் புறப்பட்டு இரவு தண்டாங்கோரையை அடைந்தார்கள் குழுவினர்.


மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.ஆர். கிருஷ்ணமூர்த்தி, உதவி ஆட்சியார் திரு ராம்மோகன் ராவ், இ.ஆ.ப., ஆகியோர் யாத்திரைக் குழுவுடன் தொடர்ந்து சென்றனர்.

**18.4.88**

காலை தண்டாங்கோரையிலிருந்து யாத்திரை புறப்பட்டது. தண்டாங்கோரைச் சாலை ஓரங்களில் தியாகிகள் 20 மரக் கன்றுகள் நட்டனர்.

மாத்தூரில் மகளிர் மன்றத்தினர் வரவேற்று, பிஸ்கட், தேனீர் வழங்கினர்..

பசுபதிகோவிலில் திரு.ஜி.ரெங்கசாமி மூப்பனார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.இராஜாராம், ஊராட்சி ஒன்றியத் தலைவர்



புனிதப் பயணக்குழு நீடாமங்கலத்திற்கு வந்தபோது பூரண கும்பத்துடன் மரியாதை அளிக்கப்பட்டது.



திரு கருப்பண்ண உடையார் ஆகியோர் வரவேற்றனர். ஊர்ப் பொதுமக்களும், மாணவ, மாணவிகளும் சிறப்பாக வரவேற்றனர். பசுபதி கோயில் கிராமத்தில் 20 ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 2 லட்சத்தில் கட்டப்பட்ட காமராஜர் காலனி, சமுதாயக்கூடம், வானொலி நிலையம் முதலியவற்றை யாத்திரைக் குழுவில் வந்த திரு நாவலர் காந்தி திறந்து வைத்தார்.

அய்யம்பேட்டை ஊராட்சித் தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் சார்பில் பிஸ்கட், ஹார்லிக்ஸ் ஆகியவை வழங்கப்பட்டன.

பேரூராட்சித் தலைவர் திரு ராகவன், மாலைகள் அணிவித்து வரவேற்றார்.

1930-இல் மூதறிஞர் இராஜாஜி தலைமையில் வந்த யாத்திரிகர்களுக்குத் தங்குமிடமும், உணவும் வழங்கிய தியாகி திரு.கோபால்சாமி அய்யங்கார் வீட்டில் அன்னார் திருவுருவப் படத்தைத் திரு ஜி. ரெங்கசாமி மூப்பனார் திறந்து வைத்தார். கோபால்சாமி அய்யங்காரின் குடும்பத்தினருக்குக் கதராடை போர்த்தி மரியாதை செய்தனர் பாதயாத்திரைக் குழுவினர்.

அய்யம்பேட்டை மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் சங்கம் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது. சமூகநலத் துறை மகளிர் மன்றமும், பள்ளி மாணவிகளும் இணைந்து பக்திப் பாடல்களைப் பாடினர்.

மதிய உணவு, மாலை சிற்றுண்டி ஆகியவற்றை முடித்து மாலை 4 மணிக்குப் புறப்பட்டது குழு, 6 மணிக்கு வழுத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு முஸ்தபா மற்றும் பொதுமக்கள் பூர்ண கும்ப மரியாதையுடன், வானவேடிக்கையுடன் வரவேற்றனர்.

அய்யம்பேட்டைக்கும் - வழுத்தூருக்கும் இடையில் இரண்டு இடங்களில் முஸ்லீம் பெருமக்கள் யாத்திரைக் குழுவை வரவேற்று இனிப்புகள் வழங்கினர். வழுத்தூரில் 7 மணியளவில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா.இராமு, இ.ஆ.ப., வரவேற்றுப் பேசினார்.

இரவு உணவுக்குப் பிறகு பி.எச். இராமலிங்கம்குழுவினரின் 'பொழுது விடிந்தது' எனும் நாடகமும், படக்காட்சியும் நடைபெற்றன.

**தொடரும்**

# வேதாரணியம் உப்பு அறப்போர் 1930-

## சில சுவையான செய்திகள்

உப்பு அறப்போர்ப் படை திருச்சியிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் படைத்தலைவர் ராஜாஜி தொண்டர்கள் அனைவரையும் சந்தித்து, அவர்கள் வைத்திருந்த காசு, பணம் யாவற்றையும் வசூல் செய்து இயக்க நிதியுடன் சேர்த்துவிட்டார். தொண்டர்களிடம் பணம் இருந்தால், அவர்கள் படையின் கட்டுப்பாட்டைத் துறந்து, ஒவ்வொருவரும் தத்தமது விருப்பம்போல் பணத்தைச் செலவிடக்கூடும் என்று எண்ணியே, ராஜாஜி பணத்தை வசூல் செய்துவிட்டார்.

ஆலயத்தை நோக்கிப் பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் காவடிச்சிந்து, நொண்டிச் சிந்து போன்ற பாடல்களைப் பாடிச் செல்வதுண்டு. பாட்டு முழக்கத்தின் மூலம் வழி நடைப் பயணக் களைப்பை மறப்பதுண்டு. அதுபோல, உப்பு அறப்போர் என்னும் வேள்வியை நடத்துவதற்காக வேதாரணியத்தில் உள்ள உப்பள ஆலயத்தை நோக்கிச்




சென்று கொண்டிருந்த அறப்போர் வீரர்கள் பாரதியார் எழுதிய 'அச்சமில்லை, அச்சமில்லை', 'வந்தே மாதரம் என்போம்' 'வாழ்க பாரத சமுதாயம்' 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்' என்னும் பாடல்களையும், நாமக்கல் கவிஞர் எழுதித் தந்த 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்னும் பாடலையும் எழுச்சியுடன் பாடிச் சென்றனர்.

ராஜாஜி, தாம் அறிவித்திருந்த நேரத்திற்கு முன்னதாகவே உப்பளத்திற்குச் சென்று, ஒரு கை உப்பை எடுத்துக் கொண்டு 'வந்தே மாதரம்' என்று கூக்குரலிட்டார். உடனே அங்கு இருந்த காவலர் நடுக்கத்துடன் ராஜாஜியை நோக்கிச் சென்றார்.

''பயப்பட வேண்டாம்! உங்களது மேலதிகாரிக்குத் தகவல் கொடுக்க எவ்வளவு நேரம் ஆகும்?' என்று கேட்டார் ராஜாஜி.

''பதினைந்து நிமிஷம் ஆகும்!''—காவலர் பதில் தந்தார்.

''நீங்கள் பயப்படாமல் மேலதிகாரியைச் சந்தித்துத் தகவலைச் சொல்லி வரலாம். நான் இன்னும் ½ மணி நேரம் வரை எங்கும் போகாமல் இங்கேயே இருக்கிறேன்— ராஜாஜி உறுதியளித்தார்.

உடனே அந்தக் காவலர் ஓடோடிச் சென்று, உயர் அதிகாரிகளை அழைத்துக் கொண்டு வந்தார். அதன் பின்னர் ராஜாஜி கைது செய்யப்பட்டார்.

அறப்போர்ப் படையினர். தங்களது பயணத்தின்போது கிராமங்களின் வழியாகச் செல்ல நேர்ந்தபோதெல்லாம் அங்கு சந்தித்த சில குடிகாரர்களுக்குக் குடியினால் விளையும் கேடு குறித்து விளக்கம் செய்தனர். சில கிராமங்களில் குடிகாரர்கள், அறப்போர்த் தொண்டர்களிடம் விவாதம் செய்தனர்.

''நாள் முழுதும் நாங்கள் கடுமையாக உழைக்கிறோம். அதுகூட இல்லாட்டி உசிரு போயிடுமுங்க'' என்று ஒருவர் ராஜாஜியிடம் சொன்னார்.

அவருக்கு உரிய முறையில் எளிய விதத்தில் விளக்கம் தந்தார் ராஜாஜி.

அவரது உரையைக் கேட்ட அந்தக் கிராமவாசியின் கண்களில் நீர் ததும்பி விட்டது. கீழே விழுந்து அவரை வணங்கிவிட்டு. 'எங்க புள்ளெ குட்டி மேலே ஆணையா சொல்றேன்! இனிமே கள்ளே சாப்பிடமாட்டேன் சாமி!' என்று உறுதியளித்தார். அதுமட்டுமல்ல, தன்னுடைய குடியிருப்புப் பகுதிக்குச் சென்று, தன்னைச் சார்ந்த அனைவரையும் அழைத்து வந்து, சூளுரை எடுத்துக்கொள்ளுமாறு செய்தார்.






'தஞ்சை மாவட்டத்திற்குள் நுழைந்ததும் என்னை அரசாங்கம் கைது செய்யக்கூடும். அதனால் எனக்குப் பின்னர் இந்தப்படைக்குத் தலைமை வகிக்க விரும்புபவர்கள் எழுந்திருக்கலாம்' என்று படைத் தலைவர் ராஜாஜி குறிப்பிட்டபோது, கூட்டத்தில் அமர்ந்திருந்த தொண்டர்கள் ஒவ்வொருவராக எழுந்தனர். முடிவில் பங்குபெற்ற 108 தொண்டர்களுமே தாங்கள் தயார் என்று கூறியவாறு எழுந்து நின்றனர்.



ராஜாஜியின் தலைமையில் தொண்டர் குழு உப்புச் சட்டத்தை மீறியபோது ராஜாஜியைக் கைது செய்தார், மாவட்டக் காவல்துறை உயர் அதிகாரி கோவிந்த நாயர். கைது செய்யப் பெற்ற மறுகணமே அவர்கள் இருவரும் அன்பு ததும்பக் கைகுலுக்கிக் கொண்டனர். காரணம் என்ன தெரியுமா? அவர்கள் இருவரும் வகுப்புத் தோழர்கள்.

# காந்திகிராம கிராமியப்பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா



அண்ணா மாவட்டம், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் 10வது பட்டமளிப்பு விழா 7.4.'88ல் நடைபெற்றது. இந்த விழாவில், காந்திகிராம கிராமியப்பல்கலைக்கழக வேந்தரும், மேதகு இந்தியக்குடியரசுத் துணைத் தலைவருமான திரு சங்கர்தயாள் சர்மா அவர்கள் கலந்து கொண்டார்.

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கினார். அப்போது உரையாற்றும் போது கூறியதாவது:

''காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்றுச் செல்லும் மாணவ, மாணவிகள் இந்தப் பல்கலைக் கழகத்திற்கு நல்ல பெயரை வாங்கித் தர வேண்டும். ஏழை எளியவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் எனப் பல்கலைக்கழகம் உங்களுக்குப் போதித்ததோ, அதை நீங்கள் வெளி உலகத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

''மொரிஷியஸ் தீவிற்கு காந்தியுடன் சென்றவர்களால் அந்தநாடு வளர்ந்தது, வளமிக்கதாகியது. அந்த நாடு முன்னேறி உள்ளது. அதுபோல இந்தப் பல்கலைக் கழகத்தில் இருந்து செல்கிறவர்களுக்கு நாட்டுப் பற்று இருக்க வேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் சக்தி வாய்ந்த வல்லரசை எதிர்த்து நம் நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தார். அந்தச் சுதந்திரம் ரத்தம் சிந்தாமல், அகிம்சை வழியில் பெற்ற சுதந்திரமாகும். இப்பல்கலைக் கழகத்தில் இருந்து பட்டம் பெற்றுச் செல்பவர்கள் அனைவரும் அகிம்சையைப் போதிக்க வேண்டும். அகிம்சை தழைக்க ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். நாட்டில் வன்முறை தலைகாட்டுகிறது. வன்முறையைத் தவிர்க்க நாம் அனைவரும் பாடுபடவேண்டும். இன்று அமைதி இல்லை என்றால், நாளை வாழ்வு இல்லை. இந்தியாவில் உள்ள கடைசி ஏழையும் உயர்வதற்கு நாம் பாடுபட வேண்டும். இல்லாமை இல்லாத நிலை வரவேண்டும்.

'கல்வி பரவ வழிவகை செய்ய வேண்டும். 'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை' என திருவள்ளுவர் கூறியுள்ளார். கல்வி பரவச் செய்வதன் மூலம் தனக்கு மட்டும் அல்லாமல் பிறர்க்கும் இன்பம் தரச் செய்ய வேண்டும். இதைத் தமிழ்நாடு செய்து வருகிறது. திருவள்ளுவர் கூட, 'தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' எனக் கூறி உள்ளார்:

''வகுப்பு வாதம், இனவாதம் அற்ற சமுதாயம் உருவாக இளைஞர்கள் பாடுபடவேண்டும். மனித இனம் என்ற ஒரே இனம் தான் உள்ளது என ரிக்வேதம், திருக்குறள் ஆகியவை கூறியுள்ளன."

இந்தப் பட்டமளிப்பு விழாவிற்கு வந்தவர்களைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு தேவேந்திர குமார் வரவேற்றார்.

அமெரிக்காவின் லூசியானா கிரம்ளின் பல்கலைக் கழகத் தலைவர் டாக்டர் ஜோஸப் டி. ஜான்சனுக்கு வழங்கப்பட்ட கவுரவப் பட்டத்தை அவர் சார்பில் அந்தப் பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவர் டாக்டர் கார்டர் பெற்றுக் கொண்டு ஏற்புரை வழங்கினார். விழாவில் பிலிப்பைன்சில் உள்ள இந்திய வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சாமிநாதன் பட்டமளிப்பு விழாச் சிறப்புப் பேருரை ஆற்றினார்.

மேலும், மேதகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள மனையிடைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். 'பல்கலைக் கழகமும், கிராமமும்' என்ற கண்காட்சியைப் பார்வையிட்டார். பின்பு நூலகத்தின் அருகில் மரக் கன்றுகளை நட்டார்.

# சென்னையில் சிறுவர் அருங்காட்சியகம்

சென்னைக்கு இப்பொழுது மற்றுமொரு சிறப்புச் சேர்ந்துள்ளது. சின்னஞ் சிறார்களைக் கவர்ந்திழுத்து, அவர்களது பொழுது மகிழ்ச்சியாகக் கழியவும் அப்படியே அரிய செய்திகளைத் தெரிந்து கொண்டு அவர்கள் தங்கள் கல்வித் தகுதியை மேம்படுத்திக்கொள்ளவும் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது சிறுவர் அருங்காட்சியகம்.

சென்னை எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சிறுவர் அருங்காட்சியகத்தை 11.4.'88 திங்களன்று மாலை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் திறந்து வைத்தார்.

''தற்போதைய கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும். கல்வி முறையை மாற்றியமைப்பதற்கு நல்ல சூழ்நிலை உருவாகியுள்ளது'' என்று அப்பொழுது அவர் கூறினார்.

வகுப்பறைக் கல்வியால் மட்டும் குழந்தைகளுக்கு முழுமையான கல்வி அறிவை வழங்க முடியாது என்றும், நூலகம், அருங்காட்சியகம், பூங்கா போன்ற இடங்களுக்குச் சிறுவர்கள் சென்று வருவதன் மூலமே சிறந்த கல்வியைப் பெற முடியும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

''வெளிநாடுகளில் சிறுவர்கள் பூங்காக்களுக்கும் மற்ற இடங்களுக்கும் சுதந்திரமாகச் சென்று வருகின்றார்கள். ஆனால் இங்கு மாணவர்களை அணிவகுப்பு நடத்துவது போல ஒருவர் பின் ஒருவராக அழைத்துச் சென்று வருகின்றனர். டில்லி போன்ற இடங்களில் சிறுவர்கள் புத்தகங்களைச் சுமந்து செல்வதைக் காண முடிகிறது. சிறுவர்களுக்கு அதிக வீட்டுப் பாடம் கொடுப்பதால் அவர்களுக்கு மட்டுமின்றி, தாய்மார்களுக்கும் வேலைப்பளு அதிகமாகிறது. இங்கு வந்துள்ள ஆசிரியர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. மற்ற பள்ளிகளைக் காட்டிலும் தங்களது பள்ளி மாணவர்கள் அதிக மதிப்பெண் எடுக்க வேண்டும் என்பதிலேயே ஆசிரியர்கள் குறியாக இருந்து விடுகின்றனர். சிறுவர்கள் தேர்வில் வெற்றி பெறுவதையேநோக்கமாகக் கொண்டு படிக்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும். சிறுவர்களைச் சிறந்த குடிமக்களாக, நல்ல நெறியாளர்களாக, நேர்மையானவர்களாக விளங்கச்செய்வதே கல்வியின் முக்கிய அம்சமாக அமைய வேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த விழாவிற்கு, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைக் கூடுதல் செயலா திரு எஸ். டி. சுாசிராஜன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமை வகித்தார். 'குழந்தைகள் தாங்களாகவே வளர, பெற்றோர் அனுமதிக்க வேண்டும்; இந்த மண்ணின் வளம் எதுவும் செழித்து வளரச் சிறந்தது. அந்த வகையில் இந்தச் சிறுவர் அருங்காட்சியகம் நன்கு வளர்ந்து பெருகும்'' என்று அவர் தெரிவித்தார்.




உலக நாகரிகங்கள் பற்றியும், தமிழகக் கலாசாரம், பண்பாடு, நிலப்பாகுபாடு போன்றவை பற்றியும் சிறுவர்கள் இங்கு வந்து சிறப்பாக அறிந்து கொள்ள முடியும் என்றும், இங்கு வரும் சிறுவர்களுக்குக் கட்டணம் எதுவும் வசூலிக்கக் கூடாது என்று ஆளுநர் அவர்கள் கூறியிருப்பதாகவும் அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு என். ஹரிநாராயணா அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், இந்த அருங்காட்சியக வரலாற்றை விளக்கினார்.

அனைத்துலகக் குழந்தைகள் ஆண்டான 1979இல் இந்தச் சிறுவர் அருங்காட்சியகம் அமைக்க அரசு அனுமதித்தது. அருங்காட்சியகம் 1,506 சதுர மீட்டரில் அமைந்துள்ளது. கீழ் அடித்தளம், மற்றும் இரு மாடியில் தற்போது கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் ஒரு மாடி கட்ட வசதி உள்ளது. இதன் மொத்தச் செலவு 36 லட்சத்து 70 ஆயிரம் ரூபாயாகும்.

இதில் 'லிப்ட்' வசதி செய்யப்பட்டுள்ளது. லிப்டில் பயணம் செய்யும் போது அரங்கில் உள்ளவைகளைச் சிறுவர்கள் பார்த்துச் செல்ல வசதியாக லிப்டைச் சுற்றிக் கண்ணாடி அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, உடல் ஊனமுற்ற சிறுவர்கள் மாடிக்குச் செல்லத் தனி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

குழந்தைகள் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் பல்வேறு அம்சங்கள் அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன.

பழங்கால மனிதர்கள் பற்றிய விவரங்கள், பண்டைய கலாச்சாரப் பண்புகள், இயற்கை விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் ஆகியவை குறித்தும், 25 நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான பொம்மைகள், உலக நாடுகள் பற்றிய பூகோளப் படங்கள், ரயில், டெலிபோன், விண்வெளி, செயற்கைக்கோள் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆகியவையும் அருங்காட்சியகத்தில் சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் முதலாவதாகப் பயன்படுத்திய ரேடியோ ஒலிபரப்புச் சாதனம் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருப்பது மற்றொரு முக்கிய அம்சமாகும்.

இந்தச் சிறுவர் அருங்காட்சியகம் வெள்ளி, தேசிய விடுமுறை நாட்கள் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10 முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.

— நமது செய்தியாளர்

# செயல் திறன்

—முத்தமிழ்க் காவலர் :
கி.ஆ.பெ. விசுவநாதம்

●●●

**வெறும் பேச்சால் பயனில்லை. மனிதன் செயல் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்குத் திருக்குறள் எவ்வாறு பயன்படுகிறது என்பது இங்கே தெளிவாக்கப்படுகிறது.**

●●●

நமது நாட்டில் மூன்று நூல்கள் மிகவும் மதிக்கப் படுகின்றன. அவை வருமாறு:

**பகவத் கீதை**
**திருவாசகம்**
**திருக்குறள்**

பகவத் கீதை என்ற நூல் "மனிதன் கேட்க இறைவன் சொல்லியது" ஆகும். திருவாசகம் என்ற நூல் "இறைவன் கேட்க மனிதன் சொல்லியது". திருக்குறள் என்ற நூல் மட்டுமே "மனிதன் கேட்க மனிதன் சொல்லியது".

எனவே, இறைவன் கேட்க மனிதன் சொல்லிய நூலையோ, மனிதன் கேட்க இறைவன் சொல்லிய நூலையோ, நாம் கடைப்பிடிக்க முடியாவிட்டாலும் மனிதன் கேட்க, மனிதன் சொல்லிய நூலைக் கடைப் பிடிக்க முடியாமல் போகுமா? அவ்வாறு கடைப்பிடிக்க முடியாவிட்டால் அவனை மனிதன் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. மனிதன் கடைப்பிடிக்க முடியாத கருத்துக்களை வள்ளுவர் எந்த இடத்திலும் கூறவில்லை.

திருக்குறள் மொத்தம் 133 அதிகாரங்களைக் கொண்டதாக இருந்தாலும், அதில் 133 பொருட் தலைப்புகள் உள்ளன எனச் சொல்ல முடியாது. ஏனெனில் குறிப்பறிதல் என்ற தலைப்பிலேயே இரு அதிகாரங்கள் உள்ளன. நட்பு என்ற தலைப்பில் ஏழு அதிகாரங்கள் உள்ளன.

அவை 1. நட்பு, 2. நட்பாராய்தல், 3. பழைமை, 4. தீ நட்பு, 5. கூடா நட்பு, 6. பெரியாரைத் துணைக் கோடல், 7. சிற்றினம் சேராமை ஆகிய ஏழு அதிகாரங் களில் நட்புப் பற்றிக் கூறியுள்ளார். எனவே 133 அதிகாரங்களில் 125 கருத்துகளைக் கூறியுள்ளார் எனலாம்.

இந்த 125 அதிகாரங்களில் செயல்திறன் பற்றி மட்டும் பன்னிரெண்டு தலைப்புகள் கூறியுள்ளார். அவை யாவன:


1. தெரிந்துசெயல்வகை
2. வலியறிதல் (வலிமை அறிந்து செய்தல்)
3. காலமறிதல் (காலமறிந்து செய்தல்)
4. இடனறிதல் (இடமறிந்து செய்தல்)
5. தெரிந்து தெளிதல்
6. தெரிந்து வினையாடல்
7. ஊக்கமுடைமை
8. ஆள்வினை உடைமை
9. இடுக்கண் அழியாமை
10. வினைத்தூய்மை
11. வினைத்திட்பம்
12. வினை செயல்வகை

**மனிதனுக்கே உரிய சிறப்புகள் மூன்று**

உலகத்தில் மொத்தம் எண்பத்தைந்து இலட்சம் உயிரினங்கள் உண்டு. அதில் எந்த உயிரினத்திற்கும் சிரிக்கத் தெரியாது. மனிதனுக்குத்தான் சிரிக்கத் தெரியும்.

எந்த ஒரு உயிரினமும் சிந்திக்காது. மாடு ஒரு மூலையில் அமைதியாக நின்று கொண்டிருந்தால், அந்த மாடு சிந்தித்துக் கொண்டு இருக்கிறது என்று யாரும் நினைக்கமாட்டார்கள். ஆனால் மனிதன் தனிமையில் உட்கார்ந்திருந்தால் சிந்தித்துக் கொண்டிருக்கிறான் என்று கூறுவர். எனவே சிந்திக்கும் தன்மை மனிதனுக்கே உண்டு.

கை உள்ளவன் மனிதன்தான். குரங்கு தனது முன் இரு கால்களையும் கைகளாகப் பயன்படுத்தும்.



ஆனால் பிறர்பொருளைப் பறித்துத் தின்பதற்குப் பயன்படுத்தும். கை ஈ (ஈ-கொடு) என்ற சொல்லையே ஈகை என்று சொல்கிறோம். இல்முன் என்ற சொல்லை முன்றில் என்று கூறுவது போலவும், அடி மிதி என்ற சொல்லை மிதியடி என்ற கூறுவது போன்றும்தான் கை ஈ என்பதை ஈகை என்கிறோம். இந்த ஈகை என்ற சொல் இலக்கணப் போலி வகையாகும் என்று இலக்கண நூலார் கூறுவர்.

**தமிழில் உள்ள சொற்களின் எண்ணிக்கை**

தமிழில் மொத்தம் ஒரு இலட்சத்து ஆறாயிரம் சொற்கள் உள்ளன.

ஆனால் எட்டெழுத்துக் கொண்ட சொல் ஒன்று கூட இல்லை. ஏழெழுத்துச் சொற்கள் உண்டு.

ஆனால் திருக்குறளில் எந்தக் குறளிலும் ஏழெழுத்துச் சொல்லைக் கையாளவில்லை. ஆறெழுத்துச் சொற்களை ஓரிரு இடங்களிலும், ஐந்தெழுத்துச் சொற்களைச் சுமார் பத்து இடங்களிலும் பயன்படுத்தியுள்ளார் வள்ளுவர்.

பெரும்பாலும் இரண்டு, மூன்று, நான்கு எழுத்துச் சொற்களையே பயன்படுத்தியுள்ளார்.

மொத்தம் 11,600 சொற்கள் திருக்குறளில் காணப்பட்டாலும், 4,500 சொற்களையே பல தடவை பயன்படுத்துகிறார்.

தெலுங்கில் 'கை' என்பதற்குப் பதிலாக 'செய்' என்ற பெயர் பயன்படுத்தப்படுகிறது.

செயல் என்ற பொருளில் ஐம்பத்தி மூன்று சொற்களை 213 குறட்பாக்களில் பயன்படுத்துகிறார். செய், செய்க, செய்தலின், செயல், செயலின், செயப்பட்டார், செய்கலான், செய்வார் - இவ்வாறு ஐம்பத்தி மூன்று சொற்கள் திருக்குறளில் உள்ளன.

செயல்திறன் பற்றி எட்டு யானைகளை வைத்தே வள்ளுவர் விளக்குகிறார்.

**முதல் யானை**

சிறிய காரியங்களில் இறங்கி வெற்றி பெறுவதை விடப் பெரிய காரியங்களில் இறங்கித் தோல்வியடைவது சிறந்தது என்பதை,

''கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது'.' (குறள் 772)

என்ற குறளில் விளக்குகிறார்.

**இரண்டாவது யானை**

வேல் ஏந்திய வீரனைக்கூட வீழ்த்தும் ஆற்றல் உடையது யானை. ஆனால் அந்த யானை சேற்றினில் சிக்கிக் கொண்டால் நரிகள் கூட அதனைக் கொன்று விடும். அது போல நாம் படித்திருக்கிறோமே அதனால் ஏதாவது செய்வோம் என்று ஒரு செயலில் இறங்கக் கூடாது என்பதை,

''காலாழ் களரி/ நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு. (குறள் 500)

என்ற குறளில் விளக்குகிறார்.



**மூன்றாவது யானை**

ஒரு வீரன், ஒரு யானை மீது தனது வேலினை வீசுகிறான். பிறகு இன்னொரு யானை வருகிறது. அப்போது வேல் நம் கையில் இல்லையே என்று யோசிக்கிறான். பிறகுதான் தனது மார்பில் பகைவரால் குத்தப்பட்ட வேல் இருப்பதைப் பார்க்கிறான். அதனை எடுத்து அந்த யானையின் மீது வீசுகிறான்.

இப்படிப்பட்ட வீரச் செயலை,

'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்'.' (குறள் 774)

என்ற குறளின் மூலம் விளக்குகிறார்.

**நான்காவது யானை**

புலி சிறிய உருவம் உடையது. அதற்கு இரண்டு சென்டிமீட்டர் நீளம் மட்டுமே உடைய நகம் இருக்கும். ஆனால் யானை பெரிய உடம்பை உடையது. கூர்மையான கொம்புகளை உடையது. ஆனாலும் செயல் செய்வதற்குரிய ஊக்கம் இல்லாததால் யானை பயப்படும். அதுபோல ஊக்கம் இல்லாதவர்களால் செயல் செய்ய முடியாது. எனவே செயல் செய்யக் காரணமான ஊக்கம் இல்லாவிட்டால் அவன் பயன்படமாட்டான் என்பதை,

''பரியது கூர்ங்கோட்ட(து) ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின் (குறள் 599)

என்ற குறளின் மூலம் யானையைக் கொண்டு, செயலை விளக்குகிறார்.

**ஐந்தாவது யானை**

மதங்கொண்ட யானையையே அடக்கிவிடலாம் என்கிறார். அப்படியெனில் சாதாரண மனிதனை அடக்குதல் முடியாத காரியம் அல்ல.

ஒரு சிலர் நம்மிடம் வந்து ''என் மகன் எனக்கு அடங்க மாட்டேங்கிறான்! என் மகள் அடங்க மாட்டேங்கிறாள்'' என்றெல்லாம் கூறுவார்கள். அவ்வாறு சொல்பவர்கள் வாழ்வதில் பயனில்லை. ''நான் என்ன செய்ய முடியும்? அரசாங்கம் எனக்கு உதவியே செய்வதில்லை'' என்றெல்லாம் கூறுபவர்களைச் சோம்பேறிகள் என்று தான் குறிப்பிடவேண்டும்.

செயலில் திறன் உடையவர்களாக இருந்தால், மத யானையையே மற்றொரு சாதாரண யானையின் மூலம் பிடித்து விடலாம் என்றும் கூறுகிறார் திருவள்ளுவர்.

''வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று'' (குறள் 678)

என்ற குறளின் மூலம் இதனை விளக்குகிறார்.

**ஆறாவது யானை**

எந்த ஒருசெயல் செய்ய வேண்டுமென்றாலும் பொருள் நம் கையில் இருக்க வேண்டும்.

எந்த ஒரு செயலையும் கையில் அதற்குரிய பொருளினை வைத்துக்கொண்டு தொடங்குங்கள் என்கிறார் திருவள்ளுவர். இக்கருத்தினையும் யானையை வைத்தே விளக்குகிறார்.

தன் கைப்பொருள் ஒன்று தன்னிடம் இருக்க அதைக் கொண்டு ஒருவன் செயல் செய்தால் மலையின்



மேல் ஏறி யானைப் போரைக் காண்பது போன்று இனிமை தரவல்லது என்பதை,

''குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை'' (குறள் 758)

என்ற குறளில் விளக்குகிறார்.

**ஏழாவது யானை**

செயலில் ஈடுபடும் போது கவர்ச்சிக்கு மயங்கிச் செயலினை விட்டுவிடக்கூடாது என்பதை விளக்குகிறார்.

எதிரே தந்தங்களை உடைய யானை, துணியினால் போர்த்தப்பட்டுள்ளது. மற்றொரு பக்கத்தில் ஓர் அழகிய பெண் தன் மார்பகங்களைத் துணியினால் போர்த்தியுள்ளாள்; இரண்டினையும் பார்க்கிறான் ஒருவன்.

செயலில் இறங்கும்போது மயங்கிவிடக்கூடாது என்று தெளிந்து, அப்பெண் பக்கம் செல்லாமல் யானைப் பக்கம் செல்கிறான்.

'கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்''
(குறள் 1087)

என்ற குறளின் மூலம் செயலைச் செய்யும்போது வேறு எதனிலும் கருத்துச் செலுத்தி மயக்கம் அடைந்துவிடக் கூடாது என்பதை வலியுறுத்துகிறார்.

**எட்டாவது யானை**

எத்தனை துன்பம் வந்தாலும் நாம் தளர்ந்துவிடக் கூடாது என்பதை வலியுறுத்த வந்த வள்ளுவர் யானையினை உதாரணம் காட்டுகிறார்.

எவ்வளவு துன்பம் வந்தாலும் கவலைப்படாமல் நாம் தொடர்ந்து நல்ல செயலைச் செய்யவேண்டும் என்கிறார்.

துன்பம் வந்தாலும் துணிவுடன் இன்பம் தரும் செயலைச் செய்ய வேண்டும் என்பதைத் ''துன்பம் உறவரினும் செய்க...''(குறள் 669)

என்ற குறளில் வலியுறுத்துகிறார்.

ஒருவன், எனக்குத் துன்பம் வந்துவிட்டதே என்று புலம்புகிறான். உடனே வள்ளுவர் அவன் காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்று, ஒரு யானையைக் காட்டுகிறார். அந்த யானையின் உடம்பில் பல இடங்களில் அம்புகள் துளைக்கப்பட்டுள்ளன. அப்படியிருப்பினும் அது பீடு நடை போட்டு நடக்கிறது. அதைக் காட்டி, 'இதுபோல் நீயும் எவ்வளவு துன்பம் வந்தாலும் அத்துன்பத்தைக் கண்டு கலங்கக் கூடாது' என்கிறார்.

ஊக்கம் உடையவர்கள் ஒரு செயல் செய்யத் தொடங்கி அதனைச் செய்யும்போது எவ்வளவு துன்பம் வந்தாலும் தளரமாட்டார்கள் என்பதை யானையைக் கொண்டு விளக்குகிறார்.

'சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு. (குறள் 597)

என்ற குறளின் மூலம் உடம்பை மறைக்குமளவு அம்புகள் தனது உடம்பைத் துளைத்தாலும் யானை பீடு நடை போடும். அது போல் ஊக்கம் உடையவர்கள் செயல் செய்யும்போது, எவ்வளவு துன்பம் வந்தாலும், தளரமாட்டார்கள், தளரக் கூடாது என்பதை வலியுறுத்துகிறார்.

ஒரு சிலர், ''எனக்கு இந்தத் துன்பம் வந்ததால் இந்தத் தவறு செய்தேன்'' என்பார்கள். ஆனால் வள்ளுவர், ''எந்தத் துன்பம் வந்தாலும் நீ தவறு செயயக்கூடாது'' என்கிறார்.

''நீ ஒரு நாள் அல்ல, ஒரு மாதமல்ல, பத்து மாதங்கள் இருந்த தாயின் வயிறு பசியினால் துன்புற்றாலும், தவறு செய்யக் கூடாது'' என்கிறார்.

''ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (குறள் 656)

என்கிறார். இவ்வாறு 'செய்யற்க' என்று பல குறளில் கூறுகிறார். இலம் என்று வெஃகுதல் செய்யற்க.... தன்னுயிர் நீப்பினும் செய்யற்க.....என்று பல குறள்களில் கூறுகிறார்.

செய்ய வேண்டும் என்பதை
''துன்பம் உறவரினும் செய்க......

''பொருள்கருவி, காலம்வினை, இடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். (675)

''முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.'' (676)

''ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்''. (673)

என்று செய்ய வேண்டுவன எவை எவை என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

எனவே மக்கள் அனைவரும் செயலில் இறங்க வேண்டும்.

மனிதனுக்கு மட்டுமே கை உள்ளது. யானைக்கும் (துதிக்)கை உண்டல்லவா? குரங்குக்கும் கை உள்ளதல்லவா? என்கிறார்கள்; யானைக்குத் துதிக்கை இருந்தாலும் அதனைக் கொண்டு பிறருக்குக் கொடுக்கப் பயன்படுத்துவதில்லை. தான் சாப்பிடுவதற்கு மட்டுமே பயன்படுத்துகிறது. இந்த விலங்குகளுக்கு இருக்கும் கை பறிப்பதற்கு மட்டுமே! மனிதனின் கை மட்டுமே கொடுப்பதற்கு உதவும் கை!

எனவே மனிதன் உயர்ந்தவன். அறம் செய்யப் பிறந்தவன். எனவே அறம் செய்ய வேண்டும். தெரிந்து தெளிந்து செயற்பட வேண்டும்.

**(சென்னை அண்ணாநகர் தமிழ்ச்சங்கத்தின் சார்பில், வள்ளியம்மாள் பள்ளியில் 10-4-88 அன்று ஆற்றிய உரையிலிருந்து). தொகுப்பு: சி. வெற்றிவேல்**

# இனியொரு விதி செய்வோம்

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சைக்கிள்கடை வைத்துப் பலன் பெற்றவரின் அனுபவம் இங்கே விளக்கப்படுகிறது.**

**ம. கனகசபாபதி, இ.ஆ.ப,**
**இணைச் செயலர்,**
**ஊரக வளர்ச்சித்துறை**

திருச்சி - கரூர் நெடுஞ்சாலையில் பனைமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சென்று கொண்டிருக்கும் போது நிலவாரப்பட்டி என்ற கிராமம் நம்மை வரவேற்கிறது. சற்று இறங்கிக் காலார நடந்தால் அங்கு திருமதி ருக்மணி வைத்துள்ள வாடகை சைக்கிள் கடையைப் பார்க்கத் தவறமாட்டோம்.

சைக்கிளில் ஏற்படும் சிறிய, சிறிய பழுதுகளைச் செப்பனிட்டு, அதனால் கிடைக்கும் சொற்ப வருவாயில் காலம் கடத்தி வந்த இவருடைய கணவர், மனைவியின் பெயரில் ரூ. 7000 கடன் பெற்றார். கடன் தொகை ரூ. 4667; மானியம் ரூ. 2333.

பெற்ற தொகையைக் கொண்டு, டயர், டியூப், சைக்கிள் செப்பனிடுவதற்கான சிறிய கருவிகள், காற்றடிக்கும் பம்ப் மற்றும் 7 புதிய சைக்கிள்களும் வாங்கிக் கொண்டார்.

வாடகைக்கு அவற்றை விடுவதன் மூலம் நாள்தோறும் ரூ.15 முதல் ரூ. 18 வரை கிடைக்கிறது.

ஒரு சிறிய கட்டிடத்தில் பின் பக்கத்தைத் தங்குமிடமாகவும், சமையலறையாகவும் வைத்துக் கொண்டு, முன்புற இடத்தில் சைக்கிள் கடையை வைத்துக் கொண்டு தொழிலைத் தொடங்கியுள்ளார்.

எளிய தோற்றமானாலும், வாழ்க்கையில் தன்னம்பிக்கை மிகுந்த திருமதி ருக்மணி, ''சைக்கிள்கள் புதிதாக இருப்பதால் ஆறு மாதங்களுக்கு ரிப்பேர் வராது சார். அதற்கப்புறம் அடிக்கடி பழுது பார்க்க வேண்டியிருக்கும். அதைச் சமாளிக்க, சைக்கிள்கள் புதிதாக இருக்கும்போதே கொஞ்சம் பணம் சேமித்துக் கொண்டே வருகிறோம். அதைக் கொண்டு பிறகு உதிரிப் பொருள்கள் வாங்கி, பொருத்தி, செப்பனிட்டு, தொழிலுக்குத் தடங்கலின்றிப் பார்த்துக் கொள்வோம்'' என்றார்.

மூன்று மாதத்திற்கு முன்னால் தான் கடன் வசதி கிடைத்தது. கடன் தவணையை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்துகிறார்.

''முழுக்கடனையும் அடைத்த பிறகு மேலும் 10 சைக்கிள்கள் வாங்க உத்தேசம்'' என்று வருங்காலத்தைப் பற்றிக் கூறுகிறார் ருக்மணியின் கணவர்.

சமுதாயத்தின் மொத்தத் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றிற்கேற்ற முறையில் வேலைத் திட்டங்களை உருவாக்கி, நிதிகளை ஒதுக்கி, சமுதாயச் சொத்துக்களைத்தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டமும் உருவாக்குகின்றன.

சமுதாயத்தின் அங்கமாகிய தனி மனிதனின் தேவைகளைத் தீர்க்க உருவாக்கப் பட்டதே ''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகும்.''

கிராம மக்களின் முன்னேற்றம் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியைச் சார்ந்தது.

அத்தகைய வளர்ச்சியை, ஏழையின் வாழ்விலே உண்டாக்குவதே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய இத்திட்டத்தில், ''தொழில்,சேவை, வணிகம்'' என்பதும் ஓர் அம்சமாகும்.

எந்த ஒரு தொழிலும் தெரியாதவர்கள், தொழிற் பயிற்சி பெறாதவர்கள் போன்ற ஏழைகளுக்குத் ''தொழில், சேவை, வணிகம்'' என்ற திட்டத்தில் உதவி செய்யப்படுகிறது.

சைக்கிள் வாடகைக்கு விடுதல், பெட்டிக்கடை, மாவு அரைக்கும் இயந்திரங்கள் வாங்கி மாவு அரைத்தல், சிறிய தொழிற் கூடங்களை அமைத்துக் கொள்ளுதல், ஒலி பெருக்கிக் கருவிகள் வாங்கி வாடகைக்கு விடுதல் போன்ற எண்ணற்ற தொழில்களுக்கு இத்திட்டத்தில் உதவி கிடைக்கும்.

இதற்கு அரசு, மானியமும் அளிக்கிறது. மானியம் போக, எஞ்சிய தொகைக்குச் சிறிது வட்டியுடன் வங்கியில் தவணை மூலம் திருப்பிச் செலுத்திவிடலாம்.

திருமதி ருக்மணி போன்ற எண்ணற்ற ஏழைகள் வாழ்வில் உயர்வடைவதற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் பெரிதும் துணை செய்கிறது.

''தொழில், சேவை, வணிகம்'' என்ற திட்டத்தில் 1986-87ஆம் ஆண்டில் 1,28,968 பேர்களும், 1987-88ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய 1,25,966 பேர்களும் பயனடைந்துள்ளனர்.

எந்த ஒரு தொழிலும் தெரியாதவர்கள், தொழிற் பயிற்சி பெறாதவர்கள் இத்திட்டத்தின் துணை கொண்டு வாழ்வில் உயர்வடையலாம்.



# டாக்டர் மு. வ.வின் பெருவாழ்வு

சு. திருநாவுக்கரசு

டாக்டர் மு. வ. வைத் தெரியாத தமிழர்கள் இருக்க முடியாது. அவரது பிறந்த நாள் ஏப்ரல் 25 ஆகும். அதையொட்டி அவரது சிறப்புகள் இங்கே நினைவுகூரப் படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த் தொண்டு முதன்மையான இடம் பெறுவதாகும். அவர் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்கினார். உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக அவர் திகழ்ந்தார். "மு.வ." என்ற செல்லப்பெயர் ஒலிக்காத தமிழ் இல்லங்களும் நல் உள்ளங்களும் இல்லை எனலாம்

### குடும்ப வாழ்வு

அவர், அருமை அன்னை அம்மாக் கண்ணம்மாளுக்கும், அறிவில் சிறந்த தந்தை முனிசாமி அவர்களுக்கும், செல்லப் பிள்ளையாக 25-4-1912 ஆம் ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலே பிறந்தார். அவரது தாய்வழிப்பாட்டி அவரை அன்புடன் வளர்த்தார். முதலில் அவருக்கு வழங்கிய திருப்பெயர் திருவேங்கடமாகும். 'தாத்தாவின் பெயரை இடுதல்' என்னும் குடும்ப மரபுப்படி வழங்கிய பெயர், 'வரதராசன்' என்பதாகும்.

அவர் 1935 ஆம் ஆண்டு தம் மாமா மகளான ராதா அம்மையாரை மணந்தார். அவருக்கு ஆண் மக்கள் மூவர் உள்ளனர். அவர்கள் முறையே திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகியோர் ஆவர். அம்மூவரும் மருத்துவத் துறையில் மணிகளாகத் திகழ்கின்றனர்.

### கல்வி

அவர் வேலத்திலும் வாலாஜாவிலும் தொடக்கக் கல்வியைக் கற்றார். உயர்நிலைப்பள்ளிப் படிப்பை அவர் திருப்பத்தூரில் பயின்றார். அவர் முருகைய முதலியாரிடம் தமிழ்கற்று, வித்துவான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் அவர் 1935ஆம் ஆண்டு தமிழ் வித்துவான் தேர்வு எழுதி, சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்து, ரூ. 1000 திருப்பனந்தாள் பரிசு பெற்றார். அவர் 1939இல் பி.ஓ.எல். பட்டமும், 1944இல் எம்.ஓ.எல் பட்டமும் பெற்றார். 1948ல் சென்னைப் பல்கலைக்கழகத்திலேயே முதன் முதலாகத் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவர் அவரே. 1972ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி அவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கியது. இப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ.வே ஆவார்.

### தொழில்

அவர் 1928இல் முதன் முதல் தாலுகா அலுவலகத்தில் எழுத்தராகப் பணி புரிந்தார். 1935ஆம் ஆண்டு முதல் நகராட்சி உயர் நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939 முதல் 1944 ஆம் ஆண்டு வரை டாக்டர்அ.இலட்சுமணசாமி முதலியாரின் நல்லுதவியுடன் தமிழ் விரிவுரையாளராகப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றினார். 1945ஆம் ஆண்டு அக்கல்லூரியிலேயே தமிழ்த் துறைத்தலைவர் ஆனார். இடையே ஓராண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைப் பேராசிரியராகப்பணிபுரிந்தார். அறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளையின் மறைவுக்குப் பிறகு 1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். 1971 முதல் 1974ஆம் ஆண்டுவரை மதுரைப் பல்கலைக் கழகத்தின் புகழ் மிக்க-இணையற்ற துணைவேந்தராகப் பணிபுரிந்தார்.



அவர் பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் சென்னை, வெங்கடேசுவரா, அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களின் பேரவை (செனட்) அங்கத்தினராக இருந்தார். மேலும் கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, டில்லி, கேம்பிரிட்ஜ், மதுரை முதலிய பல்கலைக் கழகங்களின் பாடத் திட்டக் குழுவில் இருந்தார். இலங்கை, மலாயா, காசி, உத்கல் முதலிய பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

அவர் புதுடெல்லியில் உள்ள சாகித்திய அகாடெமி, தேசியப் புத்தகக்குழு, இந்திய மொழிக்குழு, சென்னைப் பல்கலைக்கழகம் தயாரித்த ஆங்கிலம், தமிழ் அகராதிக் குழு, நாட்டுப்புறப் பாடல்களும் நாட்டுப்புற நடனங்களும் பற்றிய குழு முதலியவற்றில் அங்கம் வகித்தார்.

அவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக்குழுவிலும், ஆந்திரப்பிரதேச அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிலும், மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிலும், மகாராட்டிர சமிதி மண்டலத்திலும் பங்கு கொண்டிருந்தார்.

தமிழ்நாடு புத்தக வெளியீட்டுக் கழகம், ஆட்சி மொழிக் குழு, ஆட்சி மொழிச் சட்டக்குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்க் கலை

மன்றம், தமிழிசைச் சங்கம், மாநில வரலாற்றுக் கழகம், தமிழ் கலைக் களஞ்சியம், தமிழகப் புலவர்க்குழு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முதலியவற்றில் பங்கு கொண்டு சிறந்த தொண்டாற்றினார்.

## பன்மொழிப் புலமை

அவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் இந்தி முதலிய மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

## உலகம் சுற்றிய முதல் தமிழ்ப் பேராசிரியர்

அவர் ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரிஸ், இலங்கை, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, கிரேக்கம், எகிப்து, அமெரிக்கா முதலிய நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார்.

## தோற்றப் பொலிவு

எழில் மிக்க எடுப்பான தோற்றம், புன்னகை பூத்துப் பொலிவோடு விளங்கிய முகம், அறிவு முதிர்ச்சிக்கு அடையாளமான அகன்ற நெற்றி, அன்பும் அறிவும் சுழல் விளக்குப்போல சுடர் விட்டுப் பொங்கும் கண்கள், எடுப்பான கூரிய மூக்கு, உடல் நலம்நாட்டும் அழகான பற்கள், நீண்ட மெல்லிய கைகள், பெண்மையின் மென்மை ஓடும் உடல், எண்ணங்களை எல்லாம் எழுத்தாக்கிய பரந்த நெஞ்சம் உடையவராக அவர் விளங்கினார்.

## தனிப் பண்புகள்

அவர் மனத்தால் கூடப் பிறருக்குத் தீங்கு எண்ணாமல் சான்றோராக வாழ்ந்தார்.

ஒன்றனை இழந்தாலோ அல்லது தொலைத்துவிட்டாலோ அதற்காக அவர் கவலைப்பட்டதில்லை. காரணம், அதனால் பயன் இல்லை என்பது அவரது கருத்து. வீணாக வருந்தும் நேரத்தை வேறு ஆக்க வேலைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதே அவரது கொள்கை.

அவர், கடமையை ஒருபோதும் மறந்ததில்லை; செய்வன திருந்தச் செய்தார்: காலத்தைப் பொன் போலப் போற்றினார். அவர் எண்ணத்தால், எழுத்தால், செயலால், சொல்லால், பலருக்கு ''நல்வாழ்வு'' தந்து உலகக் குடிமகனாக உயர்ந்தார்.

## பெருமகன் போற்றிய பெருமக்கள்

காந்தியடிகள், திரு.வி.க., தாயுமானவர், இராமதீர்த்தர், இராமலிங்க சுவாமிகள், இராமகிருஷ்ணர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், கவிஞர் தாகூர், காண்டேகர், பெர்னாட்ஷா, சாமர் செட் மாம் முதலியோர் அவர் விரும்பிப் போற்றிய பெருமக்கள் ஆவர்.

## உயிருள்ள படைப்புகள்

தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய அவர், 62 வயதில் 85 நூல்கள் எழுதி இணையிலாப் புகழ் பெற்றார். பல்வகையான முதல்தரமான நூல்களைத் தந்த தமிழ்ச் சுரங்கமாக அவர் விளங்கினார்.

'தமிழ் இலக்கியத் துறையில் தலையாய தொண்டாற்றியவர்' என்று அவருக்குச் சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவின் போது, சென்னை அரசாங்கம் பாராட்டி நடராசர் உருவம் பொறித்த ஒரு செப்புக் கேடயத்தினை 15.8.1957 அன்று பரிசு அளித்தது.

## பிற மொழிகளில் அவரது நூல்கள்

அவரது உயிரோட்டமுள்ள புகழ்மிக்க நூல்கள் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

## மறைவு

உயிரோவியங்கள் பல படைத்துப் பிறர் உள்ளங்களைக் கவர்ந்த அவரது உடம்பு 10-10-1974ஆம் ஆண்டு சென்னையில் மறைந்தது.

இளங்கோவடிகள் போன்ற புலவர்களின் உடப்பு மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், அவர்களுடைய எழுத்துக்கள் உள்ள வரையில் இந்த உலகில் அவர்களுக்குப் புகழார்ந்த வாழ்வு உண்டு.

கலைகளுள் எழுத்துக் கலைக்குத் தனி ஆற்றல் உண்டு. காலம் கடந்து வாழும் பண்பு எழுத்துக் கலைக்கே மிகுதியாகும். எனவே மு.வ.வின் புகழ் என்றுமுள தென்தமிழ் போல் விளங்கும். அவரது இன்பத்தமிழ் நூல்களின் வாயிலாக, செந்தமிழ்த் தேனைப்பருகும் வாய்ப்பு எங்கும் எவர்க்கும் என்றுமே உண்டு. அவை அவரது புகழ் விளக்காய் மங்கா ஒளிவீசி என்றென்றும் விளங்கும். ●

## சென்னை நகரில் புதிதாக 150 பஸ் சர்வீஸ்கள்

சென்னை மாநகர மக்களுக்குத் தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாகப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் 'வி' மற்றும் 'ஜே' சர்வீஸ்களில் கூடுதலாக 150 பஸ்களை 13.4.88 முதல் இயக்குகிறது. புதிதாக 13 வழித்தடங்களில் மொத்தம் நூறு பஸ்களும், ஏற்கனவே உள்ள 21 வழித் தடங்களில் மொத்தம் ஐம்பது பஸ்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



# அறப்புரட்சிக்கு வித்திடும்

# தொழிலாளர் இயக்கம்

## தமிழ்த்தென்றல் திரு.வி.க.

●●●

**இந்தியாவிலேயே முதன் முதலில் தொழிற் சங்கம் உருவாகியது சென்னையில் தான். இதன் தோற்றத்துக்குக் காரணமானவர் தமிழ்த்தென்றல் திரு. வி. க. ஆவார். தொழிலாளர் இயக்கம் குறித்து அவரது விளக்கவுரை இங்கே இடம் பெறுகிறது.**

●●●

எனதுவாழ்க்கை, தொடக்கத்தில் சமயப்பணியில் ஈடுபட்டது. அதனால் பல சமய ஆராய்ச்சிப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சி பொதுமை உணர்ச்சியை உண்டாக்கியது. சமயங்களின் அடிப்படையாயுள்ள பொதுமை -சமரசம் ஏன் உலகில் பரவவில்லை என்று யான் எண்ணுவேன்; சிற்சிலபோது ஆழ எண்ணுவேன். எனக்கு ஒன்றும் விளங்குவதில்லை. சிங்காரவேல் செட்டியார் கூட்டுறவு சிறிது விளக்கஞ்செய்தது. அவ் விளக்கம், பொதுமையை உலகில் பரப்பி நிலை பெறுத்தவல்லது காரல் மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் இடம் பெறச் செய்தது.

காந்தியடிகளின் அஹிம்ஸா தர்மத்தில் என் மனம் சென்றது. 'அஹிம்ஸை நல்லதே. அது வெறும் தத்துவ உலகிலும், கவி உலகிலும் நிலவிக் கொண்டிருக்கும்; வாழ்க்கை உலகில் ஒன்றி நிலவுமா?' என்று ஐயுறுவேன். சிலவேளை ஐயம் முனைத்தெழுந்து என் நெஞ்சைத் துளைக்கும். துளைப்பு, சிற்சில சமயம் மனநோயையும் உண்டுபண்ணும். அந்நோயைப்போக்க, மார்க்ஸ் மருத்துவராய் என் மானத உலகில் தோன்றுவர். மார்க்ஸ் அருளியுள்ள கொள்கை உலகில் பரவினால் வாழ்க்கை அஹிம்சையில் ஒன்றுவதாகும் என்னும் நுட்பம் எனக்குச் செவ்வனே விளங்கியது.

ஒரே வயிற்றில் பிறந்தவர் பொருளைக் குறித்துப் போரிடுவதும், மன்றம் ஏறுவதும் என் உள்ளத்தைப் புண்படுத்தும். உடன் பிறந்தவரிடத்தில் போர் மூட்டாத- அவரை மன்றம் ஏற்றாத ஆட்சி முறை அமையுமா என்று ஏக்குறுவேன். மார்க்ஸ் நினைவு அவ்வேகத்தைப் போக்கும். அமைதி நினைவு தோன்றும்போதெல்லாம் மார்க்ஸ் நினைவும் உடன் தோன்றுவது வழக்கமாகியது.

மார்க்ஸ் கொள்கைக்கு ஆக்கம் தேடும் அமைப்பு தொழிலாளர் இயக்கம். அவ்வியக்கத்தில் இறங்கித் தொண்டு புரியக் கீர் ஹார்டியின் காட்சியும், 'வேங்கடேச குணாமிர்த வருஷணி சபை'யின் அழைப்பும் துணை நின்றன. வாழ்க்கையில் என்னென்னவோ மாறுதலும் வளர்ச்சியும் நிகழ்கின்றன! அவ்விசித்திரத்தை யான் என்ன என்று விளம்புவேன்?

'மார்க்ஸியம் பொருட் பொதுமையை அறிவுறுத்தும் நாத்திக மன்றோ?' என்று சிலர் என்னைக் கேட்பதுண்டு. மார்க்ஸியம் என்று சிலர் நாத்திகப் பிரசாரஞ் செய்வதும் எனக்குத் தெரியும். என் மனத்துக்கு மார்க்ஸியம் நாத்திகமாகத் தோன்றவில்லை. எப்படி?



மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும். புத்தர் தர்மமும், அருகர் அஹிம்சையும், கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சிணாமுர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை. அப்பொதுமை அறம் ஏன் ஓங்கவில்லை? சில தடைகள் மறிக்கின்றன. அவை யாவை? சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி வழக்கவொழுக்கங்கள் முதலியன. இவற்றைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி -தொழிலாளி வேற்றுமை. இவ்வேற்றுமையை ஒழிக்க வல்லது பொருட் பொதுமை; பொருட் பொதுமை மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், பிறவும், மன்பதையில் கால் கொள்வதற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்தது என்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது. அதனால் மார்க்ஸியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

உலகம் போராட்டத்துக்கு இரையாதல் கண்கூடு. மூலம் என்ன? இது குறித்துத் தனித்தனி ஆராய்ச்சி செய்தவர் பலர். அவருள் சிறந்தவர் காரல் மார்க்ஸ். உலகப் போராட்டத்துக்கு மூலமாக நிற்பது முதலாளி- தொழிலாளி என்னும் வேற்றுமை உணர்வென்பது மார்க்ஸ் கண்ட உண்மை. இது நடுநிலையில் நின்று போர்மூலத்தை ஆராயும் ஒவ்வோர் அறிஞர்க்கும் எளிதில் புலனாகும்.

பண்டை நாளில் சாம்ராஜ்யங்கள் பெருகவில்லை. அதனால் முதலாளி-தொழிலாளி உணர்வு வளராமற் கிடந்தது. இந்நாளில் சாம்ராஜ்யங்கள் பெருகியுள்ளன. அப்பெருக்கம் முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வை வளர்ப்பதாயிற்று. அவ் வளர்ச்சி வாழ்க்கையில் போராட்டத்தைப் புகுத்தியது. போராட்டத்தை ஒழிக்கும் மருந்து காரல் மார்க்ஸுக்குக் கிடைத்தது. அது, பொதுமை அறத்தை நிலைபெறுத்தவல்ல பொருளாதார சமரசம்.

மார்க்ஸ் கண்ட பொருட்பொதுமை, உலகில் புற அமைதியை நிலவச் செய்யும் மாண்புடையது. அக அமைதியை மகம்மது, கிறிஸ்து, அருகர், புத்தர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கை நிலைபெறச் செய்யும். அக அமைதிக்குப் புற அமைதி வேண்டற்பாலது. புற அமைதியை உலகில் நிலவச்செய்யும் வல்லமை வாய்ந்த மார்க்ஸியத்தை நாத்திகம் என்று எப்படித் தள்ளுவது? மார்க்ஸியத்தைத் தள்ளுவது சான்றோரின் அமைதிச் செல்வத்தைத் தள்ளுவதாகும், போராட்டத்தை அழைப்பதாகும்.

சான்றோர் அருளிய பொதுமை அறத்துக்கு ஆக்கந்தேடவே யான் மார்க்ஸின் பொருட்பொதுமைக் கொள்கையைத் தழுவுகிறேன். மார்க்ஸியத்தைச் சான்றோரின் மூலக்கொள்கைக்கு மாறாகப் பயன்படுத்தும் இயக்கங்களில் என்மனம் ஈடுபடுவதில்லை.

மார்க்ஸியம் முழுமையதா? குறையுடையதா? எதிலுங் குறையுண்டு; மார்க்ஸியத்திலுஞ் சிறு குறையுண்டு, என்ன குறை? அதன்கண் 'சத்' என்னுஞ் செம்பொருள் வெளிப்படையாகக்காணப்படாமை. மார்க்ஸியத்தில் 'சத்' என்னுஞ் செம்பொருள் சேர்ந்தால் அது நிறைவுடையதாகும்.

மார்க்ஸியம் சமதர்மத்தை அறிவுறுத்துவது; சமதர்மத்தில் 'சத்' தானே சேரும். 'சத்' தைக் கொண்ட சமதர்மமே சன்மார்க்க மென்பது. சன்மார்க்கம் எது? மார்க்ஸியமும், மகம்மது, கிறிஸ்து, புத்தர், அருகர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கையுஞ் சேர்ந்த ஒன்று சன்மார்க்கம். இஃது எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவங்களினின்றும் கனிந்த உண்மை.

முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வு சன்மார்க்கத்தை வளர விடாது. சன்மார்க்க வளர்ச்சிக்கு முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வு பொன்றியே தீர்தல் வேண்டும். வேற்றுமை உணர்வு எப்படிப் பொன்றும்? இதற்குப் புரட்சி தேவை. புரட்சிக்கு உரியது தொழிலாளர் இயக்கம் என்று சொல்லவேண்டுவதில்லை ஆதலின் யான் புரட்சி மனப்பான்மையுடன் தொழிலாளர் இயக்கத்தில் இறங்கினேன்.

புரட்சி இருவகை. ஒன்று அறவழியில் நிகழ்வது; மற்றொன்று மறவழியில் நிகழ்வது. அஃது அறப்புரட்சி. இது மறப்புரட்சி. உலகைச் சீர் செய்ய அறப் புரட்சி இடம் பெறாத வேளையில், மறப் புரட்சி அவ்விடத்தில் தானே நுழையும். இரண்டாலும் விளையும் பயன் ஒன்றாகுமா? ஒல்லும் வகை அறப் புரட்சிக்கு இடம் தருவதே அறிவுடைமை; இல்லையேல் மறப் புரட்சி எழும். எனது மனத்துக்கு இயைந்தது அறப்புரட்சியே. அறப்புரட்சி வாயிலாகச் சன்மார்க்கத்தை ஓம்பவே யான் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டேன்.

இந்நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இருபத்தைந்து ஆண்டு அநுபவம் எனக்குண்டு. புரட்சி நிகழ்ந்ததோ? இல்லை என்றே சொல்வேன். ஓரோவழி நிகழ்ந்ததென்று சொல்லுதல் கூடும். புரட்சி ஏன் உச்ச நிலையை அடையவில்லை? சாதி மத வெறி, சம்பிரதாயக் கட்டு, மூட வழக்க வொழுக்கம், மூர்க்கப் பிடிவாதம், முதலாளி அமைப்புக்களில் மோகம், தலைமைப் போராட்டம், விட்டுக் கொடுத்தல் இன்மை முதலிய தளைகள் புரட்சியைத் தகைத்து நிற்கின்றன என்று எனது அனுபவம் சொல்கிறது. இத்தளைகளை உடைத்தெறியத் தோன்றிய இயக்கங்கள் பலப்பல. அவற்றுள் சிறந்தது தொழிலாளர் இயக்கம், இது தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டவர்க்கு வியப்பாகத் தோன்றாது.

**[1944ல் வெளிவந்த திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பு என்னும் நூலிலிருந்து]**

## பார்த்தோம்-படித்தோம்

1-4-88 இதழில் வெளிவந்த சென்னை மேயர் சத்தியமூர்த்தி பற்றிய செய்திகள் மிகவும் நன்றாக இருந்தன. சென்னை நகரத்தின் முதல் குடிமகன் என்றில்லாமல், நகரத்தின் முதல் சேவகன் என்று அவர் தன்னை அழைத்துக் கொண்டது, அதில் மிகவும் சிறப்பாக அமைந்த ஒன்றாகும்.

—பி. ரமேஷ்
வந்தவாசி.

'தெரிந்து கொள்ளுங்கள்' பகுதியில், எனக்குத் தெரியாத பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

—ப. ஷேக் அலாவுதீன்
திருநெல்விக்காவல்.

வானொலியில் புதிய தொடர்கள் பற்றிய அறிவிப்புகள் பயனுள்ளவையாக இருந்தன.

—ப. அ. சண்முகம்
களம்பூர்.

'நூல் நயம்' பகுதியில், 'ஜகத்குரு நூற்றாண்டு விழா மலர்' குறித்து வெளிவந்த மதிப்புரை மிகவும் பாராட்டுவதற்குரியது. 'தமிழரசு' அரிய பல கருத்துக்களுடன், புதுப்பொலிவுடன் வெளிவந்து கொண்டிருக்கிறது.

—சுவாமி விமலானந்தன்,
மதுரை.

'நூல் நயம்' பகுதியில், பெரியவர் இராமமூர்த்தி எழுதிய, 'கர்மம் அது ஒரு தர்மம்' என்னும் நூலுக்கு வெளி வந்த மதிப்புரையைக் கண்டேன். அன்றாட வாழ்க்கையில் எல்லோருக்கும் உதவக் கூடிய நல்ல கருத்துக்களைத் தெரியப்படுத்தியுள்ளீர்கள்.

—எஸ். நாராயணமூர்த்தி
சேலம்-1.

குறிப்பு:

இதேபோல இந்த மதிப்புரையைப் பாராட்டி ஏராளமான வாசகர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள்.

தமிழரசின் மூலம் அரசின் திட்டங்களை - சலுகைகளை - குறிப்பாக ஊனமுற்றோருக்கான சலுகைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டேன். 'அன்னை இந்திரா காந்தியின் பொன்மொழிகள்' வெளியிட்டமைக்கு நன்றி.

—ஏ. எஸ். முருகன்,
மதுரை.

# தமிழ்நாடு அரசின் முக்கிய பணிகள் ஒரு தொகுப்பு

## திட்டச் செலவுகளுக்குக் கூடுதல் ஒதுக்கீடு

1988-89 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையில் திட்டச் செலவுகளுக்காக ரூபாய் 1,457 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை மத்திய திட்டக் குழு அறிவித்தது. கடந்த ஆண்டை விட இது 16.5 சதவீதம் அதிகம். (12.2.88)


## காவிரி நீர் தர கர்நாடக அரசு இசைவு

தஞ்சைப் பாசனப் பகுதிக்குக் காவிரி நீர் பெறத் தமிழகஅரசு மேற்கொண்ட முயற்சி வெற்றி பெற்றதால் நான்கு டி.எம்.சி. தண்ணீர் விடுவதற்குக் கர்நாடக அரசு இசைவு தெரிவித்தது. (17.2.88)

## நெசவாளர் துயர் தீர்க்க வேண்டுகோள்

நூல் தட்டுப்பாடு காரணமாகத் தமிழக நெசவாளர்கள் வேலையின்றித் தவிப்பதைத் தடுக்க, நூல் ஏற்றுமதிக்குத் தடைவிதிக்குமாறும், செயற்கை இழைநூல் இறக்குமதியை அனுமதிக்குமாறும் ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ.பத்மநாபன் மத்திய அரசுக்குத் தந்தி கொடுத்தார். மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்த தமிழகஅரசின் கைத்தறி ஜவுளி கமிசனர் டில்லி சென்றார்.

அதிக நூல் உற்பத்தி செய்யும் ஆலைகளுக்குக் கூடுதலாக மின்விசை வழங்க தமிழ்நாடு மின் வாரியம் முன்வந்தது. (24.2.88)



## வளர்ச்சிப் பணிகளில் முனைப்பு

முக்கிய வளர்ச்சித் திட்டங்களும் இதர பணிகளும் சீராகவும் செம்மையாகவும் நடைபெறுவதைக் கண்காணிக்கத் தமிழ்நாடு 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு சிறப்பு ஆணையரின் மேற்பார்வையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. (24.2.88)

## மாநகராட்சி அலுவலகத்தில் ஆளுநர்

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் சென்னை மாநகராட்சி அலுவலகம் சென்று மாநகராட்சிப் பிரச்சினைகள் குறித்து உயர் அலுவலர்களுடன் விவாதித்தார். சென்னை மாநகரைத் தூய்மைப்படுத்த இயக்கம் தொடங்கப்படும் என்று அறிவித்தார். (24.2.88)

## கல்லூரி ஆசிரியர் மீதான வழக்குகள் வாபஸ்

(குறிப்பிட்ட சில குற்றவியல் வழக்குகள் தவிர)

கல்லூரி ஆசிரியர் கிளர்ச்சியின்போது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப்படும் என்று அரசு அறிவித்தது. (26.2.88)

## சென்னை மாநகரின் துப்புரவுப்பணி


ஆளுநர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, சென்னை மாநகரின் தீவிர துப்புரவுப்பணி 2.3.88 அன்று தொடங்கியது. முதல்கட்டமாக 30 வட்டங்களில் வட்டத்துக்கு 80 சிறப்பு ஊழியர் ஒதுக்கப்பட்டுள்ளனர். நடைபாதைக் கட்டுமானங்கள் அகற்றப்பட்டன. குப்பை, கழிவுப் பொருள் அகற்றப்பட்டன. சாக்கடைகள் சுத்தம் செய்யப்பட்டுப் பூச்சிமருந்து தெளிக்கப்பட்டது. (2.3.88)

## தமிழகத்தில் கூடுதல் அரிசி ஒதுக்கீடு

தமிழக அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, இதுவரை மாதம் 50 ஆயிரம் டன்னாக இருந்த மத்திய ஒதுக்கீடு பிப்ரவரி முதல் 80 ஆயிரம் டன்னாக அதிகரிக்கப்பட்டது. குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்கும் ஏற்பாட்டில் உள்ளகுறைகளை உடனே களைய அரசு உறுதியளித்தது. (3.3.88)

## நிர்வாகத்தில் முனைப்பு ஏற்படுத்தும் முயற்சிகள்

நிர்வாகத்தில் முனைப்பு ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக இரண்டாவது மட்டத்திலுள்ள அரசு அதிகாரிகளின் மாற்றம், பணி ஒதுக்கீடு தொடர்பாக சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்களே நடவடிக்கை எடுக்கலாம் என அரசு அறிவித்துள்ளது. (3.3.88)




## நெசவாளர் துயர் தீர நடவடிக்கை

நூல்களைப் பதுக்குவதைத் தடுக்கவும், நூல் மற்றும் பருத்தி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், பருத்தி நூல் விலையைக் குறைக்க நூலைச் சரிவர விநியோகிக்கவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்க கைத்தறி மற்றும் ஜவுளி இயக்குநருக்குத் தமிழ்நாடு அரசு அதிகாரம் அளித்துள்ளது. அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு கைத்தறி மற்றும் ஜவுளி இயக்குநர் வாயிலாக ஆலைகள் 5 ஆயிரம் பேல்கள் பருத்தி நூலை நெசவாளருக்கு வழங்கும். 4.54 கிலோ எடையுள்ள பண்டில் ஒன்று ரூ.12க்கு விற்கப்படும்.

இதனால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட ஆலைகளுக்கு அரசு கூடுதல் மின்சாரம் வழங்கும்.

கோவையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனம் 25 டன் விஸ்கோஸ் இழைகளை இரு மாதங்களுக்கு வழங்கும். விநியோகஸ்தர்களுக்குக் கொடுப்பதைவிட பத்து சதவீதம் விலையில் குறைத்து வழங்கப்படும். *(3.3.88)*

## கிராமப்புற வளர்ச்சிக்கு அதிக முன்னுரிமை

பல்வேறு கிராம நலத்திட்டங்கள் உரிய பயன் கிடைக்கும் வகையில் சீரமைக்கப்படும் என்று ஆளுநர் அறிவித்தார். புதுடில்லி சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்துவிட்டுச் சென்னை திரும்பிய ஆளுநர் மேலும் கூறியதாவது:

'குடிநீர் வழங்கல், பொதுவிநியோக முறை வாயிலாகப் பொருள்கள் வழங்குவது, துறைத்தலைவர்கள் மட்டத்தில் அதிகாரத்தைப் பரவலாக்குவது தாழ்த்தப்பட்டோர் மலைவாசிகளுக்கான சேமநலத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவது பற்றிப் பிரதமரிடம் விளக்கிப் பிரதமரின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கேட்டேன். பிரதமர் முழு ஒத்துழைப்புத் தருவதாக வாக்களித்தார்.'

அன்றாடம் மக்களைச் சந்தித்து அவர்களுடைய விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் கூறினார். *(8.3.88)*

## தக்கார்கள் நீக்கம்

இந்துமத அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆலயங்கள் மற்றும் அறநிலையங்கள் பொறுப்பிலுள்ள தக்கார்கள் நீக்கப்பட்டு, அறநிலையத்துறை அலுவலர்களின் பொறுப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. நிர்வாகத்திறன், சிக்கனம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசு அறிவித்தது. *(8.3.88)*

## வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகள்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோள்களைப் பரிசீலித்த அரசு பின்வரும் சலுகைகளை வழங்கியுள்ளது.

1. *1988* பிப்ரவரி வரை செலுத்தப்படாத மின்கட்டணப் பாக்கியைச் செலுத்த ஆகஸ்ட் *30* வரை தவணை தரப்படுகிறது.

2. *1988* பிப்ரவரி வரையுள்ள மின்கட்டணப் பாக்கிக்காக மின் இணைப்பு துண்டிக்கப்படமாட்டாது.

3. பிப்ரவரியில் செலுத்தப்பட வேண்டிய ஆறுமாத நிலுவைக்காகத் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு மீண்டும் கொடுக்கப்படும்.

4. மேலே குறிப்பிடப்பட்டதல்லாமல் வேறு நீண்ட காலப் பாக்கிக்காக, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்குமானால் *29.2.1988* வரை பாக்கியுள்ள தொகையில் பாதித் தொகையைச் செலுத்தினால், மின் இணைப்பு மீண்டும் கொடுக்கப்படும்.

மின் இணைப்புத் துண்டிக்கப்படாத நிலையில் உள்ள மின் இணைப்புக்கள் தொடர்பானவற்றில் *29.2.88* வரை செலுத்த வேண்டிய தொகையில் பாதியை மார்ச் *31*க்குள் செலுத்தினால் அவர்களுக்கு நிலுவைத் தொகையைச் செலுத்த மே *31* வரை தவணை தரப்படும்.

இச்சலுகை மின்விசைச் திருட்டுப் போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கு இல்லை.

5. நிலவரி, அபராதம், உள்ளூர்வரிகள், பாசனவரி, கூடுதல் மதிப்பீட்டுவரி, கூடு



தல் பாசனவரி, சிறப்புப் பாசனத் திட்ட வரி, அபிவிருத்திவரி போன்ற வரிகளை வசூலிப்பதில் ஜப்தி நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படும். இயல்பான வரி வசூல் முறை தொடரும்.

6. கூட்டுறவுக் கடன்களை வசூலிக்க எவ்விதக் கடுமையான முறையும் மேற்கொள்ளப்படமாட்டாது. இயல்பான முறைகளேகடைப்பிடிக்கப்படும். (10.3.88)

## தமிழகத்தில் நலிந்த தொழில்காக்க நலத்திட்டங்கள்

நலிந்த நிலையிலுள்ள சிறுதொழில்களைச் சீரான முறையில் இயக்கிட உடனடியாகப் பல முனைத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு செயற்படுத்தும். (10.3.88)

## சென்னைக் குடிநீர் ரூ. 7 கோடித் திட்டம்

சென்னை நகரில் கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக, சுமார் 7 கோடி ரூபாய் செலவில் அவசரகாலத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. (10.3.88)

மாநகரின் கடைமடைப் பகுதிகளில் உள்ளவர்களுக்குக்கூட தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் தவிர்க்க லாரிகள் மூலம் தண்ணீர் உறுதி செய்யப்படுகிறது. (11.3.88)

## 83 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்படும்

ஒரு கோடியே 17 லட்சம் ரூபாய் செலவில் நடப்பு ஆண்டில் கூடுதலாக 83 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தமிழகத்தில் திறப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. (11.3.88)

## ரேஷன் கடைகளில் ஒரே நாளில் எல்லாப் பண்டங்களும் கிடைக்க ஏற்பாடு

பொது விநியோகத்திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையா உணவுப் பண்டங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாளில் கிடைக்கச் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (11.3.88)







## குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க 28 பெரும் திட்டங்கள்

தமிழ்நாட்டில் நிரந்தர வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் நிலத்தடி நீர் எடுக்கவும், குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும் 250 கோடி ரூபாய் செலவில் 28 பெரும் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (14.3.88)

## சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிய கட்டடங்கள்

சென்னை உயர் நீதிமன்றத்தில் 4½ கோடி ரூபாய் மதிப்பீட்டில், நீதிபதிகளுக்கு அறைகள், விசாரணை மண்டபம், வழக்கறிஞர்களுக்கு அறைகள் கட்டப்படும். (14.3.88)

## மாநில அரசு அலுவலகங்களில் முழு அளவில் தமிழ்

மாநில அரசு அலுவலகங்கள், தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆட்சி மொழியாகத் தமிழை முழு அளவில் பயன்படுத்த நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (14.3.88)

## கோப்பு குவியல்கள் துரித பைசல்


தேங்கிக் கிடந்த சுமார் 3,500 பழைய கோப்புகள் அனைத்தும் பைசல் செய்யப்பட்டுவிட்டன. (16.3.88)

## தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 1988-89ஆம் ஆண்டு—சில முக்கிய அம்சங்கள்

சென்ற ஆண்டு ஒதுக்கீட்டைக் காட்டிலும் கூடுதல் ஒதுக்கீடு பெற்ற சில துறைகள் வருமாறு;

1. வேளாண்மை: ரூபாய் 141 கோடியிலிருந்து ரூபாய் 151 கோடி
2. குடிநீர் வழங்குதல்: ரூபாய் 148 கோடியிலிருந்து ரூபாய் 160 கோடி.
3. சமூகநலம்: ரூபாய் 92 கோடியிலிருந்து ரூபாய் 97 கோடி.
4. கல்வி: ரூபாய் 597 கோடியிலிருந்து ரூபாய் 690 கோடி.
5. மருத்துவம், பொது சுகாதாரம்: ரூபாய் 228 கோடியிலிருந்து ரூபாய் 258 கோடி.
6. தொழில்: ரூபாய் 54 கோடியிலிருந்து ரூபாய் 65 கோடி.
7. மின்சாரம்: ரூபாய் 408 கோடியிலிருந்து ரூபாய் 502 கோடி.

# பெருந்தலைவர் காமராஜர் பொன்மொழிகள்



நாடு உயர்ந்தால் நாம் உயர்வோம். இதற்கு வேற்றுமை மனப்பான்மை இல்லாமல், காந்திஜி காட்டிய வழியில் பணிபுரிய வேண்டும்.

நாட்டின் ஒற்றுமையும் ஐக்கிய மனோபாவமும் மிகவும் முக்கியம். தேசம் முழுவதும் உள்ள இயற்கை வளம் எல்லா மக்களுக்கும் பயன்பட இம்மனோபாவம் இல்லாவிட்டால் முடியாது.

எந்தச் சிக்கலுக்கும் ஜனநாயக முறையில், அமைதியான முறையில் தீர்வு காண முடியும். அமைதியைக் காப்பதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு.

மக்களுக்காகப் போடப்படும் அடிப்படையான முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் கட்சிப்பூசல்களோ, மற்ற சாதி மத பேதங்களோ, மொழிச் சிக்கலோ, குறுக்கிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டில் உள்ள பஞ்சம், பசி, பட்டினி, பிணி, வேலையின்மை ஆகியவற்றைப் போக்குவது ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமான வேலை அல்ல; அரசாங்கத்தின் கடமை மட்டும் அல்ல; மக்களுடைய பிரச்சினை; அதாவது தேசியப் பிரச்சினை.

நம்முடைய நாட்டிற்கு இப்போது உழைப்புதான் தேவை. இதை நாம் நன்கு உணர்ந்து, பணியாற்றினால், இப்போதுள்ள தொல்லைகள் அனைத்தும் நம்மை விட்டு நீங்கும்.

ஒழுங்காகவும், கட்டுப்பாட்டுடனும் இருந்தால், நாம் யாருக்கும் அஞ்சத் தேவை இல்லை. வேற்றுமைகள் இருக்கலாம். இருந்தாலும், பொது நன்மையை மனத்தில் கொண்டால், இந்த வேற்றுமைகள் தாமாகவே மறைந்துவிடும்.

தாய்மார்கள் படித்துவிட்டால், நாட்டிலுள்ள தொந்தரவுகள் போய்விடும். நாம் சம்பாதித்த சுதந்திரம் நல்ல முறையில் பாதுகாக்கப்படும்.

பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

சமதர்மம் என்றால், ஏழ்மையைச் சமமாகப் பகிர்ந்து கொடுப்பது என்பது அர்த்தமல்ல; மேலும் மேலும் உற்பத்தி செய்தல், அதே சமயத்தில் அதனால் ஏற்படும் செல்வம் ஒரு சிலருடைய இரும்புப் பெட்டிகளில் சென்று ஐக்கியமாகிவிடாமல், தேவையுள்ளோருக்குக் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளுதல், இவைதான் சமதர்மத்தின் அடிப்படை நோக்கங்கள்.

அப்பாவியான ஏழை மக்களை வசதி படைத்தவர்களும், கல்மனம் படைத்தவர்களும், கசக்கிப் பிழிந்துவிடாதபடி, தடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

மனிதனை மனிதன் சுரண்டி வாழாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே காந்திய இலட்சியம்.

நாடு முன்னேற வறுமையும், அறியாமையும் போகவேண்டும். இவை இரண்டும் போனாலன்றி, நாடு முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

நாட்டின் வளமும், செல்வமும் பெருக வேண்டுமானால், மக்களின் கூட்டுணர்வு மனப்பான்மை வளர வேண்டும். கூட்டு உழைப்பும், கூட்டுப் பொறுப்புணர்ச்சியுமே நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சாதனங்கள்.

சாதி, மத, இன அடிப்படையில் வெறியைத் தூண்டுகிறவர்கள் விஷயத்தில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

நாட்டில் வகுப்புத் துவேஷம், மதத் துவேஷம் அறவே ஒழிய வேண்டும். அதுதான் நம் மகாத்மாவின் உயிரைப் பலி வாங்கியது.

தொகுப்பு: வ. இராசமனோகரன்

# தொழில்

## மகாகவி பாரதியார்


இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!

மண்ணெடுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய் பயிரிடு வீரே!
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடை செய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவீர் நீரே!

# ஏழை என்றோருவன்-உலகில் இருக்கலாகாதையா

## கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை




பாடு படுபவர்க்கே—இந்தப்
பாரிடம் சொந்தமையா
காடு திருத்தி நல்ல—நாடு
காண்ப தவரலவோ?

மந்திர மோதுவதால்—எங்கும்
வயல்வி ளைவதுண்டோ?
தந்திரப் பேச்சாலே—அரிசி
சாத மாயிடுமோ?

கட்டும் ஆடையாகப்—பருத்தி
காய்த்த லிப்பதுண்டோ?
சட்டி பானையெலாம்—மண்ணில்
தாமே எழுவதுண்டோ?

மனம் திரியாமல்—காலை
மாலை யெப்பொழுதும்
குனிந்து வேலைசெய்வோர்—கும்பி
கொதிக்க லாமோ? ஐயா

வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமையா
ஏழை என்றொருவன்—உலகில்
இருக்க லாகாதையா!







# நீங்களே சொல்லுங்கள்

**பாவேந்தர் பாரதிதாசன்**

சித்திரச் சோலைகளே—உமைநன்கு
திருத்தஇப் பாரினிலே—முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே—உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இரைத்தனர் காண்கிலமே.

தாமரை பூத்த தடாகங்களே—உமைத்
தந்தஅக் காலத்திலே—எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே.


மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெலாம் வகுத்தார்—அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்.

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே—உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ—நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அலவோ?


கீர்த்திகொள் போகப் பொருட்புவியே உன்றன்
கீழிருக்கும் கடைக்கால்—எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

நீர்கனல் நல்ல நிலம்வெளி காற்றென
நின்ற இயற்கைகளே—உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!





# வாழிய வாழிய கைத்தொழில்கள் வாழிய நித்திய சத்தியமும்



நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
  கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
  இருந்திடல் உனக்கே சரியாமோ?

உழவும் தொழிலும் இல்லாமல்
  உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருந்துகளும்
  வேறுள இன்பமும் இருந்திடுமோ?

காட்டிலும் மேட்டிலும் களைப்போடு
  கஷ்டப் படுவோர் உழைப்பின்றி
வீட்டினில் சாதம் வெந்திடுமோ?
  வேறெதும் உணவைத் தந்திடுமோ?


கொல்லரும் தச்சரும் கூடாமல்
  கூடமும் மாடமும் வீடாமோ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
  காரியம் பலவினுக் கச்சாணி.

எந்திர வேலைகள் சிறந்திடவும்
  ஏற்றவன் கைத்தொழில் தெரிந்தவனே!
மந்திரத் தால் எதும் வந்திடுமோ?
  மனிதன் செய்ததே எந்திரமும்!

கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம்
  கலகம் பற்பல தீர்த்திடுவோம்
பொய்த்தொழில் யாவும் குறைந்திடவே
  பூமியில் நாமே சிறந்திடுவோம்.

ஏழை செல்வன் என்றுவரும்
  எல்லாப் பிணக்கும் நின்றுவிடும்
வாழிய வாழிய கைத்தொழில்கள்
  வாழிய நித்திய சத்தியமும்!






# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி
உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான
சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை
வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# கோவை மாவட்டத்தில்..

## நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணிகள்

சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வர நெய்யப்படும் சித்திரச் சேலைகளை, கால்களை உதைத்து, கைகளை இடித்து, காது கேட்டு, கண்களால் பார்த்து, அவயவங்களை உருக்கி உருக்கிச் செய்யும் உன்னதத் தொழில்தான் நெசவுத் தொழில். சமுதாயத்தின் மானம் காக்க ஓயாது உழைக்கும் வர்க்கமே நெசவாளர் வர்க்கம்.

பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் ''ஆளுக்கொரு வீடு'' என்ற திட்டப்படி 10 கோடி குடிசை வாழ் மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க 6வது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ரூ. 127.57 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்கவும், ரூ. 4.73 லட்சம் குடும்பங்களுக்கு வீடு கட்டவும் மத்திய அரசு மானியத் தொகை வழங்கியிருக்கின்றது.

கோவை மாவட்டத்தில் உதவி இயக்குநர் (கைத்தறி மற்றும் துணி நூல்) கட்டுப்பாட்டில் 91 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு மாவட்ட விற்பனை இணையமும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் கோவை, பம்பர், கர்நாடக சேலைவகைகள், ஏற்றுமதித் துணி வகைகள், ஈரிழைத் துண்டுகள் மற்றும் பாலியஸ்டர் துணி வகைகள் நெய்யப்படுகின்றன. 1987-88ஆம் வருடத்தில் டிசம்பர் திங்கள் முடிய ரூ. 788.52 லட்சம் மதிப்புள்ள துணி உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 844.73 லட்சம் மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இம்மண்டலத்திலுள்ள 91 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நெசவாளர் அங்கத்தினர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தினை 6 சங்கங்கள் நிறைவேற்றியுள்ளன. இவை 389 வீடுகளைக் கட்டி முடித்துள்ளன.

சொல்பண்டு நிதி மூலமாக ஒண்டிப்புதூர், கோவை தேவாங்கா, திருப்பூர், ஆலங்கொம்பு தேவாங்கா ஆகிய 4 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ஹட்கோ நிதி மூலமாக மோகனூர் சௌடாம்பிகா, மூலத்தூர் சௌடாம்பிகா ஆகிய 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் வீடுகளைக் கட்டியுள்ளன.

1984-ஆம் வருடத்திற்கு முன்பு வீடுகள் கட்டுவதற்குச் சங்கங்கள் சொந்த நிதியிலிருந்து ரூ. 1400-ம், அரசு மானியமாக ரூ. 1000-ம் ஹட்கோ கடன் மூலமாக ரூ. 5,600-ம் ஆக ரூ. 8000- மதிப்பில் வீடுகள் கட்டப்பட்டன. 1984-85ஆம் வருடத்தில் சொந்தநிதியிலிருந்து ரூ. 1440, அரசு மானியம் ரூ. 1000, ஹட்கோ கடன் மூலம் ரூ. 9,460 ஆக ரூ. 11,900 மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டன.

இனிமேல் தொடங்கவிருக்கும் சங்கங்கள் ரூ. 15,000 மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்படவுள்ளன. கோயில் வழி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 66 வீடுகளை ரூ. 8,61,000 மதிப்பிலும், கணபதி பாளையம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 82 வீடுகளை ரூ. 10,70,000 மதிப்பிலும் கட்டியுள்ளன.

அன்னை சத்தியா, பெரியாயி பாளையம் ஸ்ரீ அம்பாள், திருப்பூர் அண்ணா ஆகிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் உறுப்பினர்களுக்கு 379 வீடுகள் கட்டும் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளன.

இம்மாவட்டத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணிகள் சிறப்போடு நடைபெற்று வருகின்றன.

## அன்னூரில் குடும்ப நலச் சிறப்பு முகாம்



கோவை மாவட்டம் அன்னூரில் குடும்ப நலச் சிறப்பு முகாம் அன்னூரிலுள்ள ஆரம்பச்சுகாதார நிலையத்தில் 2 நாட்கள் நடைபெற்றது. இம்முகாமில், 302 தகுதியுள்ள மகளிர்க்குக் குடும்ப நல நவீன லேப்ராஸ்கோபிக் சிகிச்சை அளிக்கப்பட்டது.

நிறைவு விழாவிற்குத் தலைமையேற்று உரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என். கோவிந்தன், இ.ஆ.ப., அவர்கள் பேசும் போது, ''குடும்ப நலத் திட்டத்திற்கு இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடு 38,000 ஆகும். இதுவரை 34,700 பேர்களுக்குக் குடும்ப நலச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது 171வது குடும்பநலச் சிறப்புமுகாம் ஆகும். மேலும் மார்ச் திங்களுக்குள் 27 முகாம்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. குடும்ப நலத் திட்டத்தில் இம்மாவட்டம் முதன்மையான மாவட்டமாக வருமளவுக்குக் குடும்ப நலப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அரசு மாநிலத் திட்டக்குழுத் தலைவர் திரு. டி.வி. அந்தோனி இ.ஆ.ப., விழாவில் குடும்ப நலச் சிகிச்சை பெற்றவர்களுக்கு அரசின் ஊக்குவிப்புத் தொகைகளையும் மற்றும் இதர அன்பளிப்புகளையும் வழங்கிச் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 25 சதவீதம் அதிகமாகக் குடும்ப நலச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. 34 வயதில் குடும்ப நலச் சிகிச்சைகள் பெற்று வரும் நிலை மாறித் தற்போது 28 வயதிலேயே குடும்பநலச் சிகிச்சை பெறத் தாய்மார்கள் முன் வருவதன் மூலம், இத்திட்டத்தின் பயனை மக்கள் அனைவரும் அறியத் தொடங்கி விட்டார்கள் என்பது தெளிவாகின்றது. இந்தியாவிலேயே கேரள மாநிலத்திற்கு அடுத்த படியாகத் தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் 29,647 பேர் குடும்ப நலச் சிகிச்சை பெற்றிருந்தனர். ஆனால் இவ்வாண்டில் 37,128 பேர் குடும்ப நலச் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும் இக்குடும்ப நலத் திட்டம் சிறப்புற்று வெற்றி பெற அனைவரும் பாடுபட வேண்டும்''

**தில்லை கோவிந்தன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோவை மாவட்டம்.**

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏறறுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்.
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/எம்எஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

# தமிழ்நாடு உப்புக் கழகத்தின் பணிகள்

**‘உப்புக்கும் பாடி கூழுக்கும் ஓர் கவிதை ஒப்பிக்கும் என்றன் உளம்’ என்று ஔவையார் பாடினார். அந்த வழியில் உப்புக்கும் ஒரு வாரியத்தைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு உப்புக் கழகத்தின் ஒப்பற்ற பணிகள் இங்கே விவரிக்கப்படுகின்றன.**


**டி. ஸ்ரீதரன், இ.ஆ.ப.**
**தலைவர்,**
**நிருவாக இயக்குநர்,**
**தமிழ்நாடு உப்புக் கழகம்.**

1930 மார்ச் 12ஆம் நாளன்று அண்ணல் காந்தியடிகள் தண்டி உப்புச் சத்தியாக்கிரக யாத்திரையின்போது எடுத்த உப்பு கைப்பிடி அளவுதான். ஆனால், அந்தச் சம்பவம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கத்தக்க நிகழ்ச்சியாக அமைந்தது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க தண்டி யாத்திரையைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் வேதாராணியத்தில் இராஜாஜி தலைமையின் கீழ் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் வேதாரணியத்திலிருந்து 50 கி.மீ. தொலைவில் தம்பிக் கோட்டையிலுள்ள உப்பு தயாரிப்பு இடத்திற்கு விடுதலைப் போராட்ட வீரர் சர்தார் வேதரத்தினத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு உப்புக் கழகத்தைச் சேர்ந்த நமக்கு மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் அளிக்கிறது.

இம்மாநிலத்திலுள்ள பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கவும் மாநில அரசு உப்புத் தயாரிப்புக்காக 1974 ஜூலையில் தமிழ்நாடு உப்புக் கழகத்தை (டிஎஸ்எஸ்சி) ஏற்படுத்தியது. தமிழ்நாடு உப்புக் கழகத்தின் முதல் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியில் - அதாவது அம் மாவட்டத்தின் தொலைக்கோடியிலுள்ள வாலிநோக்கம் என்கிற பகுதியில் (மாரியூர் வாலிநோக்கம் உப்புத் தயாரிப்புத் திட்டம்) - இராமநாதபுரம் நகரிலிருந்து 45 கி.மீ. தொலைவில் ஏற்படுத்தப்பட்டது; இது தொழிற்சாலைகள், வேளாண் பணிகள் மற்றும் வர்த்தகப் பணிகளுக்கு முழுவதும் பயனளிக்கின்ற ஒரு திட்டமாகும். இரண்டாவது திட்-



டம், 1980 ஜூனில் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள தம்பிக் கோட்டையில் (சர்தார் வேதரத்தினம் உப்புத் தயாரிப்புத் திட்டம்) மேற்கொள்ளப்பட்டது.

**உற்பத்தியும், உற்பத்தித்திறனும்**

தமிழ்நாடு உப்புக்கழகத்தின் பத்தாண்டு செயற்பாட்டில் உற்பத்தித் திறன் கணிசமாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக உப்பு உற்பத்தி 700 டன்னிலிருந்து 60,000 டன்களுக்கு மேல் - அதாவது கிட்டத்தட்ட 90 மடங்கு அளவுக்கு உயர்ந்துள்ளது. உப்பு உற்பத்தி 1977-78 ஆகிய முதல் இரண்டு ஆண்டுகளில் 11.20 டன் / எக்டேர் என்கிற அளவிலிருந்து 1986-இல் 136 டன்/ எக்டேர் என்கிற அளவுக்கு உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சாதாரண உப்பு தூய்மை பெற்ற நிலையில் 62 முக்கியத் தொழில்களுக்குப் பயன்படுகிறது. உலகம் முழுவதிலும் 14,000க்கு மேற்பட்ட வழிகளில் பயன்படுகின்ற ஒரே பொருள் உப்புதான் என்று அமெரிக்க உப்பு நிறுவனம் தெரிவித்திருப்பதிலிருந்து, இக்கனிமம் பெருமளவிலான பயன்பாடுடையது என்பது தெரிய வரும். இதனால் உப்பு முக்கியமான 5 மூலப் பொருள்களில் ஒன்றாகக் கருதப்படுவதில் வியப்பு ஏதுமில்லை. இதனைப் போன்று பெருமளவிற்குப் பயன்பாடுடைய ஏனைய பொருட்கள் எண்ணெய், சுண்ணாம்புக்கல், நிலக்கரி, கந்தகம் ஆகும். கந்தக அமிலம், எஃகு ஆகியவற்றின் உற்பத்தி, பயன்பாட்டுடன், உப்பு உற்பத்தியும், பயன்பாடும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளத்திற்கும் முக்கியமான அளவுகோலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. உப்பு பற்றி நம்முடைய பண்டைய நூல்களிலும், கிறித்துவத் திருமறையிலும் (பைபிள்) கூறப்பட்டுள்ளது.

**தரம்**: சாதாரண உப்பைவிட, 98.5 சதவீதம் முதல் 99·5 சதவீதம் வரை மிகத் தூய்மையான, உயர்ந்த தரமுள்ள, தொழிற்சாலைப் பயனுக்கேற்ற உப்பைப் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கு இக்கழகம் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. இவ்வாறு இக்கழகம் உயர்தரத்திற்கு முக்கியத்துவம் அளித்ததன் மூலம் ஆந்திரப் பிரதேசத்தில் இரசாயனப் பொருள் உற்பத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 2247 டன் உப்புக்காக, இக்கழகத்திற்கு டன் ஒன்றுக்குச் சுமார் ரூபாய் 37 வீதம், ரூ.94,600 பூரிப்புத் தொகை கிடைத்துள்ளது. இவ்வாறு அளிக்கப்பட்ட பூரிப்புத் தொகை உப்பின் அடிப்படை விலையில் 40 சதவீதத்திற்கும் அதிகமாகும்.

**துணை உற்பத்திப் பொருள்கள்**

இக்கழகம் அதன் 12 ஆண்டு வரலாற்றில் முதன்முறையாக 4000 டன்னுக்கு அதிகமான ''ஜிப்சம்'' உப்பு தயாரித்து, தமிழ்நாடு சிமிட்டி நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. ஜிப்சம், சிமிட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான மதிப்பு வாய்ந்த மூலப் பொருளாகும். நம் மாநிலத்தில் ஜிப்சத்திற்குக் கடும் பற்றாக்குறை இருப்பதால், சிமிட்டித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

**வேலை வாய்ப்பு உருவாக்குதல்**

இத்திட்டங்கள் முழுமையாக வளர்ச்சியடையும்போது 1500 பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்பும், மும்மடங்கினருக்கு மறைமுகமாக வேலை வாய்ப்பும் ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது. தற்போது இத்திட்டங்கள் சுமார் 300 பேருக்கு நிலையான வேலைவாய்ப்பையும், மேலும் 300 பேருக்குத் தற்காலிக வேலைவாய்ப்பையும் அளிக்கின்றன.

**புதிய திட்டங்கள்**

இக்கழகம், இரு முன்னோடித் திட்டங்களைச் செயற்படுத்துகிறது. இவ்விரு திட்டங்களும் நம் நாட்டில் இவ்வகையில் தொடங்கப்பட்ட திட்டங்களில் முதன்மையானவையாகும். வாலிநோக்கம் உப்பு உற்பத்தித் தொழிற்சாலைக்கு அருகில் ஏற்படுத்தப்பட்டுவரும் முக்கியத்துவம் வாய்ந்த மாங்கனீசிய உலோகத் தொழிற்சாலைக்கு வழங்குவதற்காக, சுமார் 18,000 டன் அளவுக்கு 36 நீர்த்த உப்பைத் தயாரிப்பதே இவற்றின் முதன்மையான பணியாகும்.

தற்போது, பெரும்பாலும் உப்பு உற்பத்தியாளர்கள் அனைவரிடமும் 29° செறிவில் கிடைக்கக்கூடிய நீர்த்த உப்பு, பயன்படாத கழிவுப் பொருள் என்று தள்ளி விடப்படுகிறது. இக்கழகம் மேற்கொள்ளும் முயற்சியால், இக்கழிவுப் பொருள் பயன்தரும் பொருளாக மாற்றப்பட்டு, மாங்கனீசிய உலோகத் தயாரிப்பில் உதவக் கூடிய மேலான இடைப் பொருளாகவும் உருவாக்கப்படுகிறது. இக்கழகம் இரும்புச் சத்து கலந்த உப்பு தயாரிப்பதை இரண்டாம் திட்டப் பணியாக மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் உற்பத்திப் பணியைத் தொடங்கும் நிலையில் உள்ளது. இத்திட்டம் யுனிசெப் நிறுவனத்தால் ''ஒரு நவீனத் திட்டம்'' என்று பாராட்டப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் உணவு-சத்துணவு வாரியம், யுனிசெஃப் நிறுவனம் ஆகியவற்றின் உடனுழைப்புடன் செயற்படுத்தப்படுகிறது. இது 1500 டன் நிறுவு திறனைக் கொண்டிருக்கும்; அத்துடன், இரத்தக் குறைவினால் ஏற்படும் நோயை - குறிப்பாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினரிடையேயும், மகளிர், குழந்தைகளிடையேயும் தோன்றும் இரத்த சோகை நோயைப் போக்கப் பெரிதும் உதவும்.

கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு மதிய சத்துணவுத் திட்டம் மூலமும், சமூகநலத் துறைத் திட்டங்கள் மூலமும் இரும்புச் சத்துக் கலந்த உப்பை வழங்குவதன் வாயிலாக, இரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்ட பெருமளவு மக்கள் பயனடைவர். பொதுச் சுகாதார நிருவாகிகளுக்கு இது மிகவும் பயனுள்ளதாகும். இரத்த சோகை நோயின் விளைவுகள் பலவற்றைச் சமாளிப்பதற்கு இவ்வரசு, முன்னுரிமை வழங்கியுள்ளது. இரத்த சோகை நோய் பரவியுள்ள மக்களின் எண்ணிக்கை, அதன் கடுமை, அந்நோயால் ஏற்படும் விளைவுகள் ஆகிய உடனடித் தீர்வு காணவேண்டிய பொதுச்சுகாதாரம் குறித்த முக்கியப் பிரச்சினைகள் பற்றி 'யுனிசெஃப்' நிறுவனம் தெரிவித்த கருத்தினை இவ்வரசு கவனத்தில் கொண்டு இரத்த சோகை நோயைப் போக்க அரும் பணி ஆற்றி வருகிறது.


தமிழரசு

தமிழ் - மாதம் இருமுறை

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ. 24 6 மாதச் சந்தா ரூ. 12

'தமிழரசு' - ஆங்கிலம்

ஆண்டுச் சந்தா ரூ. 12 6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

முகவரி : உதவி இயக்குநர்

'தமிழரசு' அலுவலகம்,

அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# ஸ்ரீகண்ட ஈசுவரம்

டாக்டர் இரா. கலைக்கோவன்

●●●

**ஏப்ரல் மாதம் 18ஆம் நாள் உலக கலாச்சார நாளாகக் கொண்டாடப் பட்டதையொட்டி இந்தக் கட்டுரை இடம் பெறுகிறது.**

●●●

திருச்சி சயங்கொண்டம் சாலையில், திருச்சி யிலிருந்து ஐம்பத்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது பழுவூர். சோழர்களின் பேராட்சிக் காலத்தில் பழுவேட்டரையர்களால் ஆளப்பட்டு வந்த இந்தப் பழுவூர்ச் சிற்றரசு, இப்போது மேலப்பழுவூர், கீழையூர், கீழப்பழுவூர் என்று மூன்று சிற்றூர்களாகச் சிதறியுள்ளது. இம்மூன்று ஊர்களிலுமே பழுவூர் மன்னர்களின் பாங்கான கலைப்படைப்புகள், இன்றும் அவர்தம் கலையார்வத்திற்கும் இறைப்பற்றுக்கும் இனிய எடுத்துக்காட்டுகளாய் நின்று நிலவுகின்றன.

இம்மூன்று ஊர்களில் இறுதியாய் அமைந்துள்ளது கீழப்பழுவூர். இங்குதான் திரு ஆலந்துறையார் திருக் கோயில் எழிலும் எடுப்புமாய்க் கல்வெட்டுகளின் கனிந்த உரையாடல்களை நம்முடன் பகிர்ந்து கொண்டு, சிற்ப வனப்புகளின் சீரிய நிலைக்களனாய், அழகிய கோபுரத் துடன், மக்களின் அரவணைப்பில் சற்றே மகிழ்ந்தபடி மந்தகாசப் புன்னகையுடன் காட்சி தருகிறது. பழுவூர்க் கோயில்களில் மனித முகங்களை அடிக்கடி பார்க்கும் பேறு இந்தக் கோயிலுக்கு மட்டுமே இனிதாய் வாய்த் திருக்கிறது.

இக்கோயிலின் முதற்கோபுர வாயிலுக்கு முன்னி லுள்ள திறந்தவெளியில் வலப்புறம் புல்வெளிமேட்டில் ஒரு சிறிய கோயிலும், இடப்புறம் நிர்வாக அதிகாரியின் அலுவலகக் கட்டடமும் காணப்படுகின்றன. இந்த அலுவலகக் கட்டடத்தின் கிழக்குப்புறச் சுவரிலிருந்து இரண்டு கல்வெட்டுத் துணுக்குகள் அரியலூர் கலைக் கல்லூரி வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர் திரு. தியாகராசன் அவர்களால் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டு வெளிப்படுத்தப்பட்டன. இவ்விரண்டு கல் வெட்டுத் துணுக்குகளும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அரிய செய்தியைத் தமிழக வரலாற்றுக்கு வழங்கி யுள்ளன.

''....டுப்பித்த பள்ளிப்படை ஸ்ரீகண்ட ஈ.....
....வேட்டரையர் கண்டன் மறவனா....
...து தரவேண்டுமென்று கொங்.....
....யக் கிழவரோமும் அடிகள்
....ர் எடுப்பித்த பள்ளிப்படை ஸ்ரீகண்ட. ஈ..
.....றப் பொன்னும் அந்தராயமும்......''

இது ஒரு கல்வெட்டுத் துணுக்கின் செய்தி.


''...ஸ்வரர்க்குப் பழுவேட்டரையன்
வைத்த திருவமிர்து தோறு
தித்யவத் நிசதி அரிசி பத்தெட்டுக்கு
இராசகேசரியால் இருநாழியும்
ருவாதிரைக்கு நாநாழியும் ஆக அரிசி''

இது மற்றொரு கல்வெட்டுத் துணுக்கின் செய்தி.

இவ்விரண்டு கல்வெட்டுத் துணுக்குகளுமே அரு கருகே அமைந்துள்ளன. இவையிரண்டின் வாயிலாகப் பழுவேட்டரையர் கண்டன் மறவனார் என்பவர் பழு வூரில் ஸ்ரீகண்ட ஈசுவரம் என்னும் பெயரில் பள்ளிப் படைக் கோயிலொன்றை எழுப்பி அதற்குரிய கொடை களையும் வழங்கியுள்ளார் என்னும் செய்தி பெறப்படு கிறது.

இந்தக் கண்டன் மறவனாரே பழுவூர்க் கல்வெட்டுக் களில் காணப்படும் பழுவூர் மரபின் இறுதி அரசராவார். இவருக்குப் பிறகு பழுவூர் மரபு என்னாயிற்று என்ப தற்கு இதுநாள் வரையிலும் வரலாற்றுச் சான்றுகள் கிடைத்தில. மூன்றாம் இராசராசன் காலத்தில் கிடைக் கும் ஒரு கல்வெட்டில் ஒரு பழுவேட்டரையர் பெயர் காணப்பட்டாலும், அவருக்கும் பழுவூருக்கும் உள்ள தொடர்பு பற்றி யாதொரு விளக்கமும் கிடைக்க வில்லை.

கண்டன் மறவன் சோழப்பேரரசர்களான உத்தம சோழன் காலத்திலும், முதலாம் இராசராசன் காலத்தி லும், பழுவூரை ஆண்ட பழுவேட்டரைய சிற்றரச ராவார். இப்பெருமானுக்குக் கண்டன் சுந்தரசோழன், கண்டன் சத்ருபயங்கரன் என்னும் தம்பியர் இருந்தனர். பழுவூர்க் கல்வெட்டுகளில் அதிகமான அளவில் குறிக்கப் படும் இம்மன்னரின் ஆட்சிக் காலத்தில்தான் இப்பள்ளிப் படைக்கோயில் எடுக்கப்பட்டுள்ளது. இறந்தவர்களைப் புதைப்பது பள்ளிப்படுத்துதல் எனப்படும். அப்படிப் பள்ளிப்படுத்தப்பட்டவர்கள் மீது எழுப்பப்படும்



கோயிலைப் பள்ளிப்படைக் கோயில் என்று அழைப்பது மரபு. ஆதித்த சோழனுக்கு அவரது மகனார் முதலாம் பராந்தகன் எடுப்பித்த கோதண்டராமசேசுவரமும், அரிஞ்சய சோழருக்கு அவரது பெயரன் முதலாம் இராசராசன் எடுப்பித்த அரிஞ்சிகையீசுவரமும், தன் சிற்றன்னை பஞ்சவன் மாதேவிக்கு முதலாம் இராசேந்திரன் எடுப்பித்த பஞ்சவன் மாதேவீச்சரமும் பள்ளிப்படைக் கோயில்களுக்குச் சில சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளால் பழுவூரிலும் இதுபோல் ஒரு பள்ளிப்படைக் கோயில் கண்டன் மறவனால் எடுக்கப்பட்டதை அறிகிறோம். இப்பள்ளிப்படைக்கோயில் ஸ்ரீகண்ட ஈசுவரம் என்று அழைக்கப்பட்டுள்ளது. 'கண்டன்' என்ற இயற்பெயரையுடைய மன்னர் ஒருவருக்கு எடுக்கப்பட்ட பள்ளிப்படையாக இதைக் கருதுவதுதான் பொருத்தமுடையதாகும்.

பழுவூர் மரபில் கண்டன் என்ற இயற்பெயருடன் அமைந்த மன்னர்கள் இருவர்தான். அவர்களுள் முதலாமவரான குமரன் கண்டனை ஆதித்த சோழன் காலத்தில் பழுவூரை அரசாண்டவராகக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. இம்மன்னரைப் பற்றிய செய்திகள் அதிகமாகக் கிடைத்தில. இவரைப் பற்றிப் பேசும் ராசகேசரியின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுப் பழுவூர்க் கல்வெட்டும், ராசகேசரியின் பத்தாம் ஆட்சியாண்டுத் திருவையாற்றுக் கல்வெட்டும் இவர் பெயரைத் தருவதுடன் நின்று விடுகின்றன. இவரது செயலாற்றலோ, ஆட்சித் திறமோ இன்ன பிற செய்திகளோ நமக்குக் கிடைக்கவில்லை.

கண்டன் என்ற இயற்பெயருடன் பழுவூர் மரபில் போற்றப்படும் இன்னொரு அரசர் மறவன் கண்டனார். இவர் குமரன் மறவனின் திருமகனாய்ப் பிறந்து, சுந்தர சோழர் காலத்திலும், உத்தமசோழர் காலத்திலும் பழுவூரை ஆண்டமைக்குக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. இவரைச் சுட்டும் பதினோரு கல்வெட்டுகளைப் பழுவூர் நமக்கு அளிக்கிறது. இவரது அரும் பெரும் செயல்களை இக்கல்வெட்டுகள் வரிந்து கட்டிக் கொண்டு விரித்துரைக்கின்றன. திரு ஆலந்துறையார் திருக்கோயிலைக் கற்றளியாக்கியவர் இவ்வரசரே யாவார். கண்டன் சத்ருபயங்கரன், கண்டன் சுந்தர சோழன், கண்டன் மறவன் என்னும் மூன்று புதல்வர்கள் இவருக்கு இருந்ததைக் கல்வெட்டுகள் விளக்குகின்றன.

கண்டன் மறவனே பள்ளிப்படைக் கோயில் எடுப்பித்தவர் என்று கல்வெட்டில் தெளிவாக இருப்பதால், இப்பள்ளிப்படைக் கோயிலை அவர் யாருக்காக எடுப்பித்திருக்க முடியும் என்ற முடிவுக்கு வருவதில் நாம் அதிகக் குழப்பத்திற்கு ஆளாகாமல் தப்பமுடிகிறது. சுந்தரசோழர், உத்தமசோழர் காலங்களில் அரசாண்டவரும், பழுவூரில் கண்ணைக் கவரும் சிற்பப் புதையலொன்றை உருவாக்கியவரும் தன் அருமைத் தந்தையாருமான மறவன் கண்டனுக்கே, கண்டன் மறவன் இப்பள்ளிப்படைக் கோயில் எடுப்பித்திருக்க முடியும்.

முதலாம் இராசேந்திரனுக்குப் பிறகு பழுவூர் மரபின் ஆட்சி முடிவுற்றுப் போனமையால், இப்பள்ளிப்படைக்கோயில் புரப்பாரின்றிக் களையிழந்து, நலிந்து போய்க் காலத்தின் வேகத்தில் சிதறுண்டிருக்க வேண்டும். உதிரியாய்க் கிடைத்த கற்களைக்கொண்டு பிற்காலத்தில் இங்குள்ள அலுவலகக் கட்டடம் எழுப்பப்பட்டிருக்கலாம். அதனால்தான் தொடர்பற்ற நிலையில் இவ்விரண்டு கல்வெட்டுத் துணுக்குகளும் கிடைக்கின்றன. இப்பள்ளிப்படைக் கோயில் எங்கிருந்திருக்கலாம் என்பதற்கு இரண்டு தடயங்கள் கண்முன் தெரிகின்றன. ஒன்று, இன்றிருக்கும் அலுவலகக் கட்டடத்தின் அடித்தளமே இக்கோயிலின் அடித்தளமாய் இருந்திருக்கலாம்; அல்லது இதன் எதிரிலிருக்கும் இன்றைய சிறுகோயிலே, அன்று பள்ளிப்படையாய் இருந்து, சிதறிச் சிதிலமான நிலையில், பின்னால் வந்த பேராளர்கள் அதைச் சிறிய அளவில் புனரமைப்பு செய்திருக்கலாம். இவ்விரண்டுமே கருதுபாடுகள்தான். காலம், விட்டுப்போன கல்வெட்டுத் தொடர்களையும் பெற்றுத்தருமானால், ஸ்ரீகண்ட ஈசுவரத்தின் முழுமையான படப்பிடிப்பையும் நாம் கண்டு மகிழ முடியும்.

## மதுரை மாவட்டத்தில் அகதிகள் முகாம்

மதுரை மாவட்டத்தில் விளாங்குடி, தனக்கன்குளம் ஆகிய இரண்டு ஊர்களில் அகதிகள் முகாம்கள் உள்ளன. விளாங்குடியில் 494 குடும்பங்களைச் சேர்ந்த 2150 பேரும் தனக்கன்குளம், முகாமில் 64 குடும்பங்களைச் சேர்ந்த 302 பேரும் இருந்தனர்.

15.2.88 ல் 128 குடும்பங்களைச் சேர்ந்த 515 பேரும், 22.2.88ல் 123 குடும்பங்களைச் சேர்ந்த 536 பேரும் தனி ரயில் மூலம் இராமேஸ்வரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, பின்னர் கப்பல் மூலம் தலைமன்னார் போய்ச் சேர்ந்தனர்.

திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இரண்டு மாதங்களுக்குரிய உதவித் தொகையும், தலைமன்னாரிலிருந்து அவரவர் கிராமத்திற்குச் செல்லப் பயண வழித் தொகையும் கொடுத்தனுப்பப்பட்டது.

அகதிகள் தங்குவதற்காக 792 வீடுகளை தமிழ்நாடு அரசு வீட்டுவசதி வாரியம் கட்டித்தந்துள்ளது. இந்த ஆண்டில் ரூபாய் 22.70 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டது. ஒரு கிலோ 57 காசு வீதம் மான்ய விலையில் அரிசி வழங்கியதில் அரசுக்குச் செலவு ரூ.1.64 லட்சம் ஆகியுள்ளது.




அகதிகளின் குழந்தைகள் கல்விபெற இலவச நோட்டுப் புத்தகங்களும், உடைகளும் ரூ. 91,000 செலவில் வழங்கப்பட்டுள்ளன.

தாயகம் திரும்பிய 120 பேருக்கு அங்கப்பா நூற்பு ஆலையில் வேலை வழங்கி தனக்கன்குளம் குடியிருப்பில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் வீடு கட்ட, கிராமப்பகுதியாக இருந்தால் ரூ. 6,000, நகர்ப் பகுதியாக இருந்தால் ரூ. 10,000 தொழில் துவங்க ரூ.30,000 என அரசு வழங்குகிறது.

**மாவட்டச் செய்தியாளர்**

# புதுக்கோட்டையில் மேதகு ஆளுநர் நிகழ்ச்சிகள்



மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 30.3.88 அன்று புதுக்கோட்டை மாமன்னர் விளையாட்டுத் திடலில் அமைக்கப்பட்டிருந்த டிரைசம் பொருட்காட்சியினைப் பார்வையிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் இதுவரை நடைபெற்றுள்ள வளர்ச்சிப் பணிகள் பற்றிய விவரங்கள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. 1988-89-இல் நிறைவேற்றப்பட இருக்கும் ஆதி திராவிடர் கூட்டுக் குடியிருப்புத் திட்டத்தைக் குறிப்பிடும் வகையில் மாதிரி வீடு அன்ன வாசல் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பிலும், சமுதாயக்கூடம் மாதிரி அமைப்பு திருமயம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பிலும் அமைக்கப்பட்டிருந்தது. மாவட்டத் தொழில் மையம், கதர் கிராமத்தொழில் வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், காவல்துறை ஆகிய அமைப்புகளும் அவற்றின் பணிகளைச் சிறந்தமுறையில் பொருட்காட்சியில் விளக்கியிருந்தன.

மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில்:-

''கிராமப் புற மக்களுக்கு பல் வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் நடந்துவருகின்றன. முன் காலத்தில் கிராமப்புற மக்கள் நகர்ப்புறங்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களிடம் போட்டிபோட்டு அதிகக் கஷ்டத்திற்கு ஆளானார்கள். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. கிராமப்புற மக்கள் நல வாழ்விற்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதுடன், அங்கே வேலை வாய்ப்பு அளிக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கிராமப்புற மக்கள் வாழ்வு உயர அரசு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கும்; மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க 4 அதிகாரிகளுக்கு விசேட அதிகாரம் தரப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

**நலத்திட்ட உதவிகள்**

விழாவில், ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 43 லட்சம், சமூக நலத்துறையின் மூலம் ரூ. 11.5 லட்சம், தாட்கோ மூலம் ரூ. 27.57 லட்சம், மாவட்டத் தொழில் மையம் மூலம் தொழில் தொடங்க 66.23 லட்சம், ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் ரூ. 1 லட்சம், வேளாண்மைத் துறை மூலம் ரூ. 2.38 லட்சம், கல்வித்துறை மூலம் ரூ. 8.5 லட்சம், கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் ரூ. 3 லட்சம், மீன் வளத்துறை மூலம் ரூ. 4.16 லட்சம், சமூக சேவை அமைப்பு மூலம் ரூ. 2 இலட்சம் என மொத்தம் 1 கோடியே 3 லட்சத்திற்கான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**புதிய வழித்தடம் துவக்கம்**

புதுக்கோட்டை -புதுக்கோட்டை என எல்லாப் பகுதிகளுக்கும், மச்சுவாடி, கலெக்டர் ஆபீஸ், திருக்கோகர்ணம், சிப்காட் சென்று வர ஒரு பஸ் (பாயிண்ட் டு பாயிண்ட்) புதுக்கோட்டை -வடகாட்டுப் பட்டி, அரிமளம், தேனிப்பட்டி ஆகிய இரண்டு வழித்தடங்களுக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் பஸ்களை மேதகு ஆளுநர் துவக்கி வைத்தார்.

**அரசு ஊழியர்களுடன் சந்திப்பு**

அரசு அலுவலர்களைச் சந்தித்து விரைவில் பணி நடைபெறவேண்டும் என்றும், தூய்மையான நிர்வாகத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

**நகராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் சந்திப்பு**

நகராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைச் சந்தித்து அவர்கள் தெரிவித்த கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

**செய்தியாளர்களுடன் சந்திப்பு**

செய்தியாளர்களைச் சந்தித்துப் பேட்டியளித்தார். பின்னர் பொது மக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டு, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

**இரா. மருதமுத்து**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், (செய்தி)**
**புதுக்கோட்டை.**

# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஆளுநரின் ஆலோசகர்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 31.3.88 அன்று ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் சித்து அவர்கள் சுற்றுப் பயணம் செய்தார். நாங்குநேரி, ராதாபுரம் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளையும், ஊரக வளர்ச்சிப் பணிகளையும், வறட்சி நிவாரணப் பணிகளையும் அவர் பார்வையிட்டார். வள்ளியூர், ராதாபுரம் பகுதிகளில் 5 நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்றார். பொது மக்களிடம் அவர் மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

அவர் பேசும்போது ''தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சியில் ஊழலற்ற, தூய்மையான நிர்வாகம் நடத்துவதே எங்கள் குறிக்கோளாகும். கோப்புகள் வேகமாக முடிவு செய்யப்படுகின்றன. மக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. குடிநீர் வழங்குவதில் முதல்கவனம் செலுத்தப்படுகின்றது. ரேசன் கடைகள் மூலம் வழங்கப்படும் பொருட்கள் அரசின் நிர்ணய அளவுப்படி வழங்கப்படுகின்றனவா, என்பது தீவிரமாகக் கண்காணிக்கப்படுகிறது. கிராம மக்கள் குறைகளைத் தீர்ப்பதிலும் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம்.

நல்ல தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு, அருகில் உள்ள பகுதிகளில் இருந்து நல்ல தண்ணீர் கொண்டு வருவது பற்றிப் பரிசீலிக்கப்படும். அதுவரை இப்பகுதிகளில் உள்ள நல்ல தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு லாரிகள் மூலம் தொடர்ந்து தண்ணீர் வழங்கப்படும். மக்கள் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும்படி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது. அதன் செயல்முறைகளை நேரில் பார்வையிடவே இதுபோன்ற சுற்றுப் பயணத்தை மேற்கொள்கிறேன்.

கள்ளச்சாராயத்தை ஒழிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது. இது குறித்து காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கள்ளச்சாராயத்தை ஒழிக்க, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். எங்காவது கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதாகப் புகார் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ரேசன் கார்டுகளுக்கு வழங்க மாதந்தோறும் தமிழகத்திற்கு 50 ஆயிரம் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. மக்களுக்காக கூடுதலாக வழங்க மேலும் அரிசி கேட்டோம். மத்திய அரசு மேலும் 30 டன் அனுமதித்தது. இப்போது மாதம் தலா 80 டன் அரிசி தமிழகத்திற்குக் கிடைக்கிறது. இதனால் குடும்ப அட்டைக்கு 10 கிலோ வழங்கப்பட்ட அரிசி 12 கிலோவாக வழங்கப்படும்.

அரசு நிர்ணயித்துள்ள அளவுப்படி ரேசன் கடைகளில் அத்தியாவசியப் பொருள் வழங்காமல் இருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்துப் பொது மக்கள் புகார் செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். எடைக் குறைவு போன்ற எந்தப் பிரச்சினை இருந்தாலும் புகார் செய்யலாம். ரேசன் கடைகளில் ரேசன் பொருட்களை வாங்க, சோப்பு போன்ற பொருட்களை வாங்க வேண்டும் என ஊழியர்கள் வற்புறுத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பிரச்சினைகளில் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவு இடப்பட்டுள்ளது.

விரைவில்தேர்தல் வரும். தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வரும் வரை குடியரசுத்தலைவர் ஆட்சி தொடரும். இந்த ஆட்சியில் தூய்மையான திறமையான நிர்வாகம் நடத்துவதே எங்கள் குறிக்கோள்.

நம்பியாறு, பச்சையாறு, கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்டங்கள் என்ன நிலையில் உள்ளன என்பது குறித்துக் கோப்புகளைப் பார்த்தால்தான் தெரியும். அதன் பின்னர் அந்தத் திட்டங்கள் நிறைவேற, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சத்துணவுத் திட்டத்தை இன்னும் சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். மக்கள் மனுக்களை ஏராளமாகக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றில் மாவட்ட ஆட்சியாளர் நிலையில் முடிவு எடுக்கக்கூடிய மனுக்கள் மீது மாவட்ட ஆட்சியாளர் உடன் நடவடிக்கை எடுப்பார். அரசு அளவில் முடிவு செய்யக்கூடிய மனுக்கள், சென்னைக்கு அனுப்பப்பட்டு அங்கு காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படும்''

வள்ளியூர் யூனியன் தெற்குக் கருங்குளத்தில் ரூ. 32 ஆயிரம் செலவில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தை ஆலோசகர் டாக்டர் சித்து திறந்து வைத்தார். நாங்குநேரி யூனியன் ஏமங்குளத்தில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர்கள் வீடுகள் 20ஐ அவர் திறந்து வைத்தார்.

மடப்புறத்தில் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளையும், கள்ளிக்குளம் குடிநீர்த்திட்டத்தையும், விஜயாபதி கசிவுநீர்க்குட்டையையும் பார்வையிட்டார்.

**தொகுப்பு: டி. ராஜ்குமார்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**(செய்தி)**
**திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆளுநரின் ஆலோசகர்



புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை வட்டத்தைச் சேர்ந்த வெள்ளாள விடுதி கிராமத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2,75,400 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 28 வீடுகள் கொண்ட ஆதிதிராவிடர் கூட்டுக் குடியிருப்பையும், அக்குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியையும் மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி.இராமகிருஷ்ணா,இ.ஆ.ப அவர்கள் திறந்து வைத்தார். குடியிருப்பைக் கட்டிய விதம் பற்றி அலுவலர்களிடம் விசாரித்தறிந்து கொண்டதுடன், அருகில் கட்டப்பட்டு வரும் வீட்டையும் பார்வையிட்டார். அண்டனூரில் உள்ள குடிநீர்த்தேக்கத் தொட்டியைப் பார்வையிட்டதுடன், அண்டனூர், சுந்தம்பட்டி, கந்தர்வகோட்டை, பெருங்களூர் ஆகிய ஊர்களில் உள்ள நியாய விலைக் கடைகளில் திடீர் சோதனை செய்து அரிசி, சீனி, எண்ணெய் ஆகியவற்றின் இருப்பையும், எடைக் கற்களையும் சரிபார்த்தார். அருகில் உள்ள மக்களிடம் மேற்படி உணவுப் பொருட்கள் முறையாக வழங்கப்படுகின்றனவா எனவிசாரித்தார். உயர் அலுவலர்கள் முறைப்படி அடிக்கடி ஆய்வு செய்ய உத்தரவிட்டார். வரும் வழியில் கர்ந்தர்வகோட்டையில் ரூ. 50 ஆயிரம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்டு வரும் ஆழ்குழாய்க் கிணற்றுப் பணியைப் பார்வையிட்டார்.

சுற்றிலும் வறட்சிப் பகுதிகளால் சூழப்பட்ட கந்தர்வகோட்டை தாலுகாவைச் சேர்ந்த கம்மங்காடு கிராமத்தில், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.3 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய ஆழ்குழாய்க்கிணறு போடப்பட்டு வருகிறது. 20 குதிரைச் சக்தி உள்ள மோட்டார் பம்ப் செட் பொருத்தப்பட்டுள்ளது. இது மின் விநியோக காலத்தில் 24 மணி நேரமும் சுமார் 21.04 எக்டர் பரப்பளவில் உள்ள நிலங்கள் பயிர் செய்யத் தண்ணீர் வழங்குகிறது. இதனால், தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் 21, பிற்படுத்தப்பட்ட குடும்பங்கள் 19 பயனடையும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறை செய்துள்ள சாதனையின் விளைவாக வாழையும், தென்னையும், நிலக்கடலையும், கரும்பும் பயிர் செய்யப்பட்டுள்ளன. இதனை ஆளுநர் ஆலோசகர் பார்வையிட்டார்.

தஞ்சை-புதுக்கோட்டைச் சாலையில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் தோண்டப்பட்டுள்ள கிணற்றையும், தெளிப்பு நீர்ப்பாசன முறையையும் பார்வையிட்டார். பெண்கள் ஆடுவளர்ப்புச் சங்கம் மூலம் 10 பேருக்கு வழங்கப்பட்ட ஆடுகள் மற்றும் வெண்பன்றிகளைப் பார்வையிட்டார்.

அன்று மாலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் மாவட்ட உயர் அரசு அலுவலர்களையும் சந்தித்து, மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். சமூகநலத் துறையின் சார்பில் விதவைமகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 1,000 வீதம் 2 பேருக்கும், விதவை மறுமண உதவித் திட்டத்தின் கீழ் நபருக்கு ரூ. 5,000 மதிப்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரங்கள் 2 பேருக்கும், உடல் ஊனமுற்ற 2 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளையும் ஆளுநரின் ஆலோசகர் வழங்கினார்.

பின்னர் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் ஆளுநரின் ஆலோசகர் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முழுவதும் ரூ. 10 கோடி செலவில் 4,000 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும். ஜூலை இறுதிக்குள் இது செய்து முடிக்கப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 275 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும். ரூ. 70 லட்சம் செலவில் ஏப்ரல் இறுதிக்குள் 50 கிணறுகளும், 2வது கட்டமாக 55 கிணறுகளும் அமைக்கப்படும். பழைய கிணறுகள் சீர்திருத்தப்படும்; வல்லத்திராக்கோட்டையிலிருந்து ரூ. 60 லட்சம் செலவில் புதுக்கோட்டைக்குக் குடிநீர் கொண்டு வரப்படும்.

''திட்டமிட்டபடியே கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் அக்டோபர் மாதம் நடைபெறும். நியாய விலைக்கடைகளில் அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் நன்றாகக் கிடைக்கின்றன. கூட்டுறவுத்துறை அதிகாரிகள் அடிக்கடி திடீர் சோதனைசள் செய்து சோதனையின் முடிவுகளை மாவட்ட ஆட்சித்தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்''

**தகவல் :**

**வை. புண்ணியமூர்த்தி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**புதுக்கோட்டை மாவட்டம்.**

# எழுத்தாளர்களுக்கு உதவிடும் தமிழ்நாடு அரசு

ஆளுநரின் ஆலோசகர்
திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப.,



அரசுக் கதவு இரும்புக் கதவு அல்ல, இதயக்கதவு என்று குறிப்பிட்டனர். அது மட்டுமல்ல, அரசுக் கதவு அன்புக் கதவும் கூட. தமிழுக்கு உதவுவது என்பது என் எண்ணம் மட்டுமல்ல. நமது ஆளுநரின் எண்ணமும் அதுதான்; அரசின் எண்ணமும் அதுதான்.

இங்கே எழுத்தாளர்களுக்கு உள்ள குறைகளைப் பற்றிக் கூறினர். அந்தக் குறைகள் விரைவில் போக்கப்படும். இது பற்றி விசாரித்து வேண்டிய தகவல்களைத் தரும்படி காசிராஜன், அவ்வை நடராஜன் ஆகியோரிடம் கேட்டிருக்கிறேன். வெகு விரைவில் தமிழ் எழுத்தாளர்களின் குறைகள் போக்கப்படும்.

அறிஞர்கள் கஷ்டத்தை வெளியே சொல்ல மாட்டார்கள். வாழ்விலே அவர்களுக்கு வறுமை இருக்கும். ஆனால் எழுத்திலே - கருத்திலே வறுமை இருக்காது; வளமை மட்டுமே இருக்கும்.

திரு.வி.க. மற்றும் பாரதிதாசன் விருதுகள் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். இரண்டு ஆண்டாக நிறுத்தப்பட்டிருக்கும் அதை, இரண்டு ஆண்டுக்கும் ஒன்றாகச் சேர்த்துத் தர வேண்டும் என்று அரசிடம் கேட்டிருக்கிறேன். விரைவில் பிரச்சினைகள் தீர்க்கப்படும்; தீர்ப்போம்!

புத்தக விற்பனை பற்றிக் குறிப்பிட்டார்கள். எழுத்தாளர்கள் எதை எதைச் சொல்ல வேண்டுமோ அதைத் தைரியமாகச் சொல்ல வேண்டும். இன்று படிக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும். எழுத்தாளர்கள் கூட தங்கள் நூல்களை எழுதுவதில் மட்டுமே கவனமாக இருந்து விடக்கூடாது. பிறருடைய நூல்களையும் படிக்க வேண்டும். சமுதாய ஏழ்மை, கொடுமை ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

எழுத்தாளர் சங்கத்திற்கு ஒரு லட்சம் நிதி தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தீர்கள். இதுபற்றி ஆளுநரிடம் பேசி நல்ல முடிவை அறிவிக்கிறேன்.

இங்கு தமிழ் எழுத்தாளர்கள் ஒன்று கூடியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. நான் டாக்டர் மு.வ.விடம் மாணவனாக இருந்தபோது இப்படித் தமிழர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்கிறார்களே என்று ஒருமுறை கேட்டேன். அதற்கு அவர் ''அரிசி சாப்பிடுபவர்கள் எல்லாம் அறிவாளியாக இருப்பார்கள்; அறிவாளியாக இருக்கின்றவர்கள் ஒற்றுமையாக இருப்பது கஷ்டம்'' என்று பதில் சொன்னார். அதனால் இப்படி நீங்கள் ஒன்று பட்டுக் காட்சி தருவது மகிழ்ச்சியாக இருக்கிறது.

எழுத்தாளர் சங்கத்துக்குக் கட்டடத்திற்கான மனை வேண்டும் என்று வேண்டுகோள் எழுந்தது. உடனே மனை கொடுக்க முடிகிறதோ இல்லையோ ஆனால் எழுத்தாளர் சங்கத்திற்காக ஓர் அறை வழங்க ஏற்பாடு செய்கிறேன். சாதாரண அறையாக இல்லாமல் வசதியான அறையாக வழங்க முயற்சி செய்வேன்.

(சென்னையில் 16.4.88 அன்று நடைபெற்ற அகில இந்திய தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் எழுத்தாளர் நல நிதி அறக்கட்டளையைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து)

# புற்று நோயாளிகளைக் காப்பாற்றும்

# சித்த மருத்துவம்

ஒய்வுபெற்ற மாவட்ட நீதிபதி வைத்தியரத்தினம் டாக்டர் பலராமய்யா

●●●

**புற்றுநோயைக் குணப்படுத்துவதற்கு மருந்தே கிடையாது என்று சொல்லப்படுகிறது. புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல், சித்த வைத்தியத்திற்கு உண்டு என்பதை வைத்திய ரத்தினம் பலராமய்யா விளக்குகிறார்.**

●●●

உலகின் மூன்றாவது மிகப்பெரும் பிரச்சினையாக, அச்சமும், பீதியும் தரக்கூடிய வியாதியாக இருந்து வருவது புற்றுநோயாகும். மேல் நாட்டு நவீன மருத்துவம் புற்று நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்து இதுதான் என்று கண்டறிந்து இன்னும் கொடுக்கவில்லை; ஆனால் தமிழ்நாட்டிற்கேயுரிய சித்த மருத்துவம் பல்வேறு விதமான புற்றுநோய்களைக் குணப்படுத்துகிறது.

கிட்டத்தட்ட 18-ஆவது வயதிலேயே சித்தமருத்துவ ஆராய்ச்சியை ஆரம்பித்தேன். ஆனால் புற்றுநோய்க்காக நான் ஆராய்ச்சி செய்யவில்லை. சித்த வைத்தியத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தேன்.

காரணம் என்னவென்றால், சித்த வைத்தியம் உண்மையான மகரிஷிகள் சொன்னது, சித்தர்கள் சொன்னது, அது பொய்க்காது. இந்த மருந்து கொடுத்தால் இந்த வியாதி போகும் என்று அவர்கள் சொன்னால், நாம் அதை நம்ப வேண்டும். பலர் அதை நம்புவதில்லை.

நோய் என்று டாக்டரிடம் போனவுடன், ஒரு ஊசி போடுங்க, நான் வேலைக்குப் போக வேண்டும், இன்னும் மூன்று நாட்களுக்கு நான் வரமாட்டேன், இன்றே மூன்று ஊசி போட்டு விடுங்கள் என்று சொல்லுகிற காலமாக இருக்கிறது.

ஆனால், சித்த வைத்தியத்திலே எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. ஏனென்றால் பெரியவர்கள்சொன்ன வைத்தியம் இது. எனது தாய் செய்கிற வைத்தியத்தை நான் பார்த்து அனுபவித்து இருக்கிறேன்.

என் தலையில் இரண்டு கட்டிகள் வந்தன. அப்போது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். கோடை விடுமுறைக்கு வீட்டுக்கு வந்தேன். தலையிலே கட்டி. அப்போது இங்கே சரியான மருத்துவம் கிடையாது. 'நான் மெட்ராசுக்குப் போயி, கட்டியை ஆப்பரேசன் செய்து கொண்டு வருகிறேன், வலி தாங்க முடியவில்லை' என்று என் அம்மாவிடம் கூறினேன்.



'இதுக்கென்னத்துக்கடா மெட்ராசுக்குப் போறே, இருடா!' என்று சொல்லி, தோட்டத்துக்குப் போய் 'முள்முள்ளி' என்று ஒரு செடி இருக்கிறது, முள்ளுச்செடி; அதிலே சிகப்பு இருக்கிறது-பச்சையும் இருக்கிறது. அதன் வேரைப் பிடுங்கிக் கொண்டு வந்து, அதனுடைய பட்டையை எடுத்து, ஒரு வரட்டியிலே வைத்துச் சுட்டாங்க..கருகிய பிறகு அதைத் தேங்காய்எண்ணெய் விட்டுக் குழைத்து இரண்டு கட்டிகளிலும் வைத்தார்கள். சரியாகப் பதினைந்து நிமிடம் கழித்து 'படார் படார்' என்று இரண்டும் வெடித்தன. வெடித்த உடன், சீழும் இரத்தமும் கொட்டியது. எல்லாவற்றையும் துடைத்துவிட்டு, ஊமத்தை இலை கொண்டு வந்து, விளக்கெண்ணெய் தடவி, வதக்கி அதன்மேலே போட்டார்கள். பதினைந்து நாட்களில் சுத்தமாக ஆறிவிட்டது. அவ்வளவு பெரிய கட்டிகள் இருந்த அடையாளம் தெரியவில்லை. இங்கிலீஷ் வைத்தியம் செய்திருந்தால், கத்தியாலே அறுத்து முடிச்சுப் போட்டிருப்பார்கள். அடையாளம் வந்திருக்கும். மூலிகை மூலமாகவும், ஆப்பரேசன் செய்யக் கூடியசக்தி இருக்கிறது என அறிந்து அதிலிருந்து ஆராய்ச்சி செய்து கொண்டு வந்தேன். பல நூல்களை நான் படித்திருக்கிறேன். பதினெண் சித்தர்கள் எழுதிய புத்தகங்கள் பல வெளிவந்திருக்கின்றன. அவர்களுக்குப் பின்னால் அப்துல்லா, கந்தசாமிப்பிள்ளை போன்றவர்கள் எல்லாம் பெரிய பெரிய புத்தகங்களை எழுதியுள்ளார்கள். இந்த நூல்களையெல்லாம் படித்து, ஆராய்ச்சி செய்தேன். இந்த ஆராய்ச்சி செய்யத் தொடங்கி, 60 ஆண்டுகள் ஆகின்றன. எனக்கு இப்போது 79 வயதாகிறது.

எல்லா நோயாளிகளுக்கும் மருந்து கொடுத்துக் கொண்டு வந்தேன். ஒருமுறை என்ன ஆச்சு என்றால், 'செத்துப் போவான்—இனி இவன் பிழைக்கமாட்டான்'. எனப்பட்ட உதவி தாசில்தார் மகனைக் கொண்டு வந்தார்கள். அப்போது நான் கடலூரில் மாவட்ட நீதிபதியாக இருந்தேன். அந்தப் பையனுக்குக் கடலூரில் உள்ள எல்லா வைத்தியர்களும் மருத்துவம் செய்துவிட்டுக் கைவிட்டுவிட்டார்கள். மெட்ராசிலே பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவ மனைக்கெல்லாம் எடுத்துச் சென்றார்கள்.

நாற்பது நாட்களுக்குப் பிறகு அந்தப் பையன் பிழைக்க மாட்டான் என்று அங்கே சொல்லிவிட்டார்கள். ஆகையினாலே திருப்பிக் கொண்டுவந்துவிட்டார்கள். அந்தப் பையனை என்னிடம் கொண்டு வந்தார்கள்.

'கட்டுமாத்திரை' என்ற ஒரு மாத்திரை உண்டு. அந்தக் கட்டு மாத்திரையை உரசிக் கொடுத்தேன். ஐந்தாறு நாட்களில் சுத்தமாக நலம் பெற்றுவிட்டான். அதிலிருந்து நிறையச் சித்த வைத்தியப் புத்தகங்களைப் படித்து, அவற்றில் எந்தெந்த இடத்திலே புற்றுநோய் பற்றி வருகிறதோ அந்த இடங்களையெல்லாம் நன்றாகக் குறித்து வைத்துக்கொண்டு, பின்னாடி, செய்முறை ஆரம்பித்தேன்.

அகஸ்தியர், போகர், புலிப்பாணி போன்ற பல சித்தர்கள் புற்று நோயைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் திரட்டி ஒரு புத்தகத்தில் எழுதி வைத்துக் கொண்டு அந்த மருந்தைச் செய்வேன்.

புற்று நோய்க்கு மருந்தே கிடையாது என்கிறார்கள். எப்படியாவது புற்று நோய்க்கு மருந்து கண்டு பிடித்து, சித்த வைத்தியத்தை முன்னேற்ற வேண்டுமென்ற தீவிரம் அந்த வயதிலேயே எனக்கு ஏற்பட்டது. ஏராளமான புத்தகங்களைப் படித்தேன். மருந்துகளைச் செய்துகொண்டு வந்தேன்.

இப்படியிருக்கும்போது ஒரு ஏழை....புற்றுநோய் அந்தப் பெண்ணுக்கு; ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். 'பையாப்ஸிஸ்' செய்தார்கள். 'கர்ப்பப்பையில் உனக்குப் புற்றுநோய் இருக்கிறது. நீ 'கரண்ட்' வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அம்மா 'கரண்ட்' வைத்துக் கொண்டார்.

'கரண்ட் வைத்த பிறகு நீர்ப் போக்கு ஒரே அடியாக அதிகமாகப் போயிருக்கிறது. பாவம், தண்ணீர் தண்ணீராகப் போகிறது. நாளுக்கு நாள் உடம்பு சீணமாகிக்கொண்டே வந்தது. இரத்தமும் குறைஞ்சு போச்சு. அதுக்கப்புறம் என்ன பண்ணுவது என்று தெரியாமல், எப்படியானாலும் உயிர் போகத்தான் போகிறது;''இவரு மருந்தைச் சாப்பிடலாம்'' என அந்த ஏழைத் தாய் வந்தார். பத்து இருபது நாட்கள் அவருக்கு இலவசமாக மருந்து கொடுத்துக் கொண்டு வந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அவருக்கு நோய் குறைந்தது. உடம்பும் தேறி வந்தது. அப்புறம் லேகியம் கொடுத்துக்கொண்டு வந்தேன். மூன்று, நான்கு மாதங்களில் இயல்பான நிலைக்கு வந்து விட்டார். 'வெள்ளை' படுவது நின்றது. இரத்தப் போக்கு நின்றது. உடம்பு தேறியது.

'இலவசமாக இன்னும் மூன்று மாதங்களுக்கு மருந்து தருகிறேன். சாப்பிடு. உன் உடம்பு பலமடைய வேண்டும். உன் உடம்பு மிகவும் சீணமாக இருக்கிறது.' என்று சொன்னேன். அந்த மூன்று மாதங்கள் மருத்துவம் செய்தபின் அந்த ஏழைத் தாய்க்குப் புற்றுநோய் சரியாகிவிட்டது. அடுத்து அதேபோல அபாய நிலையில் இன்னொருவர் வந்தார். அவருக்கும் மருந்து கொடுத்தேன். வெற்றி கிடைத்தது. அதற்கப்புறம் மற்றொருவர் வந்தார். அவருக்கும் மருந்து கொடுத்தேன். சரியாகப் போச்சு. இப்படிப் பலர் என்னிடம் சித்த மருத்துவ முறையின் மூலம் சிகிச்சை பெற்றுப் புற்றுநோயிலிருந்து குணமடைந்துள்ளனர்.

அதாவது, புற்றுநோய்க்கென்று உங்களிடம் தனியாக மருந்துகள் இருக்கிறதா என்று கேட்டால் சொல்ல முடியாது. காரணம் என்னவென்றால் மருந்து இருக்கிறது. உடம்பிலே எந்தெந்த இடத்திலே புற்றுநோய் வருகிறதோ, அதுக்குத் தகுந்த மாதிரியாகக் கலப்பு மருந்துகளைக் கொடுப்பேன்.

என்னுடைய புத்தகங்கள் பதினைந்து வெளிவந்திருக்கின்றன. அப் புத்தகங்களில் புற்றுநோய்க்கு மருந்துகள் எழுதியிருக்கிறேன். மருந்துகள், செய்முறை பற்றியெல்லாம் எழுதியிருக்கிறேன்.

சுமார் 200 புற்று நோயாளிகளை இதுவரை குணப்படுத்தியிருக்கிறேன். நான் 20 வருடங்களாக இந்தப் புற்று நோய்க்காக வைத்தியம் செய்து கொண்டு வருகிறேன். வெளிநாட்டிலிருந்து புற்று நோயாளிகள் நிறையப் பேர் வந்திருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து ஒரு பெண் நோயாளி வந்தார். ஆஷ்லேண்ட் என்ற பகுதியிலிருந்து வந்தார். நியூயார்க்கிலிருந்து சான் பிரான்சிஸ்கோ 2000 மைல்கள் தூரத்தில் உள்ளது. அங்கேயிருந்து 250 மைல் தூரத்தில் இருப்பது ஆஷ்லேண்டு! அங்கேயிருந்து அந்த அம்மா இந்தியாவுக்கு வந்திருக்கிறார்.

அங்கே, ''உனக்கு நுரையீரலில் புற்றுநோய், பிராங்கோஜினிக்கா சினோமா, மூளையிலும் கட்டி பரவியுள்ளது'' என்று முடிவாகக் கூறி விட்டார்கள். மிகப் பெரிய பணக்காரப் பெண் அவர். 'இன்னும் இரண்டே மாதங்கள்தான் உயிருடன் இருப்பாய். சொத்தையெல்லாம் சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ, அப்படிச் செய்து விடு' என்று கூறிவிட்டார்கள். அந்தம்மா பெரிய ஆன்மீகவாதி; பெரிய புத்தகக்கடை ஒன்றை அந்தம்மா நடத்துகிறார். ''வாழ வேண்டுமென்று பிரியமில்லை.

## புற்று நோயிலிருந்து குணமடைந்த சுசீலாதேவி தெரிவித்த தகவல்

**நான் கடலூரில் ஆசிரியையாக வேலை பார்த்தேன். எனக்கு இடது மார்பில் புற்றுநோய் என்று மருத்துவர்கள் கூறினார்கள். எனக்கு ஆப்பரேசன் செய்து, 'கரண்ட்' சிகிச்சையெல்லாம் கொடுத்தார்கள். அதாவது பாண்டிச்சேரியில் 1982ஆம் ஆண்டு இந்தச் சிகிச்சை கொடுத்தார்கள். அதிலே குணம் சரியா இல்லை. அதனாலே 'ஜிப்மர்' மருத்துவ மனைக்குக் கொண்டு போய் 'ரேடியம்' கொடுத்தார்கள். புண்ணாகி ரத்தம் சீழ் எல்லாம் வடிய ஆரம்பித்து விட்டது. அந்தச் சிகிச்சை வேண்டாம் என்று கூறி வந்துவிட்டேன்.**

**வியாதி அதிகமாகப் போச்சு. அப்புறம் டாக்டர் பலராமய்யா முகவரி கிடைத்தது. 1982 மார்ச் மாதம் 21ஆம் தேதி எறும்பூருக்குச் சென்று அவரிடம் ஆலோசனை கேட்டோம். புற்று நோய் மிகவும் முற்றியிருந்ததால் மருத்துவம் செய்வதற்கு முதலில் மறுத்தார். நான் வற்புறுத்திக் கேட்டதால், மருந்து கொடுத்தார். 'இதைச் சாப்பிட்டு 25 நாட்கள் கழித்து, உயிரோட இருந்தா வாங்க' என்று சொன்னார்.**

**அப்புறமும நான் இருந்தேன். 23-ஆவது நாளே வந்து, திரும்பவும் மருந்து கேட்டேன். ரொம்ப சந்தோஷப்பட்டுக் கொண்டு தொடர்ந்து மருந்து கொடுத்துக் கொண்டேயிருந்தார். 1982லிருந்து 1985 வரை மருந்து சாப்பிட்டேன். அதுக்கப்புறம் 'போதும். நிறுத்திடலாம்' என்று ஐயா சொன்னாரு. அப்புறம் கண்ணு கொஞ்சம் தொந்திரவு கொடுத்தது. தொடர்ச்சியாக அவரிடமே மருந்து சாப்பிட்டேன். நல்லபடியாக இருக்கிறேன். ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியத்தில் வாழ்ந்து வருகிறேன்.**

சாவதற்கு நான் தயார். ஆனால் நீங்க மருந்து கொடுங்கள்'' என்றார் அந்த அம்மா. அமெரிக்காவுக்குக் கொண்டு போய் அந்த மருந்தைச் சாப்பிடுவதாகக் கூறினார். நான் 'நீங்கள் மூன்று மாதக் காலத்திற்கு என் பார்வையில் இருந்து மருந்து சாப்பிட வேண்டும் என்று கூறினேன். ஒத்துக் கொண்டார்.

மூன்று மாதமாக ஓட்டலில் தங்கி இருந்தார். 15 நாட்களுக்கு ஒருமுறை அந்தஅம்மாவைப்போய்ப் பார்த்து, மருந்து கொடுத்து விட்டு வந்து விடுவேன். அவருக்கு ஏதாவது பிரச்சினை என்றால் எறும்பூருக்கு வந்து மருந்து வாங்கிக்கொண்டு போவார். மூன்று மாதத்திலே அவருக்கு உடம்பு நன்றாகத் தேறியது. முன்னாடி அந்தம்மாவுக்கு இல்லாது போன ஞாபகச் சக்தியெல்லாம் வந்தது. உடம்பு குணமானது.

அமெரிக்காவுக்கு வர வேண்டுமென்று அழைத்தார். 'வயதாகி விட்டது. என்னால் இயலாது' என்றேன். 'இல்லை, இல்லை; எங்க நாட்டு டாக்டர்கள் எல்லாம், என் வியாதியைக் குணப்படுத்திய அந்த மந்திர சக்தி படைத்த மருத்துவர் யாரென்று பார்க்க வேண்டுமென்கிறார்கள்' என்று கூறி அழைத்துக் கொண்டு போனார். அவரைப் போலவே ஜெர்மனி, ஹாலந்து ஆகிய நாடுகளில் இருந்து வந்து புற்று நோயைக் குணப்படுத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். லண்டனில் இருந்து வந்து, 50 நாட்கள் இங்கு -எறும்பூர் கிராமத்தில் என்னுடன் தங்கி, பெருங்குடலில் புற்றுநோய்க்காக மருத்துவம் செய்து கொண்டு, குணம் அடைந்து போயிருக்கிறார்கள்.

ஆங்கில மருத்துவத்தில் இந்நோய்க்கான முக்கிய காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. புகையிலை, சிகரெட்டு, மதுபானம் இவைகளை உபயோகிப்பதால் பெரும்பாலும் புற்றுநோய் வருகிறது என்று அவர்கள் சொல்வது ஓரளவுக்கு உண்மைதான். என்னுடைய அனுபவத்தில் 75 சதவிகிதம் புகையிலையை வாயில் அடக்குபவர்களுக்கும், சுருட்டு, பீடி, சிகரெட் பிடிப்பவர்களுக்கும், கன்னம், நாக்கு, தொண்டை, உணவுக் குழாய், கல்லீரல், வயிறு, நுரையீரல் முதலிய இடங்களில் புற்றுநோய் தாக்குகின்றது என்பதைக் கண்டறிந்துள்ளேன். மதுபானங்களைக் குடிப்பவர்களுக்குக் கல்லீரலில் புற்றுநோய் தாக்குகிறது. இதோடு அசைவ உணவு உண்பவர்களுக்கும் இந்நோய் தாக்குகிறது என்பதும் என்னுடைய அனுபவத்தில் பார்த்துள்ளேன்.

இவ்விதப் பழக்கங்களினால் இரத்தத்தின் நச்சு நீர் கலந்து உடலெல்லாம் பரவி நமது உடலுறுப்புகளில் எந்த உறுப்பைத் துஷ்பிரயோகம் செய்கிறோமோ அங்கு புற்றுநோய் சுலபமாகத் தாக்குகிறது. நம் உடலில் உள்ள நச்சு நீரை வெளியேற்றக்கூடிய மருந்துகளைப் புற்றுநோயாளிகளுக்குத் தருவதே என்னுடைய அணுகுமுறை.

ஆகவே, இப்பொழுது செய்யும் ஆங்கில மருத்துவத்தில் என்னுடைய அணுகுமுறையையும்பாவித்து அதற்குத் தகுந்த மருந்துகளைக் கண்டுபிடித்து மக்களுக்கு உபயோகப்படுத்தினால் அதுவே பெரிய தொண்டு என்று கருதுகிறேன். இம்மாதிரியான ஆராய்ச்சிகளைச் செய்ய ஆங்கில மருத்துவத்தில் எல்லா வசதிகளும் உள்ளன.



## உலக சுகாதார தினம்



சென்னை மாநகராட்சி 7.4.88 அன்று உலக சுகாதார தினத்தை சூளையில் உள்ள மகப்பேறு நிலையத்தில் கொண்டாடியது. விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய தனி அலுவலர் திரு. எல்.எம். மெனெசெஸ் இ.ஆ.ப. அவர்கள் ''ஆரம்ப காலத்திலேயே தொழுநோய், குருட்டுத் தன்மை இவற்றைக் கண்டுபிடித்து சிகிச்சை அளித்தால் பூரண குணம் கிட்டும் என்றும், சென்னை மாநகராட்சியின் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் தொழுநோய் கண்டுபிடிப்புப் பரிசோதனையும், நோயுற்றவர்க்குச் சிகிச்சையும் வரும் ஜூன் மாதத்திலிருந்து தொடங்கப்படும் என்றும், சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையும் கல்வித் துறையும் இணைந்து இதைச் செய்யும்'' என்றும் குறிப்பிட்டார்.



'எல்லோருக்கும் சுகாதாரம், எல்லாராலும் சுகாதாரம்' என்பதே இந்த ஆண்டுச் சுகாதார தினத்தின் கொள்கை. அதனை விளக்கும், கண்காட்சி ஒன்றும் விழாவை ஒட்டி நடைபெற்றது. சுற்றுப்புறச் சுகாதாரம், தடுப்பூசிகளின் பயன், திறந்தவெளியில் மலம், நீர் கழிப்பதால் பேதி, சீதபேதி, காலரா, குடற்புழு, இளம் பிள்ளைவாதம் முதலிய நோய்கள் பரவும் என்பதையும் விளக்கும் வகையில் - தாய்ப்பாலின் இன்றியமையாமையை வலியுறுத்தும் வகையில் கண்காட்சி அமைந்திருந்தது.

கொழு கொழு குழந்தைகள் போட்டியில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்கு, திரு மெனெசெஸ் பரிசுகளை வழங்கினார். மொட்டத் தோட்டத்தைச் சேர்ந்த புருசோத்தமன், மணிமேகலை தம்பதிகளின் குழந்தை வினோத் முதல் பரிசும், ஸ்டான்லி நகரைச் சேர்ந்த பரசுராமன் கங்கம்மா தம்பதிகளின் குழந்தை சுனில்குமார் இரண்டாம் பரிசும், வியாசர்பாடியைச் சேர்ந்த கோபி குமாரி தம்பதிகளின் குழந்தை ராஜேஷ் மூன்றாம் பரிசும் பெற்றனர்.

முன்னதாக அனைவரையும் வரவேற்றுப் பேசிய சுகாதார அலுவலர் டாக்டர் சுவாமிநாதன் மாநகராட்சியின் நலப்பணிகளை விளக்கி, மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை 1985-ஆம் ஆண்டு இருந்ததைவிட இப்போது 48 சதவிகிதம் குறைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

விழாவில் கலந்துகொண்டு பேசிய ஆணையர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப, அவர்கள் குழந்தைகளை நோயிலிருந்து பாதுகாக்கத் தடுப்பூசிகள் போடப்பட வேண்டும் என்றும், சத்துணவைக் கீரை, காய்கறிகளிலிருந்து எளிதில் பெறலாம் என்று கூறியதோடு, தாய்ப்பாலின் சிறப்பையும் வலியுறுத்திப் பேசினார்.

மாநகராட்சிக் கூடுதல் சுகாதார அலுவலர் டாக்டர் திருமதி எலிசா பெஞ்சமின் நன்றியுரை கூறினார்.

# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!




**லைப்பாய்**

**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது**

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM

## நீலகிரி மாவட்டத்தில

# மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்



நம்நாடு முழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 மாவட்டங்களில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இந்தத்திட்டம் நீலகிரி மாவட்டத்துல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் முழுவதும் மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் இத்திட்டம் மிகப்பெரிய வளாச்சியை அடைந்துள்ளது.

இயற்கை வளத்தையும் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் பேணிக் காத்து, அவற்றிற்கு ஏற்பட்டுள்ள கேடுகளை நிவர்த்தி செய்வதே இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாகும். இரண்டாவதாக, சமூக பொருளாதார வளர்ச்சி இத்திட்டத்தின் முக்கியப் பகுதியாகும். தொடக்கக் காலத்திலிருந்தே இத்திட்டம் பல துறைகளின் ஒத்துழைப்போடு செயல்படுத்தப்பட வேண்டிய திட்டமாக உருவாக்கப்பட்டது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

1. நிரந்தரமான பசுமைப் பரப்பளவை அதிகப்படுத்துதல்.

2. நிலத்தின் தன்மையையும் அதனைப் பயன்படுத்தும் விதத்தையும் ஒருங்கிணைத்தல்.

3. நிலத்துக்குத் தக்கபடி மண்வளப் பாதுகாப்பு முறைகளோடு கூடிய நவீன வேளாண்மை முறைகளைக் கையாளுதல்.

4. தனி நபர் அல்லது துறைவாரியாக அணுகுமுறைகளைத் தவிர்த்து நீர்ப்பிடிப்புப் பகுதியை (மைக்ரோ வாட்டர்ஷெட்) அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையைக் கையாளுதல்.

5. இயற்கை வளத்தில் குறிப்பாக காடுகளில் மனித இனத்தின் தலையீட்டை வரன் முறைப்படுத்துதல்.

1983-84ஆம் ஆண்டு வரை மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம், துறைவாரியாக அணுகப்பட்டுச் செயலாக்கப்பட்டு வந்தது. ஆனால் 1984-85ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் அடிப்படையில் செயலாக்கப்பட்டு வருகிறது.

**கேத்திப் பள்ளத்தாக்கில்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களில் மனதைக் கவரும் முக்கிய திட்டம் மண்வளப் பாதுகாப்புத் திட்டமாகும்.

நீலகிரி மாவட்டத்தில் கேத்திப் பள்ளத்தாக்குப் பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

பள்ளத்தாக்குப் பகுதிகளில் அடுக்கு அடுக்காகப் பயிர்ச் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுப் பயிர்களான காய்கறிகள் சாகுபடி செய்யப்படும்பொழுது, பெய்யும் மழையினால் மண் அரிப்பு ஏற்படுகிறது. இதைத் தவிர்த்திட, ஆண்டுப் பயிர்களைக் கைவிட்டுவிட்டு, தேயிலை போன்றவைகள் பயிரிட்டு வளர்க்

கப்படுவதால் மண்சரிவு தடுக்கப்படுகிறது. பழமரங்களும் நடப்படுகின்றன.

இதற்காக மிகுவிளைச்சல் தரும் தேயிலை வி.பி. குளோன்கள் உற்பத்தி செய்யப்பட்டு, குறைந்த விலைக்குச் சிறுவிவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. செயற்கை உரங்களும் குறைந்த விலைக்கு வழங்கப்படுகின்றன.

நீர்ப்பிடிப்புப் பகுதிகளைச் சர்வே செய்து, நிலச்சரிவுப் பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகளாக, வேளாண்மைப் பொறியியல் துறையினர் பல பணிகளைச் செய்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் உயிருக்கும் உடைமைக்கும் சேதம் ஏற்படும் வகையில் பல நிலச் சரிவுகள் 1978-ஆம் ஆண்டிலும் 1979-ஆம் ஆண்டிலும் நிகழ்ந்தன. இவற்றைத் தடுக்க, தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் மிக முக்கியமான 29 நிலச்சரிவுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின் மீது தக்க நடவடிக்கைப் பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறையினரும், நெடுஞ்சாலைத்துறையினரும், வனத்துறையினரும் மேற்கொண்டுள்ளனர்.

**காட்டுக்கு வேலி**

''கடலுக்கு அணைகட்ட முடியுமா? காட்டுக்கு வேலி போட முடியுமா?'' என்று கேட்பது பழைய காலத்துக் கேள்வி.

இப்பொழுது உதகமண்டலத்துக்குச் செல்வோர் காட்டுக்கு வேலி போட்டிருக்கும் காட்சிகளைக் காண முடியும்.

ஊர்ப்பகுதிகளை ஒட்டியுள்ள காடுகளை நம்மக்கள் 'சோலை' என்று அழைத்தனர். அந்த இயற்கைக் காடுகளை ''ஷோலோ' என்று ஆங்கிலேயர் அழைத்தனர். இயற்கையான தாவரங்கள் மிகுந்து காணப்படும் இந்தச் ''சோலை''களை எரிபொருளுக்காக மக்கள் அழித்தது உண்டு. அந்தச் சோலையில் இப்பொழுது யாரும் புகமுடியாது. ''ஷோலோ'' எதிலும் பனிதர்கள் புகமுடியாதவாறு, கம்பி வேலிகள் போடப்பட்டுள்ளன.

அந்தப்பகுதியில் இயற்கையாக வளரும் தாவர இனங்கள் தங்கு தடையின்றி வளரமுடியும். அந்த இயற்கைச் சூழலில் வன உயிரினங்கள் வாழவும் வசதி ஏற்பட்டுள்ளது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு இது உதவியாகவும் அமைந்துள்ளது.

**ஏரிக்கரையில் மான்பூங்கா**

உதகை ஏரிக்கரையில் ஒரு புறத்தில் மான்பூங்கா அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 2200 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்தப் பூங்கா, கீழே 5 ஏக்கர் பரப்பளவிலும், மேலே 22 ஏக்கர் பரப்பளவிலும் அமைந்துள்ளது.

முதலில் இந்தக் குளிர்ப்பகுதியில் மான் உயிர்வாழுமா என்ற ஐயப்பாடும் இருந்ததாம். இப்பொழுது 9 கடமான்கள், 13 புள்ளிமான்கள், கிளை ஆடு ஒன்றும் உள்ளன. ஏராளமான முயல்குட்டிகளும் உள்ளன. மைசூர் உயிரியல் பூங்காவிலிருந்து ஐந்து ஐரோப்பிய மான்கள் இப்பூங்காவுக்கு விரைவில் கொண்டு வரப்படும்.

ஏரியில் படகில் செல்லும் சுற்றுலாப்பயணிகள் மான்கூட்டங்கள் ஆங்காங்கே நிற்பதைக் கரையோரமாகப் படகிலிருந்தவாறு இப்பொழுது கண்டுகளிக்கின்றனர். ஏரியில் பத்து பெரிய வெள்ளை வாத்துக்களையும் விடப் போகிறார்கள்.

ஏரியில் ஒரு பகுதி மண்மேடிட்டு இருப்பதை அகழ்ந்து, எல்லா இடங்களும் ஆழமாக அமையத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏரியின் ஓரங்களில் மரங்களை வளர்க்கும் பணியும் ஊர்க்காவல் படையினரின் உதவியுடன் நடைபெற்று வருகிறது.

**வனங்கள் பாதுகாப்பு**

காடுகள் முழுவதும் அழிந்துவிட்ட பகுதிகளில் மீண்டும் காடுகளை அமைத்திடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காடுகளை ஒட்டியுள்ள பகுதிகளில் உள்ள பட்டா நிலமுடையோர்கள் வனப் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்வதைத் தடுக்க, வன எல்லைகளில் 'கெய்ர்ன்' எனப்படும் அடையாளக் கற்கள் நடப்பட்டுள்ளன.





காடுகளில் எல்லாப் பருவங்களிலும் வனவிலங்குகளுக்கு நீர் கிடைக்க ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. கருங்காலி மரவகைகளுக்கான பாதுகாப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள 33 முக்கியச் சாலைகள் ஏறத்தாழ எட்டுக்கோடி ரூபாய் செலவில் சீர் செய்யப்படும்.

தற்பொழுது உதகை நகராட்சிக்குப் பார்சன் பள்ளத்தாக்கு அணையிலிருந்து நீர் கொண்டு வரப்படும் ஐந்துகோடி ரூபாய்த் திட்டத்திற்கு, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ஒன்றரைக் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து பால்வள வளர்ச்சிக்காக இதுவரை 3.55 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.


குறிஞ்சி நகரமான உதகைக்கு எழிலூட்டும் இடங்களில் ஒன்று உதகை ஏரி. இந்த ஏரி பல்வேறு கழிவு நீர்களால் அசுத்தமாகியுள்ளது. எனவே ஏரியைச் சுத்தமாக்கும் பணிக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 18.91 கோடிக்கு ஒரு பெருந்திட்டத்தை வகுத்துள்ளது. இதில் ஒரு பகுதி இப்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திறந்தவெளி விளையாட்டு அரங்கம் ஒன்றும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 77 இலட்சம் செலவில் பிரீக்ஸ் பள்ளி விளையாட்டுத்திடலில் கட்டப்படவிருக்கிறது.

பல்வேறு கட்டடங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் இயற்கை வனப்புக்கும் பேருதவி செய்யும் திட்டமாக அமைந்துள்ளது.


—மாமுலன்





19.4.88 அன்று ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் சித்து அவர்கள் சென்னைக் கடற்கரையில் உள்ள மறைந்த முதல்வர் பாரத ரத்னா எம்.ஜி.ஆர் அவர்களின் சமாதியை அழகுபடுத்துவது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியபோது எம்.ஜி.ஆர் அவர்களின் சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# படமும் செய்தியும்



சர்.பிட்டி தியாகராயரின் 137வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள அவருடைய சிலைக்கு அரசின் சார்பில் ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி.ராமகிருஷ்ணா இ.ஆ.ப. 27-4-88 அன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



# மக்கள் தொடர்பு- மகத்தான கலை

சி.என். ராம்தால், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்-செயலர்,
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை.

**"மக்கள் தொடர்புப் பணிக்கு நாட்டில் மகத்தான எதிர்காலம் இருக்கிறது"**

மக்கள் தொடர்பு என்பது மகத்தானதொரு கலையாகும். இக்கலையில் ஒருவர் எளிதில் தேர்ச்சி பெற்றுவிட முடியாது. ஆர்வமும், முயற்சியும், பயிற்சியும், அனுபவமும், மக்கள் நலனில் அக்கறையும் மிக முக்கியம்.

எல்லாக் கலைகளுமே இன்று ஏகமாக வளர்ந்திருக்கின்றன. எதையெடுத்தாலும் அதில் சிறப்புத்தன்மை - தனித்தன்மை மிளிர்வதைப் பார்க்கிறோம்.

ஒருவர் இருதயநோய் என்று டாக்டரிடம் சென்றார். இருதயத்திற்குச் செல்லும் இரத்தக் குழாயில் கோளாறு; இருதய நோய்களில் சிறப்புத் தன்மை பெற்ற மருத்துவர்தான் அவர்.

''நீங்கள் இங்கே வந்திருக்கக் கூடாது......'' என்றார் டாக்டர்.

நோயாளிக்கு விளங்கவில்லை.

''நீங்கள் இருதய வைத்தியம் பார்க்கும் டாக்டர்தானே?' என்று கேட்டார்.

''ஆமாம். ஆனால் உங்களுக்கு இடப்பக்க இருதயத்தில்தான் கோளாறு இருக்கிறது. அதற்கு அந்த டாக்டரிடம்தான் போக வேண்டும். நான் வலப்பக்க இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களில்தான் ஸ்பெஷலிஸ்ட்.''

எந்தத்துறையிலும், எந்தக் கலையிலும் சிறப்புத்தன்மை வளர்ந்திருப்பதை இப்படி வேடிக்கையாகச் சொல்வார்கள். இந்த வகையில், எது ஒருவரைச் சிறந்த மக்கள் தொடர்பாளராக ஆக்கும் என்று நாம் சிந்தித்துப் பார்த்தால்,

கல்வியறிவு,
கடின உழைப்பு,
தன்னைமுற்றிலும்தயார்படுத்திக் கொள்வது,
தெய்வத்தின் அருள்.

என்று சில முக்கியமான அம்சங்கள் நம் கவனத்துக்கு வரும்.

ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி, விற்பனை, நிர்வாகம் எனப் பல பிரிவுகள் இருக்கின்றன. இவற்றில் மக்கள் தொடர்புப் பிரிவும் முக்கியமானது. இந்த மக்கள் தொடர்பு நுட்பமானதாகவும், நாசுக்கானதாகவும், சிரமம் மிக்கதாகவும் திகழ்கிறது.

ஒரு பொருளுக்கு ஒரு புகழுருவைக் கொடுத்து, அதே போன்ற மற்றப் பொருள்களிலிருந்து அது தனித்து நிற்கவும், மக்கள் மத்தியில் சிறப்பும் செல்வாக்கும் பெறவும் மக்கள் தொடர்பு மகத்தான பங்காற்றுகிறது. மக்கள் கவனத்தைத் தொட்டுவிட்டு, திருப்பி விட்டு ஓடுகிறது. மக்கள் அதில் ஈடுபாடு காட்ட வழி செய்து விடுகிறது.

தயாரிப்பாளர்கள் - நுகர்வோர்; முதலாளிகள் - தொழிலாளிகள் - பொதுமக்கள்; அரசு-மக்கள் என்று இப்படிச் சகல தரப்பாரிடையேயும் நல்லெண்ணத் தூதுவர்களாகச் செயல்படும் கேந்திர ஸ்தானம் மக்கள்தொடர்பு அலுவலர்களுக்குக் கிடைத்திருக்கிறது. பிரச்சினைகள் என்ன? தேவைகள் என்ன? செய்ய வேண்டியது என்ன? செய்வது எப்படி? என்று சிந்தித்துச் சாதுரியமாகச் செயல்படும்பொழுது சாதனை தானாகவே வந்து சேர்ந்து விடும்.



மக்கள் தொடர்பு என்பது சமூக உறவை மட்டுமல்ல, ஒருவருக் கொருவர் சுமுக உறவையும் வளர்ப்பதாகும்.

இன்றைக்கு ஒருவரை மக்கள் தொடர்புப் பணியில் தகுதியுடைய யவராக்க இருக்கின்ற கல்வியறிவு-பயிற்சி வசதிகள் போதுமானவை யல்ல, அரசாங்கத்தில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்குப்பட்ட மும், 5 ஆண்டு பத்திரிகை அனுபவ மும் வைத்திருக்கிறார்கள். ஆனால் மக்கள் தொடர்புப் பட்டம் அடிப் படைத் தகுதியாக இருக்க வேண் டும். இதற்குத் தமிழ்நாடு அரசு இப்பொழுது ஒரு நல்ல முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. சென்னை அடையாற்றிலுள்ள தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரியில் மக்கள் தொடர்புப் பயிற்சி நிலை யம் 1988 ஜூன் மாதத்திலிருந்து செயல்படத் தொடங்கும். இரண் டாண்டுப் படிப்பு - நான்கு செமஸ் டர்கள் உத்தேசிக்கப்பட்டிருக்கின் றன.

ஒரு பொருளுக்கு - ஒரு கருத் துக்கு - ஒரு இயக்கத்திற்கு மக்க ளிடையே ஒரு புகழுருவையும், ஈடு பாட்டையும், ஆதரவையும் உரு வாக்குவதே மக்கள் தொடர்பாள ரின் முக்கியப் பணியாக இருப்ப தால், அவரிடம் மக்களுக்கு 'நம்பகத் தன்மை' இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கு அடிப் படையாக, மக்கள் தொடர்பு அலு வலர்களுக்கு நல்ல அந்தஸ்தும், நல்ல பதவிப் பெயரும் அமைந் திருக்க வேண்டும்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையில் ஒவ்வொரு மாவட்டத்தி லும், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் மாவட்ட ஆட்சியாளரின் தலைமை, வழிகாட்டலின் கீழே இயங்குகிறார்கள். மாவட்ட ஆட்சி யாளருக்கு நேர்முக உதவியாளர் (பொது), நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) என்று இருப்பது போல், செய்தி-மக்கள் தொடர்பு அலுவல ருக்கு, நேர்முக உதவியாளர் (செய்தி-மக்கள் தொடர்பு) என்று பெயர் மாற்றம் செய்வது பற்றி யோசனை



தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப் பொழுது இந்தப் பதவிக்கு இன்னும் அதிக அந்தஸ்தும், அங்கீகாரமும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது.

மக்கள் தொடர்பாளர்கள் எல் லாத் துறையோடும், எல்லாத் தரப்பாரோடும் கலந்து பழகவும்,




கருத்துக்களைக் கேட்டறியவும், ஒருமித்து இணக்கமாகச் செயல் படவும் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். ஒதுங்குவதோ ஒதுக்குவதோ கூடாது. எந்தப் பிரச்சினையையும் ஆக்கப்பூர்வ மாகவே அணுக வேண்டும்.

இதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்லலாம். ஒரு டம்ளரில் பாதி யளவு தண்ணீர் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதை இரண்டு விதமாக விமரிசிக்கலாம்.

'டம்ளரில் பாதியளவு தண்ணீர் இருக்கிறது.''

''டம்ளரில் பாதியளவு காலி யாக இருக்கிறது.''

இரண்டு கருத்துக்களுமே, மேற் போக்காகப் பார்க்கும்பொழுது சரி தான். ஆனால் இந்த இரண்டில் எது கேட்போரிடம் ஒரு 'தாக் கத்தை' உண்டாக்குகிறது? ஆக்கப் பூர்வமான நோக்கத்தை வெளிப் படுத்துகிறது? 'டம்ளரில் பாதியளவு தண்ணீர் இருக்கிறது' என்பது தானே! இதைத்தான் மக்கள் தொடர்பாளர்கள் பேச வேண்டும். எதிர்மறைப் பொருளையும், எதிர் மறை விளைவையும் ஏற்படுத்தக் கூடிய, 'டம்ளரில் பாதியளவு காலி யாக இருக்கிறது'' என்பதுபோன்ற வாசகங்களை - கருத்துக்களைச் சொல்லக் கூடாது.

நாட்டில் மக்கள் தொடர்புப் பணிக்கு மகத்தான எதிர்காலம் இருக்கிறது. தொழில்களும் நிறு வனங்களும் பெருக அரசு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கிறது. உரிமங்கள் வழங்குவது தாராளமாக்கப்பட்டி ருக்கிறது; கட்டுப்பாடுகள் பல தளர்த்தப்பட்டுள்ளன; நீக்கப்பட் டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் மக்கள் தொடர்பாளர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கும் நாட்டின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கும் மக்களின் நலச்செழிப்புக்கும் சிறப் பாகப் பணியாற்ற முடியும்.

(மக்கள் தொடர்பு அமைப்பின் சார்பில் 21-4-88 அன்று சென்னை யில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்)



# சென்னை வானொலியில் முக்கிய நிகழ்ச்சிகள்

1-5-'88— (ஞாயிறு)
சென்னை-1
(416.7 மீ. 720 கி.ஹெ.)

காலை :
8.30— அரங்கிசை—
ஜி.என். பாலசுப்பிர
மணியம்— பாட்டு

10.00— பௌத்தம் போற்றிய பெண்
தெய்வங்கள்— டாக்டர்
அரங்கராமலிங்கம்-பேச்சு.

இரவு:
10.30— உமா பிரபாகரன், கீதா
ராமசுப்பிரமணியன்—
பஜன்.

2-5-'88 (திங்கள்)
சென்னை-1.

காலை :
8.00— எழுத்துலகில்
கோவி. மணிசேகரன்—
நேர்முகம்.

8.30— சுவாதித்திருநாள்—
ஜெயந்தி.

இரவு :
8.00— எங்கோ போகும் ரயில்—
நாடகம்.

3—5—'88-(செவ்வாய்)
சென்னை-1.

காலை :
8.30— அரங்கிசை—
டி.பி. வைத்யநாதன்.

12.05— ஜி.என். ராஜகோகிலம்—
பாட்டு.

இரவு :
10.00— அறிவியல் அருவி

10.30— சர்தார் ஆசாத் குழுவினர்
— கவாலி

11.06— ஸ்ரீவாஞ்சியம் ராமச்சந்திர
ஐயர்— பாட்டு

4—5—88 (புதன்கிழமை)
சென்னை-1.

காலை :
8.30— அரங்கிசை— சரோஜா
சுந்தரராஜன்— பாட்டு

மாலை :
5.00— சி. கே. ராமச்சந்திரன்—
பாட்டு.
8.00— 'ஞானசிலன்'— நாடகம்

8.30— கவிதைப்பூங்கா—
புலமைப்பித்தன்

9.16— ஓ.எஸ். தியாகராஜன்—
பாட்டு.

5— 5— 88 (வியாழன்)
சென்னை— 1.

காலை :
8.30— டி. ருக்மினி— வயலின்

12.05— தோஷீதர்— பாட்டு

2.15— நங்கநல்லூர் ராமநாதன்
— பாட்டு

இரவு :
8.45— முட்டுக்கட்டைகள்—
டி. கே. சந்திரசேகரன்—
பேச்சு.

6— 5— '88—(வெள்ளி)
சென்னை— 1.

இரவு
8.00—'யார்வீட்டு ரோஜா'—
மேடை நாடகம்

8.30—நெஞ்சில் நிலைத்தது—
டாக்டர் எம். பாலமுரளி
கிருஷ்ணா—நேர்முகம்

11.35—ஹரி ஓம் ஷரன் நந்தினி
ஷரன்—கஜல்

7—5—'88 (சனி)
சென்னை—1.

காலை :
8.30—டி. கே. ஜெயராமன்—
பாட்டு.

12.05—ஏ. சுப்பையா—
வயோலா

1.05—ஜெயமாதங்கி,
விஸ்வநாதன்—பக்திப்
பாடல்கள்.

3 10—ரகுரவி—புல்லாங்குழல்

இரவு:
8.10—சிந்தனை அரங்கம்-'தீரர்
சத்யமூர்த்தி'—
கலந்துரையாடல்

9.30—அகிலபாரத சங்கீதம்—
சத்யகாந்த கலாட்கள்—
சுந்திரி.

8—5— '88—(ஞாயிறு)
சென்னை—1.

காலை :
8.30— அரங்கிசை—சிக்கில்
வி. குஞ்சுமணி & நீலா—
புல்லாங்குழல்.

10.00—இசைப்பெட்டகம்—
சுமணிசங்கரசாஸ்திரி—
வீணை.

3.30—'நாகநந்தினி'—நாடகம்—
வே. கபிலன்

மாலை :
5.00—பாலக்காடு—
வி. ஏ. சுந்தரம்—பாட்டு

9.16 ராதா ஜெயலட்சுமி—
பாட்டு

9—5—88—(திங்கள்)
சென்னை— 1.

இரவு :
9.30—நிலாமுற்றம்

11.05—எம். கோபாலகிருஷ்ணன்
—வயலின்

10— 5— '88 (செவ்வாய்)
சென்னை— 1.

காலை :
8.30—லலிதாசேஷாத்திரி—
பாட்டு

12.05— ஆர். பட்டம்மாள்-வீணை

இரவு :

9.30— திருமுருகாற்றுப்படை —
டாக்டர் எம். ஏ. துரை
அரங்கசாமி— இலக்கியப்
பேருரை.

11— 5— '88— (புதன்)
சென்னை— 1.

காலை:
8.30— அரங்கிசை— நெதுநூர்
கிருஷ்ணமூர்த்தி— பாட்டு

மாலை
5.00— எம். நீலகண்ட ஐயர்—
பாட்டு

8.30— சங்கப்பலகை—
என். கண்ணன்— பேச்சு

9.16— சீதாசுப்பிரமணியம்—
பாட்டு

12— 5— '88(செவ்வாய்)
சென்னை— 1.

காலை : 8.30—
அரங்கிசை— பத்மாநாராயண
சாமி

12.05— மதுரை பாலசுப்பிர
மணியன்— வயலின்

2.15— தேவிகாபுரம் டி. ஜி.ரத்னம்
— நாகஸ்வரம்

இரவு :
8.45— எடைகள்— அளவுகள்—
ஆர். செல்லத்துரை—
பேச்சு.

10.00— அரங்கிசை— ஏ.முத்தையா
— வீணை

11.05— லயவிந்யாசம்— பி.ஆர்.
எம். வெங்கடேசன் &
பள்ளிகொண்டா பி. ஜி.
சுப்ரமணியம்— தவில் .

13— 5— '88 (வெள்ளி)
(சென்னை— 1)

காலை :

7.45— 'உறவுக்கப்பால்'—
தொடர் நாடகம்

8.30— சேஷாம்பட்டி சிவலிங்கம்
நாகஸ்வரம்

இரவு :

8.30— சங்கப்பலகை— பழ.பழனி
யப்பன்— பேச்சு.

9.30— தேவாரப் பண்— இசைப்
பயிற்சி.

10.00 தென்மண்டல கர்நாடக
அரங்கிசை— எஸ்.சிதா
ராமன்— பாட்டு

14—5—'88 (சனி)
சென்னை— 2.

காலை :

6.30—சி. சரோஜா& சி.லலிதா
—பாட்டு

12.05—சி. என். ராஜலட்சுமி—
பாட்டு

1.05—கீதாராஜா—பாட்டு

3.10—எம். கே. எஸ். நடராஜன்
—நாகஸ்வரம்

இரவு:

8.00—'நிலாமகள்'—நாடகம்

8.30—நூலேணி—நூல் மதிப்புரை
—'மகரம்'

9.30—அகிலபாரத சங்கீதம்—
பத்மஜாசீனிவாசன்—
பாட்டு

15— 5— '88—(ஞாயிறு)
சென்னை—1.

காலை :

8.30—கே.பி. சிவானந்தம்
சாரதா சிவானந்தம்—
வீணை.

மாலை :

5.00—நீலா வைத்யநாதன் குழு
வினர்—பக்திப்பாடல்கள்

இரவு :

9.16—ஈ. காயத்திரி—வீணை

10.30—எம். ஜனார்த்தன்—சிதார்

## குழந்தைகளை ஒற்றுமையாக வளர்ப்பது எப்படி?

ஆசிரியர்: டாக்டர் மு.முத்துக்காளத்தி,
டாக்டர் சிவ அரசிமுத்துக்காளத்தி,

விற்பனை உரிமை: பாரிநிலையம்,
184, பிராட்வே, சென்னை-600108

விலை: ரூ.10 பக்கம்: 92

குழந்தை வளர்ப்பு என்பது வார்த்தைகளைப் பொறுத்த அளவில் எளிமைதான். ஆனால் குழந்தைகளை வளர்ப்பது - அதிலும் அவர்களை ஒற்றுமை உணர்வுடன் வளர்ப்பது இமாலயப்பணி. இந்தப் பணி எளியது என்று எண்ணும் வகையில்-பெற்றோர்களின் பொறுப்பை எடுத்துக்கூறுவதுடன், குழந்தைகளை நல்ல குடிமக்களாக வளர்ப்பதற்குரிய வழிவகைகளை உள இயல் பாங்குடன் நூலாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

'போட்டி உணர்வுகளை நம்முடைய குழந்தைகள் வெளியுலகத்திற்குப் போயே கற்றுக் கொள்ளட்டும்; வீட்டுக்குள்ளேயே வேண்டாம்' என்று நூலாசிரியர்கள் குறிப்பிடும் கருத்து பொன்மொழிபோல் திகழ்கிறது. எளிய இனிய நடை நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

## கேளிக்கை வரிச் சட்டங்கள்

ஆக்கியோர்: மணிமேகலைப் பிரசுர
ஆசிரியர் குழு.

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்
4, தணிகாசலம் ரோடு, தியாக
ராய நகர். சென்னை-17.

விலை ரூ. 10 பக்கம் 132

பொதுவாக திரைப்படக் காட்சிக்கு விதிக்கப்படும் வரிதான் கேளிக்கை வரி என்று சொல்லப்படுகிறது. 40 ஆண்டுகளுக்கு மேலாக நமது நாட்டில் இருந்து வரும் கேளிக்கை வரிச் சட்டம் குறித்துப் பல்வேறு அரிய தகவல்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

அவ்வப்போது சட்டத்தில் செய்யப்பெற்ற மாறுதல்களும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கேளிக்கைக்கு விதிக்கப்படும் வரி விகிதம் என்ன? எதற்கு வரி விலக்கு தரப்படுகிறது? வரிவசூலிக்கும் அதிகாரியின் சிறப்பு அதிகாரங்கள் யாவை? இப்படி,கேளிக்கை தொடர்பான எண்ணற்ற வினாக்களுக்கு விடையாக இந்நூல் திகழ்கிறது.

—எஸ்.எஸ்.சுந்தரம்

# நூல் நயம்

## நீலம் என்பது நிறம் அல்ல!

ஆசிரியர்: வலம்புரிஜான்

வெளியீடு: ஜம்ஜம் பப்ளிகேஷன்ஸ்
6, முதல்தெரு, சக்தி நகர்,
சூளைமேடு, சென்னை-94.

விலை:18 பக்கம்:184

புதுக் கவிதை என்று நாமகரணம் சூட்டப்பட்ட வசன கவிதைகளின் தொகுப்பு இந்நூல். தலைப்புகளிலும்கூட, கவிதை மணம் கமழ்கிறது; புதிய சிந்தனை முகிழ்க்கிறது.

சமூகப் பிரச்சினைகள், சமுதாயச் சிந்தனைகள், அபலைப் பெண்கள் அவல வாழ்வு இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேனாவை ஓடவிட்டு 'உரை நடனத்'தை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

ஒவ்வொரு கவிதையிலும் அவரது வாதத் திறமை, நாதம் எழுப்புகிறது. எழுத்துத் திறமை வாழ்த்த வைக்கிறது. சமத்காரம் கொலுவோச்சுகிறது. சங்கீத அலை துள்ளி எழுகிறது. சிறுசிறு துண்டுக் கவிதைகளும் வியப்பைத் தூண்டும் கவிதைகளாக வண்ணம் பெற்றுள்ளன.

'அம்மா' என்னும் கவிதை அற்புதம். அடிமைப்பட்ட ஒருநாட்டை மீட்பதற்கு அருந்தொண்டு புரியும் புரட்சிப் பாவலன் ஒருவனின் வைகறைக் கவிதை போலத் தொடங்கி-பழைய பாச உணர்வுகளின் வரைபடம் போல முடிந்து, நெஞ்சத்தில் நினைவுக் கோலத்தைப் பதித்து விடுகிறது.

இந்நூலை ஒருமுறை படிக்கலாம்; இருமுறை படிக்கலாம்; பலமுறை படிக்கலாம். தெவிட்டாது.

தமிழ்ப்பித்தன்



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

Licence No. TN/MS(C)/PP-23



1930ஆம் ஆண்டு வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட தியாகிகள் சிலருடன் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் ஆகியோர்.
(13.4.88 — திருச்சி)



வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக நினைவுப் புனிதப் பயணக் குழுவினர் 13.4.88 அன்று திருச்சியிலிருந்து பயணத்தைத் தொடங்கியபோது, மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் வாழ்த்தி வழி அனுப்பினார்.